திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

CONNEMARA PUBLIC LIBRARY
3 - JAN 1962
MADRAS



வைகுண்ட நாதர்

இராமசாமி கோயில்—கும்பகோணம்

மாலை 4] பிலவ மார்கழி [மணி 4

ஜனவரி 1962

சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்புத் துறை வெளியீடு.



திருக்கோட்டியூர்—சௌமிய நாராயணப்பெருமாள் கோயில் விமானம்,
இராமானுஜர் அஷ்டாட்சரம் போதித்த இடம்

சிறப்பு மலர்

1962 ஜனவரி

பொருளடக்கம்

1. திருப்பல்லாண்டு
2. திருக்கண்ணபுரம்
3. திருஞானசம்பந்தர் அருளிய முதற் திருமுறை
4. திருநாவுக்கரசு நாயனுர்
5. திருமருகல்
6. திருச்செங்காட்டங்குடி
7. சமய உணர்வே வாழ்வின் அடிப்படை
8. ஒலிக்குஞ்சோரன்
9. திருவெண்ணெய் நல்லூர்க் கல்வெட்டுக்கள்
10. திருவாஞ்சியம்
11. சிவஞானபோதம்
12. மலைநாட்டுத் திருப்பதியநுபவம்
13. ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை
14. சைவசமய அறிமுகம்
15. மூன்றுண்டுத் திருக்கோயில் இதழ்களின் பொருளடக்கம்

3 - JAN 1962
MADRAS

அஷ்டதசபுஜ மகாலட்சுமி துர்க்காதேவி
தருமபுரம்

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 4] பிலவ மார்கழி - ஜனவரி 1962 [மணி 4

திருப்பல்லாண்டு

இது திவ்யப் பிரபந்தத்தின் முதலாயிரப் பகுதியைச் சேர்ந்தது; பெரியாழ்வார் அருளிச்செய்தது. இதில் 12 பாசுரங்கள் உள்ளன. ஒவ்வொரு பாசுரத்திலும் "பல்லாண்டு பல்லாண்டு" என்று சொல்லி மங்களாசாஸநம் செய்திருப்பதால் அதனையே நிரூபகமாக்கிப் "பல்லாண்டு" என்று திருநாமம் சாத்தப்பெற்றது இப்பிரபந்தம்.

மதுரைக் கதிபதியாகிய வல்லபதேவன் என்ற பாண்டிய அரசனது புலவர் குழாத்திலே சென்று, தான் யாதொரு குருவினிடத்தும் கல்வி கற்காதிருந்தும் பரதத்துவ நிர்ணயத்திற்கு வேண்டிய வேதங்கள் கூறும் அனைத்தையும் எடுத்துரைத்து வெற்றியுடன் அவ்வரசன் ஏற்படுத்தியிருந்த பொற்கிழியை அறுத்தெடுத்துக் கொண்ட பிறகு அரசன் அவரை யானையின்மேல் ஏற்றி வீதியுலா வருகையில் அத்திருக் காட்சியைக் கண்டு இன்பம் உறுதற்காக ஸ்ரீவைகுண்டநாதன் பரிவாரத்துடன் தோன்றி பெரியாழ்வாருக்கு எதிரில் காட்சியருளினார். இக்காட்சியைக் கண்டவுடன் ஆழ்வார் "இத்தகு கோலம் பூண்ட எம்பெருமானுக்கு இப்பூவுலகிலே யாரால் என்ன தீமை விளையுமோ" என்று அஞ்சி அப்பெருமான் மீதுள்ள பரிவு மேலிட்டு இப்பாசுரம் அருளிச் செய்தார் என்பது வரலாறு.

1\. பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா உன்
சேவடி செவ்வி திருக்காப்பு.

2\. அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி
யாயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வலமார்பினில் வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதிவலத்துறையும்
சுடராழியும் பல்லாண்டு
படைபோர்புக்கு முழங்கும்
அப்பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே.

இவற்றுள் முதல் பாசுரத்தில் பெரியாழ்வாருக்கு எதிரில் மேல் சொன்ன சந்தர்ப்பத்தில் நிகழ்ந்த ஒரு காட்சி குறிக்கப்பட்டிருக்கிறது. தனக்கு என்ன குறை நேர்ந்துவிடுமோ என்று அஞ்சிய ஆழ்வாரைக்கண்டு எம்பெருமான் தான் கிருஷ்ணாவதார காலத்தில் கம்சனால் ஏவப்பட்ட சாணூரன், முஷ்டிகன் முதலிய மல்லர்களை அழிக்க உதவிய தனது தோள் வலியைக்காட்டினார். இதைக் கண்டதும் ஆழ்வாருக்கு அச்சம் முன்னைக்காட்டிலும் அதிகமாய் உண்டாயிற்று. பகவானுக்குத் தோள்வலி அதிகமாய் ஏற்பட்டிருந்ததின் காரணமாக அவர் பகைவன் எத்திறத்தவனாயினும் சரி என்று எண்ணி போருக்கு

எழுந்தருளுவாரே அதனால் அவருக்கு யாரால் தீங்கு நேருமோ என்று கருதினமையால் அச்சம் அதிகரித்ததாயிற்று. இந்தக் குறிப்புத்தான் "மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா, உன் சேவடி செவ்வி திருக்காப்பு" என்ற பகுதியிலே அடங்கிக் கிடக்கிறது.

இரண்டாம் பாசுரத்திலே "அடியோமோடும்" என்று சொல்லித் தம்முடைய மங்களத்தையும் விரும்பியதன் காரணம், தம்மைப்போன்ற அடியவர்கள் இல்லையானால் எம்பெருமானுக்குத் தீங்கு விளையக்கூடுமே என்ற அச்சம்பற்றி என்க. முதலிரண்டு பாசுரங்களையும் சேர்த்து பாட்டாகக் கொள்வது மரபு.

அடுத்துள்ள 3 முதல் 11 பாசுரங்கள் மூவகைத்தாய அதிகாரிகளைக் குறித்துப் பாடப்பெற்றனவாகும். அவ்வதிகாரிகள் பின்வருமாறு;

(1) எம்பெருமானுடைய சேவையையே விரும்பி அதில் ஊன்றியிருப்பவர்கள். இவர்களைக் குறித்த பாசுரங்கள் 3,6,9,

(2) ஆத்மானுபவத்தை அதாவது கைவல்லியத்தை விரும்பும் நிஷ்டர்கள். இவர்களைக் குறித்த பாசுரங்கள் 4,7,10.

(3) செல்வத்தையே விரும்புமவர்கள். இவர்களைக் குறித்த பாசுரங்கள், 5,8,11. 12-ஆவதுபாசுரம் எப்பொழுதும்எம்பெருமானுடைய மங்களாசாஸனம் செய்து கொண்டிருப்பவர்கள் அடையும் பலன் யாது என்பதைக் கூறுகிறது.

பகவதனுபவத்தையே விரும்பும் அடியார்கள்

(3) வாழாட்பட்டு நின்றீருள்ளீரேல்
வந்து மண்ணும் மணமுங் கொண்மின்
கூழாட்பட்டு நின்றீர்களை யெங்கள்
குழுவினில் புகுத லொட்டோம்
ஏழாட்காலும் பழிப்பிலோம் கரங்கள்
இராக்கதர்வாழ் இலங்கை
பாழாளாகப்படை பொருதானுக்குப்
பல்லாண்டு கூறுதுமே,

(6) எந்தை தந்தை தந்தை தந்தைதம்
மூத்தப்பன் ஏழ்படிகால் தொடங்கி
வந்து வழிவழி யாட்செய்கின்றோம்
திருவோணத் திருவிழவில்
அந்தியம் போதிலரி யுருவாகி
அரியைப் பழித்தவனை
பந்தனை தீரப் பல்லாண்டு
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே

(9) உடுத்துக்களைந்த நின் பீதகவாடை
யுடுத்துக் கலத்ததுண்டு
தொடுத்ததுழாய் மலர் சூடிக்களைந்
தன சூடுமித் தொண்டர்களோம்
விடுத்ததிசைக் கருமந்திருத்தித்
திருவோணத் திருவிழவில்
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டா
னுக்குப் பல்லாண்டு கூறுதுமே.

இங்ஙனம் பலவகை அதிகாரிகளை இவ்வாழ்வார் அழைப்பதன் கருத்து யாதெனில் தனியராய் இருந்து தான்மட்டும் மங்களாசாஸனம் செய்து எம்பெருமானை அனுபவிப்பது முறையாகாது என்றும் இந்த நல்ல காரியத்தில் தக்க பலபேர்களும் வந்து சேர்ந்துகொள்ள வேணுமென்றும் நினைத்தபடியாலே, தான் பெற்ற இன்பம் வையகம் முழுவதும் பெற வேண்டும் என்று உள்ளும் பரந்த மனப்பான்மை உடையராதலின் இங்ஙனம் துணை கூட்டிக்கொண்டார் எனக்கொள்ளல்வேண்டும்.

கேவலம் வயிறு வளர்ப்பதற்காக பிறர் இடத்தில் அடிமைத்தொழில் பூண்டிருக்கும் கூட்டத்தாரோடு சேராமல் எப்பொழுதும் எம்பெருமானுடைய அடிமைத் தொழிலில் ஈடுபட்டு நிலைத்திருப்பவர்களை முதலில் 3-ஆம் பாசுரத்தில் அழைக்கின்றார். அங்ஙனம் அழைக்கும்போது "அடியார்களாகிய நாங்கள் ஏழு தலைமுறையாக ஒருவகைக் குற்றமும் இல்லாதவர்கள்; எம்பெருமானுக்குப் பல்லாண்டு பாடுவதே எங்கள் தொழில் என்று கூறி பரமனது அடியார்களின் தன்மையை விளக்குகின்றார். அப்படி அழைக்கப்பட்ட அடியார்கள் "நாங்களும் உம்

மைப்போலவே பல தலை முறையாக எம் பெருமானுக்கு அடிமை செய்கிறவர்கள் தாம்" என்று கூறி தாங்கள் இறைவனுக்கு உரிய காலங்களில் பணி செய்துவருவதையும் அவருக்கு இடையறாது மங்களாசாஸனம் செய்கிறவர்கள் என்பதையும் 9-ம் பாசுரத்தில் கூறிப் பெருமைப்படுகிறார்கள். 9-ஆம் பாசுரத்தில் இத்தகைய அடியார்கள் தங்களுக்கென்று உணவு, ஆடை, மலர் முதலியவற்றை விலைக்கு வாங்கி உபயோகிப்பதில்லையென்றும், எம்பெருமான் அனுபவித்துக் கழித்தவற்றையே உயர்ந்த பிரசாதமாகக்கருதி அவற்றையே உண்பதும், உடுப்பதும், சூடுவதும் ஆகிய தொழில்களைச் செய்வதாயும், மற்றும் அப்பெருமானுக்கு எந்தக் காரியம் ஆகவேண்டுமோ அந்தக் காரியத்தை ஒழுங்குபடச் செய்து முடிப்பதோடல்லாமல் பல்லாண்டு பாடுதலையும் செய்து வருபவர்கள் என்று மேலும் தங்களது இயல்பைக் கூறி இறும்பூது எய்துகிறார்கள்.

செல்வத்தை விரும்பி இறைவனை வழிபடுமவர்கள்

4. ஏடுநிலத்திலிடுவதன் முன்னம்வந்து
எங்கள்குழாம் புகுந்து
கூடுமன முடையீர்கள் வரம்பொழி
வந்தொல்லைக் கூடுமினோ
நாடுநகரமும் நன்கறிய
நமோநாராயணாய வென்று
பாடு மனமுடைப் பத்தருள்ளீர்
வந்து பல்லாண்டு கூறுமினே.

(7) தீயிற்பொலிகின்ற செஞ்சுடராழி
திகழ்திருச் சக்கரத்தின்
கோயிற் பொறியாலே யொற்றுண்டுநின்று
குடியாட் செய்கின்றோம்
மாயப் பொருபடை வாணனை
ஆயிரந்தோரும் பொழிகுருதி
பாய சுழற்றியவாழி வல்லானுக்குப்
பல்லாண்டு கூறுதுமே.

(10) எந்நாளெம்பெருமான் உன்றனக்
கடியோமென் றெழுத்துப்பட்ட
வந்நாளே அடியோங்க ளடிக்குடில்
வீடுபெற்றுய்ந்தது காண்
செக்கண் தோற்றித் திருமதுரையுட்
சிலைகுனித்து ஐந்தலைய
பைந்நாகத் தலைப்பாய்ந்தவனே
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே.

ஆத்மானுபவம் மாத்திரம் செய்தலாகிய, மீட்சியற்ற, கைவல்லியத்தை அடைந்து கெட்டுவிடாமல், அதாவது "ஓம், நம:" என்ற சொற்களைமட்டும் சொல்லிக்கொண்டு இறைவனை ஆத்மானுபவம் வேண்டி வழிபடுதலைவிட்டு அஷ்டாக்ஷரமாகிய திருமந்திரத்தைச் சொல்லி எம்பெருமானுக்கு மங்களாசாஸனம் செய்யும்படி இவர்கள் 4-ம் பாசுரத்தில் அழைக்கப்படுகிறார்கள். அப்படி அழைக்கப்பட்டவர்கள் சங்கு சக்கரங்களாலே திருவிலச்சினை செய்துகொண்டு அடிமைசெய்பவர்களாய் ஸ்ரீகிருஷ்ணனுக்கும் அவருக்கு அடிமை செய்த திருவாழியாழ்வானுக்கும் மங்களாசாஸனம் செய்பவர்களாய்மாறின நிலையை 7-ம் பாசுரத்தில் கூறப்படுகிறது.

10-ம் பாசுரத்தில் எம்பெருமானுக்கு அடியவர்களாகி மாறிய அக்கணம் முதற்கொண்டு வழி வழியாக அவர்கள் உஜ்ஜீவித்து விட்டதாக உறுதிமொழி கூறி மங்களாசாஸனத்தில் நிலைபெற்ற தன்மை கூறப்படுகிறது.

(5) அண்டக்குலத்துக் கதிபதியாகி
அசுரரிராக்கதரை
இண்டைக்குலத்தை யெடுத்துக்களைந்த
இருடிகேசன்றனக்கு
தொண்டக்குலத்திலுள்ளீர் வந்தடிதொழுது
ஆயிரநாமஞ்சொல்லி
பண்டைக்குலத்தைத் தவிர்ந்து
பல்லாண்டு பல்லாயிரத் தாண்டென்மினே.

(8) நெய்யெடை நல்லதோர்சோறும்
நியதமுமத்தாணிச் சேவகமும்
கையடைக்காயும் கழுத்துக்குப்பூணொடு
காதுக்குக் குண்டலமும்
மெய்யிட நல்லதோர் சாந்தமுந்தந்து
என்னை வெள்ளுயிராக்கவல்ல
பையுடைநாகப் படைக்கொடி யானுக்குப்
பல்லாண்டு கூறுவனே.

(9) அல்வழக் கொன்றுமில்லா அணிகோட்டியர்
கோன் அபிமான துங்கன்
செல்வனைப் போலத் திருமாலே
நானுமுனக்குப் பழவடியேன்
நல்வகையால் நமோநாராயணவென்று
நாமம் பலபரவி
பல்வகையாலும் பவித்திரனே உன்னை
பல்லாண்டு கூறுவனே.

செல்வத்தைக் கோரி "அண்டாதிபதயேநம, அண்டாதிபதயேநம," ",அசுரசத்ரவேநம: அசுரசத்ரவேநம: அசுரசத்ரவேநம:," என்பன போன்றவற்றை மீண்டும் மீண்டும் சொல்லி உருப்போட்டுக் கொண்டிருக்கும் அதிகாரிகளை நோக்கிப் பெரியாழ்வார் அச்செயல் தகாதென்றும் பயன்மீது உள்ள இச்சையைவிட்டு எம்பெருமானது ஆயிரம் நாமங்களையும் ஸ்மரித்து அவரைப் போன்றுருள்ள கோஷ்டியிலே சேரும்படி விளிக்கிறுர். உண்ணுதற்கும் உடுத்தற்கும் அணிதற்கும் உள்ள சிறந்த சாதனங்களையும் செல்வத்தையும் இவர்கள் விரும்பிய அளவிற்குக்கொடுத்து உபகரித்து வந்த எம்பெருமான் இனியும் அவ்வித பயன்களைக் கோராமல் அவருடைய மங்களாசாஸனத்தில் ஈடுபட்டவர்களாய் மாறியபடியால் அவர்கள் சுத்த சாத்வீகர்களாகிய நிலையை 8-ஆம் பாசுரம் தெரிவிக்கிறது.

பழைய தீவினையினுல் ஏற்பட்ட அகங்காரம் நீங்கியபடியால் எல்லா ஆத்மாக்களும் எம்பெருமானுடைய அடிமை நிலையில் நிற்கின்றன. எனவே கேவலம் செல்வத்தையே விரும்பி எம்பெருமானை ஆராதித்துவந்த ஆத்மாக்கள் இப்பொழுது திருத்தம் பெற்றவர்களாய் மாறியபடியால், தேகமே ஆத்மாவென நினைத்தல், ஆத்மா ஸ்வதந்தரம் என்று நினைத்தல் பலன்களின் மேலுள்ள இச்சையினுல் இறைவனைப் பூஜித்தல் என்பன போன்ற குற்றங்கள் நீங்கி தலை சிறந்த திருக்கோட்டியூர் செல்வ நம்பியைப்போல எம்பெருமானுக்குப் பழமையான தாஸத்துவம் பூண்டுவிட்டமையை 11-வது சூத்திரம் கூறுகிறது.

ஏற்கனவே சொல்லியபடி 12-ம் சூத்திரம் திருப்பல்லாண்டு பதிகத்தை ஓதுவதால் உண்டாகும் பலனைக் கூறுகிறது.

முதல் பாசுரம் ஒரு பல்லவியைப் போல ஒவ்வொரு பாசுரத்தோடும்சேர்த்து பாடத் தகுதிபெற்றது.

இத்திருப்பல்லாண்டு பதிகத்தால் இறைவழி பாட்டுக்குரிய மேற்சொன்ன மூவகை அதிகாரிகளையும் மங்களாசாஸனத்திலீடுபடுத்திய பெருமை பெரியாழ்வாரைச் சார்ந்தது என்பது வெளிப்படை.

பவானி : சங்கமேசுவரசுவாமி கோயிலில் 14—12—61 முதல் 23-12-61 வரை ஆருத்திரா தரிசன விழாவும், ஆதிகேசவப்பெருமாள் கோயிலில் 17—12--61 முத 27—12—61 வரை வைகுண்ட ஏகாதசி விழாவும் நடைபெற்றன.

நத்தம் : மாரியம்மன் கோயிலில் 12—12—61-ல் "மாரியம்மன் முப்பதிகம்" என்னும் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

திருநெல்வேலி : திருஞானசம்பந்தர் திருக்கோயிலில் 15-12-61 முதல் 19-12-61 வரை சிவநெறிக்கழகச் சார்பில் சமயச் சொற்பொழிவுகளும் இசையரங்குகளும் நடைபெற்றன.

பாளையங்கோட்டை : இராஜகோபால சுவாமி உற்சவருக்கு ரூ. 1700 செலவில் அன்பர்களால் செய்துவைக்கப்பட்ட தங்க நிலையங்கியை, மாடவீதிகளில் மேளதாளத்துடன் ஊர்வலமாக எடுத்துவந்து வேதபாராயணத்துடன் 13—12—61-ல் சாத்தப்பட்டது.

தென்கரை : நவநீதகிருஷ்ணசுவாமி கோயிலில் இராப்பத்து விழா 18—12—61 முதல் 27-12-61 வரை நடைபெற்றது.

கோயில்குருவித்துறை : 18—12—61 வைகுண்ட ஏகாதசியன்று ஸ்ரீசித்திரரத வல்லவப்பெருமாளை குருவித்துறை கிராமத்திற்கு எழுந்தருளச்செய்யப்பெற்றது.

வாயிலைத் தாண்டியதும் கொடிமரமும் பலி பீடமுமுள்ளன. சிறு கோபுரத்தைக் கடந்ததும் கருடாழ்வார் சந்நிதியும், அதன் பக்கம் விரகாதிபோகம் என்ற ஒருபெண்ணின் உருவமும் உள்ளன. இவைகளுக்குத் தெற்கே ஆழ்வார்கள் சந்நிதி. அதற்கருகில் முனைய தரையன்பிள்ளையின் படிமம் காணப்படுகிறது. தெற்குப் பிரகாரத்தில் விபீடணன், வான், அரங்கநாதன், ஆஞ்சநேயர் சந்நிதியிருக்கிறது.

மூலத்தானத்தில் கிழக்கே திருமுக மண்டலத்துடன் நின்ற திருக்கோலமாக உபயநாச்சிமார்களுடன் பெரியபெருமாள் சேவை சாதிக்கிறார். இவருடைய திருநாமம் நீலமேகன் என்பது. எம்பெருமானின் இருமருங்கும் தண்டகமுனிவரும் பட்சிராஜனை கருடாழ்வானும் சிரமேற்கரங்கூப்பி வணங்கி நிற்கின்றனர். இந்தகர்ப்பக் கிரகத்திலேயே உற்சவமூர்த்தியாள சௌரிராஜப் பெருமாள் எழுந்தருளியிருக்கிறார். ஸ்ரீதேவி, பூதேவியுடன், உபரிசரவசு என்னும் அரசன் மகளான பத்மினிதேவியும், சூடிக்கொடுத்த சுடர்க்கொடியான ஆண்டாளும் இருமருங்கிலும் அழகிய காட்சியளிக்கின்றனர்.

இறைவன் எழுந்தருளியுள்ள கர்ப்பக்கிரகமே உத்பலாவதக விமானம் என்ற பெயருடையது. தவம் கிடத்தலால் வற்றிமெலிந்த உடலுடையவர்களை உத்பலர் என்பர். அவர்களைப் பரிந்து காத்தளிக்கும் பரம கருணாநிதியான பரமன் எழுந்தருளியிருக்கும் விமானமானபடியால் இப்பெயர் பெற்றது. அல்லி மலர்போன்ற அழகுள்ளதால் விமானத்திற்கு இப்பெயர் பொருந்தும் என்று கூறுவாருமுண்டு. கண்ணனெம்பெருமான் விருப்புடன் உறையும் இவ்விமானத்தின் பெயரே திருக்கண்ணங்குடி, திருக்கண்ணமங்கை என்ற திருப்பதிகளுக்கும் அமைந்திருப்பது தெரிந்து மகிழத்தக்கது. உத்பலாவதக விமானத்தில் பிரசித்தமான தேவதை என்று சௌரி என்ற திருநாமத்துக்கு ஸ்ரீபட்டர் உரை கூறியிருக்கிறார்.

மூலத்தானத்துக்கு வடபுறம் ஆண்டாள், மணியம் சௌரிராஜப்பெருமாள், இராமர், சீதை, இலக்குவர், அனுமான் இவர்களுடைய சந்நிதிகளும் இருக்கின்றன. தென்புறத்தில் தாயார் சந்நிதி இருக்கிறது. மூலவர் உற்சவர்களுக்கு கிருஷ்ணபுரநாயகி, கண்ணபுர நாயகி என்ற திருப்பெயர்கள் உண்டு.

இத்தலத்திற்கு முக்கியமான தீர்த்தங்கள் நான்கு. 'கங்கையிலும் தீர்த்தமலி கணபுரம்' என்ற திருவாக்கு நோக்குதற்குரியது. நித்திய புஷ்கரிணி என்பது கோயிலின் முன்னுள்ள பெரிய திருக்குளம்; இது 450 அடி நீளம், 415 அடி அகலமுடையது; ஒன்பது படித்துறைகளையுடையது; செவ்வையாகக் கட்டப்பெற்ற கைப்பிடிச் சுவர்களையுமுடையது. அநந்தபிலம் என்ற மற்றொரு தீர்த்தம் விமானத்திற்கு மேற்கே இருக்கிறது. ஆதிசேடன் இதன் வழியே வந்து பெருமாளைச் சேவித்துப் பேறுபெற்றான் என்பர். பூதாவடம் என்ற இன்னுமோர் தீர்த்தத்தினின்றும் தோன்றிய பூதத்தினால் சந்திரன் நோய் நீங்கப்பெற்றான் என்று கூறப்படுகிறது. நான்காவது தீர்த்தமான முக்நாகரம் விமானத்திற்கு வடக்கே இருக்கிறது. மூவுலக சஞ்சாரியான உபரிசரவசு என்ற அரசன் இதன் வழியாகப் பாதலமிருந்து வந்து சௌரிராஜனை வழிபட்டதாகப் புராணம் கூறுகிறது.

கோயிலில் ஆறுகாலம் திருவாராதனம் நடைபெறுகிறது. வைகாசியில் பிரமோற்சவமும், மாசிமக உற்சவமும் நடைபெறுகின்றன, மகத்திற்குப் பெருமாள் திருமலைராயன் பட்டினத்துக் கடற்கரைக்கு எழுந்தருளித் தீர்த்தம் கொடுக்கிறார். தெப்ப உற்சவமும் மாசிமகத்தை யொட்டியே நடைபெறுகிறது. ஆண்டுக்கொருமுறை வைகாசிப் பிரமோற்சவத்தின் ஏழாம்நாள் விடியற்காலையில் பெருமாள் வெள்ளைசாத்தி ஒரு முகூர்த்த காலம் சிவ வேடத்துடன் சேவை சாதித்தருளுகிறார்.

இந்த திவ்விய தேசத்தைப் பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகரஆழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் இந்த ஐவரும் மங்களா சாசனம் செய்திருக்கிறார்கள். அவர்கள் பாடியவை 128 பாசுரங்கள். பெரியாழ்வார், 'கண்ணபுரத்தமுதே' என்கிறார். ஆண்டாள், 'கண்ணபுரநகர் வாட்டமின்றி மகிழ்ந்துறைவாமனன்' என்று கூறுகிறார். குலசேகர ஆழ்வாரின் 'மன்னுபுகழ்க் கௌசலை தன் மணிவயிறுவாய்த்தவனே' என்று தொடங்கும் பதிகப் பாசுரத்தை அறியாதார் இல்லை,

இராமாவதாரத்தின் பெருமையை விளக்கமாகக் கூறுங்கால் 'கணபுரத் தென்கருமணியே' என்று ஒவ்வொரு பாடலிலும் குறித்திருக்கிறுர். திருமங்கையாழ்வார் அகப்பொருட் சுவைபடப் பாடியிருக்கிறுர். உதாரணமாக ஒருபாடல் பின்வருவது:—

பேராயிரமுடைய பேராளன்
பேராளன் என்கின்ருளால்
ஏரார்கன மகரகுண்டலத்த
னெண்தோளா னென்கின்ருளால்
நீரார்மழை முகிலே நீள்வரையே
யொக்குமா லென்கின்ருளால்
காரார்வயல் மருங் கண்ணபுரத்
தம்மானைக் கண்டாள் கொல்லோ.

கோத்தும்பியைப் பார்த்து, "நீ மலர்களில் எல்லாம் சென்றுபாடி என்னபெறப் போகிருய்? கண்ணபுரத்து மாலின்துழாயை வந்து ஊதுவாய்" என்கிருர். அப்பாடல்,

விண்ட மலரெல்லா மூதிநீயென் பெறுதி
அண்ட முதல்வ னமரர்க ளெல்லாரும்
கண்டு வணங்கும் கண்ணபுரத் தெம்பெருமான்
வண்டு நறுந்துழாய் வந்தூதாய் கோல்தும்பீ

என்பது. இன்னுமொரு அழகிய பாடல் கீழே வருவது :—

பெற்ருரும் சுற்றமுமென்றிவை பேணேன் நான்
மற்ருரும் பற்றிலேனுதலால் நின்னடைந்தேன்
உற்ருனென் றுள்ளத்துள் வைத்தருள்செய் கண்டாய்
கற்ருர்சேர் கண்ணபுரத் துறையம் மானே

மேலும் 'கலையிலங்கு மொழியாளர் கண்ணபுரத்தம்மான்', 'கடிபொழில்சூழ் கணபுரத் தென்கனியே', 'கணபுரத்துப் பொன்மலை போல் நின்றவன்' என்றும் பாடியருளுகிருர். இவர் இறைவனிடம் நாரையைத் தூதாகச் செல்லும்படி அமைத்துப் பாடியிருப்பது அவசியம் தெரிந்துகொள்ள வேண்டிய ஒரு பாடல். அது,

செங்கமல மடநாரா யின்றே சென்று
திருக்கண்ண புரம்புக்கென் செங்கண் மாலுக்கு
என்காத லென்துணைவர்க் குரைத்தி யாகில்
இதுவொப்ப தெமக்கின்ப மில்லை, நாளும்
பைங்கான மீதெல்லா முனதே யாகப்
பழனமீன் கவர்ந்துண்ணத் தருவன், தந்தால்
இங்கேவந் தினிதிருந் துன்பெடையும் நீயும்
இருநிலத்தி லினிதின்பு மெய்த லாமே

என்பது. திருமங்கையாழ்வார் தாம் எட்டெழுத்தின் பொருளை உள்ளவாறு உணர்ந்ததை, 'உற்றதும் உன்னடியார்க் கடிமை மற்றெல்லாம் பேசிலும் நின் திருவெட்டெழுத்துங் கற்றுநான் கண்ணபுரத்துறையம் மானே" என்கிருர். நம்மாழ்வார் அருளிய ஒரு பதிகத்தின் பாடல் கீழே வருவது:—

தொண்டர் நுந்தம் துயர்போக நீரேகமாய்
விண்டுவாடா மலரிட்டு நீரிறைஞ்சு மின்
வண்டுபாடும் பொழில்சூழ் திருக்கண்ணபுரத்
தண்டவாணன் அமரர் பெருமானையே.

ஆழ்வார்கள் பாடலையன்றி இத்தலத்தைப்பற்றிய புராணம் கிரந்தத்திலிருக்கிறது. "ஸ்ரீகிருஷ்ண க்ஷேத்திர மாஹாத்மியம்" என்று தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அதில் பதினைந்து அத்தியாயங்கள் இருக்கின்றன. பட்சிராஜன் பூசித்தது, இந்திரன் வழிபட்டது, பிரயோகச் சக்கர வரலாறு, பாண்டியன் தோள்வளை சமர்ப்பித்தது, வசுமன்னன் வை நகரங்கண்டது, பத்மினி நாச்சியார் திருமணம் முதலிய செய்திகளை அப்புராணத்தில் கூறப்பெற்றிருக்கிறது.

கோயிலின் கர்ப்பக்கிரகச் சுவர்களிலும், மதிள் சுவர்களிலும் பல கல்வெட்டுக்கள் உள்ளன. இத்தலத்தில் வதிந்த முனையதரையன் என்பவர் ஒருநாள் இரவு மனைவியிட்ட பொங்கலை ஸ்ரீ சௌரிராஜனுக்கு அர்ப்பணம் என்று ஒவ்வொருபிடி உண்ணுந்தோறும் சொல்லி உண்டனர். மறுநாட்காலை கோயில் திருக்காப்பு நீக்கிப் பார்க்கும்போது சந்நிதியெங்கும் பொங்கல் சிதறிக்கிடக்கப் பார்த்து, அது முனையதரையன் வீடு வரையில் இறைந்து கிடப்பதையும் எல்லாரும் கண்டனர். தன் பொங்கல் இறைவனுக்கு உவப்பாயிருந்ததை யறிந்த அம் மெய்யடியார், இரவு அர்த்தசாமத்தில் நாள்தோறும் பொங்கல் அமுது படைக்க மானியம் விட்டார். முனையதரையன் பொங்கல் என்று இன்றும் அது போற்றப்பெற்று நிவேதனம் செய்யப் பெறுகிறது. அவருடைய திருவுருவமும் கோயிலில் இருக்கிறது.

இத்தலத்தின் தெற்கு மடவிளாகத்தில் உடையவர் சந்நிதியும், மேற்கு வீதியில் திருமங்கையாழ்வார் சந்நிதியும் இருக்கின்றன.

திருஞானசம்பந்தர் அருளிய முதற்றிருமுறை

[முதுபெரும்புலவர் திரு. மாணிக்கவாசக அடிகள், தஞ்சை.]

சைவத் திருமுறை பன்னிரெண்டென்பது இப்பொழுது வழங்கும் உண்மையே ஆயினும் ஏனையதோன்றுமுன் மூவரும் அருளிய ஏழுதிருமுறைகளையே முற்காலத்தில் ஆன்றோர் போற்றினர். திருவெண்காட்டுப் புராணம் இயற்றிய எல்லப்பநாவலர் முதலோர் இக்கருத்தினர். இதனால் ஏனைய திருமுறைகளைக் கொள்ளலாகாது என்று எண்ணலாகாது. முதல் ஏழு திருமுறைகளின் உயர்வை அறிதற்கே இதனைக் குறித்தேன்.

மூவர் அருளிய எல்லாவற்றையும் 'தேவாரம்' எனவழங்குகின்றோம். அவற்றுள் அப்பர் அருளியனவே 'தேவாரம்' ஆகும். அத்தேவாரத்துள் தாளத்தோடுபாடற்குரிய பண்ணமைந்த திருப்பதிகங்கள் சிற்சிலவே. திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் என்பவை அத்தேவாரத்தின்கண் அடக்கம்.

திருஞானசம்பந்தர் அருளியவை 'திருக்கடைக்காப்பு' என்று வழங்கப்பட்டன.

தம்பிரான்தோழர் (சுந்தரர்) அருளியவை 'திருப்பாட்டு' என வழங்கப்பட்டன.

இவ்வுண்மையை உணர்த்தும் சான்று சிலஉள. வைராக்கியதீபம் முதலியவற்றின் உரையாசிரியர், மூவர் அருளிச் செயல்களையும் உணர்த்தும் போதெல்லாம் இப்பெயர் வேறுபாட்டினை மேற்கொண்டதை அவற்றை நோக்குவார் அறிவர். 'சிறப்புப் பெயரகராதி' யிலும் இதைக்குறித்த ஒரு பாடல் உளது.

'திருமுறை'ப் பெருமை என ஒருநூலைப் புகழுடல் எய்திய சுவாமிநாத பண்டிதர் எழுதினர். அது திருவாவடுதுறையாதீன் வெளியீடாகவும் அண்மையில் வழங்கப்பட்டது. அவர் பதிப்பாகிய அடங்கன்முறையிலும் அஃது உளது. இக்காலத்திலும் பலர் திருமுறைச் சிறப்பைக் குறித்துக் கட்டுரையெழுதினர். அதனால், மிக்க சுருக்கம் எனினும், இதில் எழுதும் திருமுறைப் பெருமை, சமயாசாரியர் திருவாக்கையே ஆதாரம் ஆகக்கொண்டது ஆதலின், மதிப்பிற் பெருக்கம் உற்றதாகும்.

'அன்னம் மன்னும் வயல்சூழ்கச்சூர்
ஆலக் கோயில் அம்மானை
உன்ன முன்னும் மனத்தாரூரன்
ஆரூரன் பேர் முடிவைத்த
மன்னு புலவன் வயல்நா வலர்கோன்
செஞ்சொல் நாவன் வன்றொண்டன்
பன்னு தமிழ்நூல் மாலைவல்லார்
அவர் எம்தலைமேற் பயில்வாரே'

என்று ஆளுடைய நம்பி அருளினார்.

இதில், திருநாவலூராளியார் தம் திருத்தலைமேற் பயில்வார் என்று அவர் தாமே சிறப்பிக்கப் பெறுவார் யார்? அவர் திருவாயில் வந்த திருப்பாடல் வல்லாரையே அவ்வாறு புகழ்ந்தார். இதனால் நாம் என்ன நினைத்தல் வேண்டும்? சமயாசாரியர் நால்வருள் ஒருவராய அப்பெருந்தகையின் தலைமேற் பயில்வாரும் உளரோ? என் பாட்டைப் பாடவல்லார் என் தலைமேற் பயில்வார் என்று யான் சொல்லின், இக்காலத்துப் புலவர் வக்காலத்து வாங்கி வழக்காட மாட்டாரோ? என்னை இகழாரோ? அந்நிலையில், நம்பெருமானார் நவிற்சியை நாடல்கூடுமோ? தமக்கும் மேலானவர் என்றதொடும் அமையாமல்,

'ஆரூரன் அடித்தொண்டன்
அடியன்சொல் அகலிடத்தில்
ஊரூரன் இவைவல்லார்
உலகவர்க்கும் மேலாரே!

என்பதில் உலகோர் எல்லார்க்கும் மேலானவர் என்றருளியது காண்க.

"வன்றொண்டன் சிறந்த மாலைகள் அஞ்சினோடஞ்சும் சிந்தையுள் உருகிச் செப்பவல்லார்க்கு இறந்து போக்கில்லை வரவில்லையாகி இன்ப வெள்ளத்துள் இருப்பர்கள் இனிதே" என்னும் உண்மையை உளங்கொண்டால், அம்மேன்மை அவர்க்கு அன்றி வேறு

எவர்க்கு எய்தும்? அவரே அம் மேன்மைக்கு உரியர் ஆதலின்,

"ஆழியாற்கு அருள் ஆனைக்கா
உடைஆதி பொன்னடியின்
நீழலே சரண்ஆக நின்று
அருள்கூர நினைந்து
வாழவல்ல வன்றொண்டன் வண்டமிழ்
மாலைவல் லார்போய்
ஏழுமா பிறப்பு (ம்) அற்று
எம்மையும் ஆளுடையாரே"

என்று பாடியதில் என்ன வியப்பு உளது?

'ஒண்பொழில் நாவலர்கோன் ஆகிய ஆரூரன்
பன்னும் இசைக்கிளவி பத்திவை பாடவல்லார்
பத்தர் குணத்தினராய் எத்திசையும் புகழ
மன்னியிருப்பவர்கள் வானின் இழிந்திடினும்
மண்டல நாயகராய் வாழ்வது நிச்சயமே'

என்று பாடியருளியதன் உண்மையை உணர்வார்க்குத் திருமுறைப் பெருமையை ஒரு முறையும் கூறல்வேண்டா.

'எல்லாம் சிவன் செயல்'கள் என்னும் உண்மையில் ஒரு சிறிதும் குறைவின்றி வாழ்ந்த ஆசிரியர் அனைவரும் எதையும் தம் செயலாகக் கொள்வரோ? பாடுதற்றொழில் பரமனுடையதே; தமது அன்று என்று தெளிந்த அன்னோர் அப்பாடலெல்லாம் சிவன் பாடல்களே என்று கொண்டதிலும், அவற்றைப் பாடவல்லார் தம்மினும் மேலோர் என்பதிலும், அவர் திருவடி தம் தலைமேலன என்பதிலும் சற்றேனும் தயக்கம் கொள்வரோ?

சுந்தரப் பெருமான், சொல்லியருளிய எல்லாம் முன்னைய இருவரும் சொல்லியருளியனவே ஆம். புதியன அல்ல என்றும் கருத வைத்தார்.

'நல்லிசை ஞான சம்பந்தனும் நாவினுக் கரசரும்
பாடிய நற்றமிழ்மாலை 'சொல்லிய'வே சொல்லியேத்து
துகப்பான்'

என்று சிவபெருமானைக் குறித்ததில், அக்கருத்தும் உண்டு. 'சொல்லிய' என்பது வினையாலணையும் பெயராய் அப்பரும் சம்பந்தரும் அருளிய நற்றமிழ் மாலைகளின் தொகுப்பாகிய திருமுறைகளைக் குறித்தல் அறிக. அறியவே இதுகாறும் இதிற்குறித்த திருமுறைப் பெருமை மூவர் தேவாரத்திற்கும் உரித்தாயினமை இனிது விளங்கும்.

முன்னிருவர் திருமுறைகளுள் இவ்வாறு உணர்த்தும் இடம் காட்டவில்லையே எனலாம்.

திருஞானசம்பந்தர் திருவிலம்பையங் கோட்டூர்த் திருப்பதிகம் பத்திலும் இரண்டாவதடியில், எல்லாம் "எனதுரை தனதுரை"யாதல் கூறப்பட்டது. அதனால் காழி வேந்தர் உரைத்தன எல்லாம் ஊழிவேந்தன் (முதல்வன்) உரைத்தனவே என்னும் வாய்மை தெற்றென விளங்கிற்று. விளங்கவே அவை எல்லாம் சிவவாக்கியமே என்பதில் ஐயம் சிறிதும் இல்லையாயிற்று. திருவலஞ்சுழித் திருப்பதிகத்தின் முடிவில், "காழிநாதன் வேதியன் ஞானசம்பந்தன்வாய் நவிற்றிய தமிழ்மாலை, ஆதரித்து, இசைகற்று வல்லார் சொலக்கேட்டு உகந்தவர் தம்மை வாதியாவினை மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம் வந்தடையாவே" என்றுளது. அதில் திருமுறைப் பாராயணப் பயன் விளக்குதலைக் குறித்தலும் வேண்டுமோ? தானே விளங்குமன்றோ? 'வாய்நவிற்றிய தமிழ் மாலை' என்றதே குறிக்கின்றது. வாய் நவின்ற தமிழ்மாலை என்றன்றோ கூறுதல் வேண்டும்? பிறவினையில் ஏன் கூறியருளினர்? நவின்றதுவாய். நவிற்றியது திருவருள். திருவருள் நவிலச் செய்யவாய் நவின்றது என்னும் உண்மையை உணர்த்தவே.

"நல்லமட மாதர்அரன் நாமமும்
நவிற்றிய திருத்தம் முழுகக்
கொல்லவிட நோயகல் தரப்புகல்
கொடுத்தருளு கோகரணமே"

என்பதில் உள்ள 'நவிற்றிய' என்பது செய்திய என்னும் வாய்பாட்டு வினையெச்சம். நவிற்ற என்னும் பொருளது. நவிற்றவும் முழுகவும் அகலவும் புகல் கொடுத்தருளும் கோகரணம் என்க.

இத்திருமுறையெல்லாம் திருவருள் மொழியே அன்றி மானிட வார்த்தையல்ல என்பது இதனால் புலப்பட்டது.

திருஞானசம்பந்தப் பெருமானார், திருவையாற்றுத் திருப்பதிகத்தில்,

"எங்கும் ஆகிநின்றானும் இயல்பறியப் படா [ம்
மங்கை பாகம் கொண்டானும் மதிசூடும் மைந்தனு
பங்கம்இல் பதினெட்டொடு நான்குக்கு உணர்வும்
ஆய்
அங்கம்ஆறும் சொன்னானும் ஐயாறுடை ஐயனே

என்று பதினெண்புராணங்களுக்கும் நான்மறைகட்கும் ஆறங்கக்கட்கும் நம் ஐயனுக்கும் உள்ள தொடர்பு உணர்த்தப்பட்டது. முன்னிரண்டு தொகுப்புக்கும் உணர்வும் மூன்றுவது தொகுப்புக்குச் செய்யுட்கிழமையுமே அத்தொடர்பாயிற்று. நான்மறைக் குணர்வாகிய பரசிவம் இத்தமிழ்மறைக்கும் உணர்வாதலில் தடை உளதோ? உணர்வாதலால்தான் திருமுறை திருவருளுருவாயிற்று. ஆகவே அம்முறை (நூல்) ஏனைய முறைகளைப்போல் வெறுமுறை எனப்படாது திருமுறை என வழங்கப்படும் உண்மைப் பெருமையை உற்றதுணர்க.

சுந்தரர் திருக்கயிலையினின்று இம்மண்ணுலகிற்கு எழுந்தருளும்போது, ஆண்டிருந்த திருமேனியும் சிவத்துவமும் இவ்வுலகிற்கேற்பச் சிறிதேனும் வேறுபடாதிருக்குமோ? அவ்வாறே இம்மண்ணுலகின் நின்று திருக்கயிலைக்குச் செல்லுங்கால், ஊனுயிர் வேறு செய்தல் நேர்ந்தது. அதனை 'ஊனுயிர் வேறு செய்தான் நொடித்தான் மலையுத்தமனே' என்னும் அருண்மொழியால் அனைவரும் அறிவர். 'முன்பு நீ நமக்குத் தொண்டன் முன்னிய வேட்கை கூரப் பின்பு நம் ஏவலாலே பிறந்தனை மண்ணின்மீது' என்றருளினர். சேக்கிழார் இதனால் மண்ணுலகிற்கு ஏற்ற ஊனுயிர் வேறுபாடு உற்ற உண்மை புலப்படும். அக்காலத்துப் பாடியருளப்பெற்ற திருப்பதிகம் எத்தகைய பெருமையதி? யாவரால் மதிப்பிடப்பெறும்? அதன் பெருமையை அளவிடவல்லார் உளரோ? திருமுறைகளைப் பாராயணம் புரிவோர் அவற்றால் ஆம் பயனை இன்றும் அடையப் பெறுதல் பலருக்கு அநுபவமாக இருக்கின்ற தொன்றே சான்றாகும். வன்பார்த்தான்பனங்காட்டூரில் வாழும் ஓர் அன்பார்த்த நெஞ்சினார்க்கன்றோ திருமுறைப்பயன் தெற்றெனவிளங்கிற்று?

'என்னில் ஆரும் எனக்கினியார் இல்லை
என்னிலும் இனியான் ஒருவன் உளன்
என்னுளே உயிர்ப்பாய்ப் புறம்போ ந்துபுக்கு
என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே'

'தேடித்தேடொணுத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்'

என்னுந் தேவாரத்தால் உள்ளிருந்துபாடுவித்தவன் சிவபெருமானே என்பது விளங்காதோ? 'வாயானை, மனத்தானை, மனத்துள் நின்ற கருத்தானைக் கருத்து அறிந்து முடிப்பான்றன்னை' 'மனத்தகத்தான் தலைமேலான் வாக்கின் உள்ளான் வாயாரத் தன்னடியே பாடுந்தொண்டர் இனத்தகத்தான்' 'ஊனாகி, உயிராகி அதனுள் நின்ற உணர்வாகிப் பிற வனைத்தும் நீயாய் நின்றாய் நானேதும் அறியாமே என்னுள் வந்து நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்'' 'நாவாகி நாவுக்கு ஓர் உரையும் ஆகி நாதனாய் வேதத்தின் உள்ளோன் ஆகி', 'சொல்லாகிச் சொல்லுக்கு ஓர் பொருளும் ஆகி', 'கலையாகிக் கலைஞானம் தானேயாகி' என்னும் தேவாரத்தால் அப்பர் சுவாமிகள் நமக்கு உணர்த்திய உண்மை என்ன என்று ஆராய்தல் அறிஞர் கடனாகும். எல்லாம் சிவன் செயலே.

மாணிக்கவாசகர், 'மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்து என் மனத்திடை மன்னிய மன்னே' என்று, திருமுறை சிவபிரானுக்கு ஞானருபமாதலை உணர்த்தியருளினர்.

சமயாசாரியர்கள் சிவபெருமானால் ஆட்கொள்ளப்பெற்றது முதல் சிவமாக விளங்குபவர்கள். ஜீவசுபாவம் முற்றும் ஒழிந்து சிவத்தியல்பு முற்றும் உற்றவர்கள். (பசுத்துவம் தீர்ந்து சிவத்துவம் பெற்றவர்கள்) பசுகரணம் சிவகரணம் ஆதலே சிவத்துவப் பேற்றுக்கு அடி. சிவத்துவம் குணம், சிவம் குணி. குணியாகிய சிவமானவர்கள் திருவாக்கிலிருந்து வரும் பாடல்களும் பிறவும் சிவ வாக்கியமே அன்றி ஜீவவாக்கியமாகா. திருமுறைகள் சிவ வாக்கியங்களாகிய காரணத்தால்தான் சொல்லிய எல்லாம் சொல்லியவாறே நிகழ்ந்தன. அற்புதப் பதிகங்கள் என்ற சிறப்பிற்கு அதுவே காரணமாகும். செத்தாரையெழுப்புவேன் என்று எழுந்த ஜீவபோதம் முனைத்து நிற்க வெளிவந்த பாடல்களை அருட்பா எனலாகாதென்று பொருத உண்மையைச் சைவருலகு மறந்திடாதென்றெண்ணுகிறேன்.

திருமுறைகளை அன்றாடம் பாராயணம் புரிவோர்க்குச் சில தினங்களில் திருவருள் உண்டாதலை இன்றும் அநுபவத்திற் காணலாம். பின்னர் நிகழ்வது முன்னரே புலப்படுகின்ற நலம் பலர்க்கு உண்டாதலைக் கேட்டுள்ளேன். அடியேனும் அநுபவத்தில் உணர்ந்து வருகிறேன்.

திருஞானசம்பந்தர் முதற்றிருப்பதிகத்தில் 'பெம்மான்இவன்' எனச்சுட்டியருளினார். அச்சுட்டின் விளக்கமே 'தோடுடையசெவி' முதலிய திருவடையாளங்களாகும். அவை உருவத் திருமேனிக்கு உரியன என்று கொள்வர் பலர். அவை உருவம் மூன்றும் கடந்த தனிஞானத்திருமேனிக்கும் உரியயவையே ஆம். 'கரசரணுதிசாங்கம் தரும் அருள்' (சித்தியார்) என்னும் சிவாகமவசனம் அறிவார் இவ்வுண்மையை நன்குணர்வர். சிவபெருமானுக்குரிய அங்கம், ப்ரத்யங்கம், சாங்கம், உபாங்கம் அனைத்தும் எவை என்னும் உண்மையை ஒருங்கே காண்டல் அரிதாயினும், ஆங்காங்குச் சிற்சிலவற்றைப் பலர் விளக்கியெழுதினர்; பதினொன்றாந் திருமுறையில் உள்ள (பட்டினத்தார் அருளிய) 'ஒருபாவொருபஃது' என்பதிலும் சில உணர்த்தப்பட்டன. அன்னோரன்ன தாற்பரியங்களை உணர்ந்தவர்க்கு அத்திருவடையாளங்கள் தெளிவுறும்.

ஆசிரியர் 'பெம்மான் இவன்' என்று சுட்டிக்காட்டியும் அவனைக் கண்டிலர் அங்கிருந்தோர் அனைவரும். கண்ட சிலர் தாமும் யாரோ அறியேன். முதலிற் சுட்டிக்காட்டியும் திருஞானசம்பந்தப் பெருமான், முடிவில், திருப்பெருமண நல்லூரில், எல்லாரையும் பேரொளிக் காட்சிக்கும் அதனுள் முழுகிப் பேரின்பம் துய்க்கும் பேற்றிற்கும் உரியவராக்கியருளினார். அப்பேற்றை நல்கும் பெரும்புகழ் இன்றும் திருமுறைக்கு உண்டு.

திருமுறையால் உணர்த்தப் பெறும் மெய்ப்பொருள் பரமசிவம். அப்பொருளை நன்குணரவேண்டின், சைவசித்தாந்த ஞான நூல்களைக் கற்றுணர்தல் வேண்டும். நான்முகனையும், மாயனையும், உருத்திரனையும் மட்டும் பிற சமயத்தார் கடவுளர் எனக்கொண்டு, அம்மூவருள் ஒருவனைப் பரத்துவக் கடவுள் என்று கூறிக்களிக்கின்றனர்.

சைவசித்தாந்தச் செம்பொருளை அன்னோர் அறிய வாய்ப்பில்லை. சிவபுராணங்களைக் கற்றாரும் உணர்ந்த ஓர் உண்மையை அன்னோர் அறிந்திலர். 'பூவண்ணம் பூவின் மணம்போல மெய்ப்போத வின்பம் ஆவண்ணம் மெய்கொண்டவன்' என்றருளினார் பரஞ்சோதி முனிவர் தாம்பாடிய புராணத்தின் காப்புச்செய்யுளில். அதில், பூ, பூவின் வண்ணம், பூவின் மணம் என்று மூன்று கூறினார். 'பூவின்' என்றது இடை நிலை விளக்கு. அம்மூன்றையும் மெய் (சத்து) போதம் (சித்து) இன்பம் (ஆநந்தம்)என்னும் மூன்றற்கும் உவமையாக்கினார். பூவும் அதன் வண்ணமும் மணமும் பிரித்தற்கு இயலாதவை. அவ்வாறே சத்தும் சித்தும் ஆநந்தமும் பிரித்தற்கு இயலாதவை. 'சச்சிதாநந்தம்' ஒன்றே சைவசித்தாந்தச் செம்பொருள். அப்பொருளே வீடுபேற்றில் அநுபவிக்கப்பெறும் உண்மைப்பொருள். அதுவே, நான்முகனது இதயத்திலிருந்து, அவனால் படைத்தற்றொழிலைச் செய்விக்கின்றது. மாயன் மனத்திலிருந்து காத்தற்றொழிலைப் புரிவிக்கின்றது. உருத்திரனது உள்ளத்திலிருந்து அழித்தற்றொழிலை ஆற்றுவிக்கின்றது. மகேசுவரராகி நின்று மறைத்தற்றொழிலை இயற்றுகின்றது. சதாசிவராகிநின்று அருள்கின்றது. இவ்வுண்மையை முதற்றிருமுறையில் 21 ஆவது திருப்பதிகத்தில் உள்ள முதல் 5 திருப்பாடல்களும் இனிதுணர்த்துகின்றன. அவற்றை அறிந்துகொண்டு பாராயணம் புரிதல் சாலச்சிறந்ததாகும். மெய்ப்பொருளை நன்குணர்ந்து செய்யும் வழிபாடே மெய்ப்பயனை நல்கும் என்பது திண்ணம். எவ்வழிபாடும் அவ்வழிபாட்டிற்குரிய பொருளையுணராமல் நிகழ்ந்தால், பயன் சிறிதும் விளையாது. விபரீத பலன் தரலும் கூடும். ஏமாந்தும் போக நேரும்.

பரமசிவனே உலகங்களின் படைப்புக்கும் முதல்வன்

'புவம்வளிகனல் புனல்புவிகலை
உரைமறைதிரி குணம்அமர்நெறி
திவமலிதரு சுரர்முதலியர்
திகழ்தரும்உயிர் அவைஅவைதம
பவமலிதொழி லதுநினைவொடு
பதுமன்நன்மல ரதுமருவிய
சிவனதுசிவ புரம்நினைபவர்
செழுநிலனினில் நிலைபெறுவரே!

என்பது, சச்சிதாநந்தசிவம் நான்முகனது இருதய கமலத்தில் வீற்றிருந்து, அவன் ஆட்சிக்கு உட்பட்ட உலகத்துயிர்களைப் படைப்பிக்கின்றது என்னும் உண்மையை உணர்த்திற்று.

பொருள்:-புவம்-ஆகாயம்; வளி-காற்று; கனல்-நெருப்பு; புனல்-நீர்; புவி-நிலம்; கலை கலைகள்; உரை-சொல்(லுலகு); மறை-வேதம்; திரிகுணம்-முக்குணம் (சத்துவம், இராசதம், தாமதம்) திவம்-வான்; மலிதரு சுரர்-மல்கியதேவர்; முதலியர்-தேவகணம் அல்லாத எல்லாக் கணங்களும்; திகழ்தரும் உயிர்-உயிர் (உயர்திணை அஃறிணை இரண்டிலும் உள்ள உயிர்) எல்லாம் அவை அவை-அவ்வவை. தம-தம்முடைய பவம்-பிறப்பு. மலிதொழிலது-மல்கிய தொழில். நினைவொடு-(அப்படைத்தற்றொழிற்) கருத்தொடு. பதுமன் நல்மலரது-தாமரைப்பூவிலுறையும் நான்முகனது அழகிய இதய கமலத்தை. மருவிய-பொருந்திய, சிவனது-பரமசிவத்தினது, சிவபுரம்-'சிவபுரம்' எனப்பெயரியதிருத் தலத்தை, நினைபவர்-நினைந்து (மூர்த்திதலந் தீர்த்தம், மூன்றையும் முறையாத் தொடங்கி வழிபட்டு) வருபவர், செழுநிலனினில்-பேரின் பச்செல்வம் செழித்தோங்கும் சிவனுலகில் நிலைபெறுவர்—அழிவின்றி நிற்றலைப் பெறுவர். 'நிலையுடைய பெருஞ் செல்வம் நீடுலகிற் பெறுவாரே' என்பதிற் குறித்த உலகே இங்குச் செழுநிலன் எனவும் 'நிலைபெறுமாறு எண்ணுதியேல்' என்னும் (நாவுக்கரசர்) அருள்மொழியில் உள்ள நிலையே இங்கும் 'நிலை' எனவும் கூறப்பட்டன.

இத்திருப்பாடலில், நான்முகன் நல்லிதய கமலத்தில் இருந்து படைத்தொழிலைச் செய்யும் செம்பொருள் சிவ பரஞ்சுடரே என்பது உணர்த்தப்பட்டதறிக.

கங்கைச் சடையனே காத்தற்றொழிலுக்கும் முதல்வன்

மலைபலவளர் தருபுவியிடை
　மறைத்ருவழி மலிமனிதர்கள்
நிலைமலிசுரர் முதல்உலகுகள்
　நிலைபெறுவகை நினைவொடுமிகும்
அலைகடல்நடு வறிதுயில்அமர்
　அரிஉருஇயல் பரன்உறைபதி
சிலைமலிமதிள் சிவபுரம்நினை
　பவர்திருமக ளொடுதிகழ்வரே!

என்பதில், திருமால் உருவில் இருந்து காத்தற்றொழிலைச் செய்விக்கின்ற தனிமுதற் செம்பொருள் சிவபிரானே என்னும் உண்மை உணர்த்தப்பட்டது.

பொருள்:—மலை பலவளர் தருபுவி இடை-பல மலைகள் வளர்ந்தோங்கும் நிலத்தில், மறைதரு வழிமலி மனிதர்கள்-வேதம் விதித்த மார்க்கத்தில் ஒழுகும் மாந்தர்கள் (வைதிகர்கள்), நிலைமலிசுரர் - உயர்ந்த வானுலகில் நிற்றல் மல்கிய தேவர்கள், (மனிதர்சுரர்) முதல் உலகுகள்-மக்களுலகும் தேவருலகும் (பிறவுலகும்), நிலைபெறும் வகை-(தோன்றியபோதே அழியாமல் உரியகாலம் வரையில்) நிற்றலைப்பெறும் வகையில், நினைவொடு-கருத்தொடு, மிகும் அலைகடல் நடுவு-அலைமிகும் கடல் நடுவில், அறிதுயில் அமர் அரி-யோகநித்திரை செய்கின்ற திருமாலின், உரு-வடிவில், இயல்-இயன்று (உயிர்க்கு உயிராய்) நடாத்துகின்ற, பரன்-பரமசிவன். உறைபதி-திருக்கோயில் கொண்டிருக்கும் திருத்தலம், 'சிவபுரம்' என்னும் திருப்பெயருடையது. அது சிலைமலிமதிள் (கற்கள் மலிந்த திருமதில்) உடையது. அத்திருத்தலத்தை நினைந்து வழிபடுவோர் திருமகளொடு விளங்குவர் (திருமாலாகி நெடிது வாழ்வர்). இத்திருப்பாடலில்,திருமாலுருவில், சிவபெருமானே வீற்றிருந்து காத்தற்றொழிலைச் செய்து எல்லா வுலகங்களுக்கும் வாழ்வை அருள்கின்றான் என்பது உணர்த்தப்பட்டது.

3 சங்கரனே சங்காரகாரணன்

பழுதிலகடல் புடைதழுவிய படி
　முதலிய உலகுகள்மலி
குழுவிய சுரர் பிறர் மனிதர்கள்
　குலமலிதரும் உயிரவையவை
முழுவதும் அழி வகைநினைவொடு
　முதல் உருஇயல் பரன் உறைபதி
செழுமணியணி சிவபுரநகர் தொழுமவர்
　புகழ் மிகும் உலகிலே

என்பதில், சிவபரஞ்சுடரே, உருத்திரனாகி நின்று அழித்தற்றொழிலைச் செய்வித்து, எல்லாவுயிர்களையும் இளைப்பாற்றுவிக்கும் அருளைப்புரிகின்றது என்றுகூறப்படுகிறது.

பொருள் :—பழுது இலகடல் புடை தழுவிய படி முதலிய உலகுகள்—குற்றம் இல்லாதனவாகிய கடலைப் பக்கத்தே தழுவிய மண்முதலிய உலகங்களையும், மலிகுழுவிய சுரர் மனிதர்கள் குலம்-நிறைந்து கூடிய தேவர் குலமும் மக்கள் குலமும்; மலிதரும்

உயிர்—நிறைந்த ஏனைய உயிர்களும் அவை அவை—(ஆகிய) அவ்வவை. முழுவதும்—சர்வமும். அழிவகை நினைவோடு—அழியும் வகைக் கருத்தொடு. முதல்—உருத்திரனது. உரு—திருமேனியில். இயல் பரன்-இயன்று நடாத்துகின்ற சிவபரஞ்சுடர். உறைபதி—திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் திருத்தலம். சிவபுரநகர். அது செழுமணியணி சிவபுரநகர். செழுமையுடைய மணிகளால் அணிசெயப் பெற்றது. அச்சிவபுரநகரைத் தொழுவோரது புகழும் உலகில் மிகுந்து நிற்கும். புகழ் மடந்தைக்குத் தலைவர் ஆவர் என்றதாம்.

இத்திருப்பாடலில், சிவபிரானே உருத்திரரூபத்தில், உலகங்கள் முழுவதும் அழிவகை நினைவொடு நின்று, இளைப்பாற்றுந் திருவருளைச் செய்விக்கின்றனன் என்பது உணர்த்தப்பட்டது. திருமகள், கலைமகள், செயமகள் என்றதற்கேற்பப் புகழ் மடந்தை எனக்கொள்வது இங்கு பொருந்தும்.

4 மங்கை பங்கனே மறைக்கும் முதல்வன்

நறைமலிதரும் அளறொடு முகை நகுமலர்
புகை மிகுவளர் ஒளி
நிறைபுனல்கொடு தனைநினைவொடு
நியதமும்வழி படும் அடியவர்
குறைவிலதபம் அணைதர அருள் குணம்
உடைஇறை உறைவனபதி
சிறை புனல் அமர் சிவபுரம் அது
நினைபவர் செய மகள் தலைவரே

என்பதில், சிவபெருமானே மகேசுரனாகி நின்று, எவ்வுயிர்க்கும் சுகதுக்கபோகம் துய்ப்பிக்கும் வகையில் மறைத்தற்றொழிலைப் புரிகின்ற உண்மை உணர்த்தப்பட்டது.

பொருள் :—நறைமலிதரும் அளறு—வாசனை மிக்க சந்தனம். அளறு—சந்தனம். முகை—மொட்டு, அரும்பு, போது, 'மொட்டறுமலர் பறித்திறைஞ்சி, 'போதொடு நீர் சுமந்தேத்தி, 'அப்போது மலர் தூவி,' 'அரும்பொடு மலர்கள் கொண்டு' 'அரும்போடு மலர் பறித்திட்டுண்ணார்'. நகுமலர்—மலர்ந்தபூ. புகை—நறும் புகை; தூபம். மிகுவளர் ஒளி—தீபம். நிறைபுனல்—அபிடேக பாத்திரத்திற் பூரித்த தீர்த்தம். கொடு—கொண்டு தனை — சிவபரம்பொருளாகிய தன்னை. நினைவொடு—கருத்தொடு. நியதமும்—நியதியாக் நாடோறும். வழிபடும் அடியவர்-பூஜை செய்யும் அடியார்கள். குறைவு இலபதம் அணைதர—குறைவில்லா இன்பம் விளைக்கும் பதமுத்தியை அடைய. அருள் குணம் உடை இறை—அருள் செய்யும் பண்புடைய முழுமுதல்வன். உறை—திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும். வனம்—அழகிய பதி—திருத்தலம் சிவபுரம். அது சிறைபுனல் அமர் சிவபுரம். நீரை வாய்க்கால் வழியாகச் செலுத்தி வயல் முதலியவற்றிற் சிறைப்படுத்தலின் "சிறைபுனல்' எனப்பட்டது. புனல் அமர் புரம்—நீர்வளம் மிக்கதலம். அது முன்மொழிப் பொருளது. சுட்டுப்பொருளது அன்று. இங்கு அகரம் சுட்டுப் பொருளைத் தாராது. முதற்பாட்டில் 'மலரது' என்றதும் அத்தகையதே. அதைத் தியாநம் செய்து தொழுவோர் வெற்றிமடந்தைக்குத் தலைவராய் வீற்றிருப்பார்.

இத்திருப்பாடலில், சிவபிரானே மகேசனாகி நின்று மறைத்தற்றொழிலைப் புரிந்து எவ்வுயிர்க்கும் போகமும் வீடும் தரும் முதல்வன் என்பது உணர்த்தப்பட்டது. மகேசுர மூர்த்தம் இருபத்தைந்தும் வெவ்வேறு போகங்களில் நோக்கம் உடையார் பூஜை செய்யற்கு உரிய சிவனுருவங்கள். அதனை முன் ஈரடியும் விளக்கின. பேரூர்ப்புராணத்தில் இவற்றின் பயனை அறிந்து கொள்ளலாம்.

5 சச்சிதாநந்தமே சதாசிவமூர்த்தியாகிய அநுக்கிரககர்த்தா.

சினமலிஅறு பகைமிகுபொறி சிதை
தருவகை வளிநிறுவிய
மனனுணர்வொடு மலர் மிசையெழு
தருபொருள்நிய தமும் உணர்பவர்
தனதெழில் உருவதுகொடு அடை
தகுபரன் உறைவது நகர்மதிள்
கனமருவிய சிவபுரம்நினை பவர்கலைமகள்
தர நிகழ்வரே

என்பதில், சதாசிவமூர்த்தியாகிய நின்று, ஐந்தொழிற்படும் உயிர்களுள் அநுக்கிரகத்திற்கு உரிய பக்குவர்க்குத் திருவருள் செய்யும் முழுமுதல் சிவபரம் பொருளே என்பது உணர்த்தப்பட்டது.

பொருள் :—சினம் மலி அறுபகை—காமம், குரோதம், உலோபம், மோகம், மதம்,

திருநாவுக்கரசு நாயனார்

[வித்துவான் திரு சி. அருணைவடிவேலு முதலியார், காஞ்சிபுரம்]

கடலிற் கல் மிதந்தமை

திருநாவுக்கரசர் மீது ஏவப்பட்ட யானை அவரையும் ஒன்றுஞ் செய்யாது மீண்டதையும், மீண்ட அவ்யானை சமணர்களைப் பெரிதும் துன்புறுத்தியதையும் கண்ட பல்லவன் சினங்கொண்டு, 'எதற்கும் அஞ்சாத மனவலியுடைய அக்கொடியோனை இனிநாம் என்ன செய்வது? சொல்லுமின்' என்று சமணர்களை வினவினான். அவர்கள், 'நம்முடைய சமயத்திலிருந்து கற்றுக் கொண்ட மந்திரத்தைக் கொண்டே எங்கள் மீது யானையை ஏவி எங்களைத் துன்புறத்திய அந்தத் தருமசேனன் ஒழிந்தாலன்றி, உனக்கு இப்பொழுது உண்டாகியிருக்கின்ற இகழ்ச்சியான நிலை நீங்காது' என்றனர். அவர்கள் முதலில் இவ்வாறு கூறியது, பின்பு, தாங்கள் கூறும் தண்டனையை 'இது மிகவும் கொடுமையானது' என்று அரசன் மறுத்தொழியாது, 'தகும்' எனச்சொல்லி ஏற்றுக்கொள்ளுதற்பொருட்டேயாம்.

"நானறி விச்சையும் (மந்திரமும்) நமச்சிவாயவே" எனவும், "நின்றுண்பார் எம்மை நினையச் சொன்னவாசகம் எல்லாம் மறந்தோம், அன்றே" எனவும் நாயனார் உண்மையைத் தெள்ளத் தெளிய உணர்த்தியிருப்பவும், அவ்வுண்மை மொழிகளில் ஒன்றேனும் அரசன் செவியிலும் பிறர் செவிகளிலும் புகுதாதவாறு, 'எங்கள் சமயத்திலிருந்து கற்றுக்கொண்ட மந்திரத்தினால்தான் இவன் பிழைத்தான்; பிழைத்தான்' என்று சமணர்கள் இடும் கூக்குரலையும் அவர்கள் வடிக்கும் கண்ணீரையும் கேட்டும், கண்டும் அவைகளிலே மயங்கிப் போன பல்லவன், மேலும் சினம் மிகப் பெற்றவனாய், 'நமது ஆட்சியும், புகழும் அழியாது நிலைபெறுதற்குத் தருமசேனனது ஒழிவு இன்றியமையாதது என்பதை நான் முன்னமே நன்குணர்ந்துள்ளேன்; ஆதலின் அதனை நீங்கள் எனக்கு மீளமீள எடுத்துச் சொல்லி வற்புறுத்துதல் வேண்டா; இனி அவனை இன்னது செய்வது என்பதை

மாற்சரியம் (அர்ஷட்வர்க்கம்) என்னும் தீய பண்புகள். அப்பகை மிக்கவை பொறிகள். அப்பொறிகள் (இந்திரியங்கள், மெய்வாய் கண் மூக்குச் செவி) சிதையும் வகையில்; வளி நிறுவிய—பிராணாயாமம் செய்து அடக்கிநிறுத்திய. மனன்—மனம். 'வாயுநிற்ப மனம் நிற்கும்.' மனத்தை அடக்கப்பொறிகளைப் புலன் வழிச்செல்லாதவாறு தடுத்தல் ஒன்றே போதாது பிராணனை ஆயாமம்செய்துதான் மனத்தை அடக்குதலே இன்றியமையாதது. மனம்எங்கு உண்டு. அங்கு வாயுவும் உண்டு. வாயுவை அடக்கின் மனம் தானே அடங்கும். பிராணாயாமம் பிரத்தியாகாரம் இரண்டும் ஒன்றன்பின்ஒன்றா நிற்றல் அறியத்தக்கது. உணர்வுசுண்டுப்பதிஞானம், பதிஞானத்தால், 'கருதுவார் இதயத்துக்கமலம் என்னும் மலர் மிசை எழுகின்ற மெய்ப்பொருளை நியதியாக எப்பொழுதும் உணர்கின்ற இடையறா அன்பர்களை, அப்பொருள் தனது அழகிய சதாசிவத்திருமேனி கொண்டு ஆளாக்கி, அவர்க்கு உயிராய் நின்று அநுக்கிரகம் புரியும். அச்சதாசிவ மூர்த்தி திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் நகர் சிவபுரம், அது மதில் உடையது. மேன்மை மிக்கது. அச்சிவபுரத்தை வழிபடுவோர்க்குக் கலைமகள் தன் அருட்பெருக்கைத் தருவாள். அவளது அருளைப்பெற்றோர் உலகில் மிக்க ப்ரசித்தி உற்று விளங்குவார்கள். நிகழ்வு—ப்ரசித்தி.

இதனால், சதாசிவ மூர்த்தியாகி அநுக்கிரகம் புரியும் தனிமுதற்பொருள் சிவபரஞ்சுடரே என்பது உணர்த்தப்பட்டது.

இவர்க்கெல்லாம் மேலாய்ச், சைவ சித்தாந்தச் செம்பொருளாய்ச் சச்சிதானந்தமாய் விளங்கும் தனி முழுமுதலை உணர்த்துகின்ற திருப்பாடலையும் பிறவற்றையும் அடுத்து அறிவோம். (தொடரும்)

மட்டுமே நீங்கள் எனக்குத் தெரிவித்தல் வேண்டும்' என்றான். உடனே சமணர்கள், 'இனி அந்தத் தருமசேனனைக் கருங்கல்லோடு சேர்த்துக் கயிறுகளால் நன்கு பிணித்துக் கடலின் நடுவே கொண்டு போய்த் தள்ளி விடுதல் வேண்டும்' என்று சிறிதும் வாய் கூசாமற் சொன்னார்கள்.

பல்லவன், அவ்வாறே செய்யுமாறு தண்டஞ் செய்வாரை அழைத்துக் கட்டளை யிட்டான். அவர்கள் நாயனாரை அழைத்துக்கொண்டு சென்றார்கள். தண்டஞ் செய்வார் எவ்வாறேனும் திருநாவுக்கரசர்க்கு உள்ளாகி அவரை விட்டுவிடப் போகிறார் கள் என்னும் எண்ணத்தால், சமணர்கள் யாவரும் அவர்களோடு உடன் சென்றார் கள். நாயனார் கவலையற்ற உள்ளத்தோடும், மலர்ந்த முகத்தோடும் தண்டத்தவரோடு சென்றார். தண்டத்தவர்கள், நாயனாரைக் கடற்கரைக்கு அழைத்துச் சென்று, பெரிய தொரு கருங்கல்லோடு அவரைச் சேர்த்து, வலிய கயிறுகளால் இறுகப் பிணித்து, ஒரு படகில் ஏற்றிக் கடலின் நடுவே கொண்டு போய்த் தள்ளிவிட்டு, அரசன் கட்டளை முடிந்தமையின் அங்கு நிற்க விரும்பாது மீண்டு கரையை அடைந்தனர். எல்லா வற்றையும் கண்ணாரக் கண்டிருந்த சமணர் கள், தங்கள் எண்ணம் முடிந்தது என்று நினைந்து, அமைதியுடன் தங்கள் இடத்திற்கு மீண்டனர்.

அவர்கள் செயல் அதுவாக, நாயனார், தம்மைக் கல்லிற் பிணிக்கும் பொழுதும், படகில் ஏற்றிச் செல்லும்பொழுதும், 'அனை வரையும் காப்பவனும் அழிப்பவனும் சிவபிரானே; அதனால், அவன் காக்க நினைப் பாரைப் பிறர் அழிக்க இயலாது; அவன் அழிக்க நினைப்பாரைப் பிறர்காக்க இயலாது. அவன் என்னை இன்னது செய்யக் கருது கின்றான் என்பதை யான் அறியேன்; அவன் என்னை யாது செய்யினும் செய்க; அவன் நினைவின் வழி என்ன நிகழ்க; நான் செய்ய வேண்டுவது, எந்நிலையிலும் அவனை வாழ்த் தல் வணங்கல் முதலியனவாய் உள்ள அவன் பணியே; அதனையே இப்பொழுது செய் வேன் என்று நினைத்து, யாவரையும் அழி வினின்றும் காப்பாற்றும் இயல்புடைய தாகிய திருவைந்தெழுத்தை, அன்பே காரண மாகப் பற்றி உணர்வு மேலீட்டால், அரிய தமிழ்ப் பதிகத்தால் புகழ்ந்துபாடத் தொடங் கினார். அத்திருப்பதிகத்தின் முதற்றிருப் பாடல் வருமாறு.

"சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப்பூட்டியோர் கடலிற்பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே"

இத்திருப்பதிகமே, நாயனார் நம்மனோர் பொருட்டாக இந்நிலவுலகிற்கு வந்து, பல இன்னல்களையும் ஏற்றுக்கொண்டு உலாவி யருளிய அருள் வாழ்க்கையின் பயனாக அருளிச் செய்தளித்த திருப்பதிகங்கள் பல வற்றின் முடிந்த முடிபாக அளித்தருளிய திருப்பதிகம்; "சொற்குறுதிக்கு அப்பர்" என ஆன்றோர் கூறுவர். அவ்வாறே இத னுள்ளும், 'நற்றுணையாவது நமச்சிவாயவே' எனத் திருவைந்தெழுத்தின் உண்மையினை ஒருதலையாக அறுதியிட்டருளிச் செய்தலைக் காண்கின்றோம். மற்றும் பலவாறாக அதன் உண்மையினை இதனுள் நாயனார் வலியுறுத் தருளுதலைக் காணலாம். மூவர் முதலி களுள் ஏனை இருபேராசிரியர்தாமும் இவ்வாறே

"ஏத்துவார்க்கு இடரான கெடுப்பன
அஞ்செழுத்துமே" எனவும்,

"நமன்தமர் கொண்டு போமிடத்து
அல்லல் கெடுப்பன அஞ்செழுத்துமே"
எனவும்;

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த்து எய்து போழ்தினும்
அம்மையினும் துணை அஞ்செழுத்துமே"
எனவும்;

"அண்டம் அளிப்பன அஞ்செழுத்துமே"
எனவும்,

"வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே" எனவும்,

"நான் மறக்கினும் சொல்லும் நா
நமச்சிவாயவே" எனவும்,

பிறவாறும், இஃதொன்றனையே பிரிநிலை ஏகாரத்தால், ஒரு படித்தாக வரையறுத்த ருளிச் செய்தனர். அதனால், உண்மை யாகவே, 'உய்யும் நெறியாது?' என்று ஆராய்வார்க்கு, இத் திருவைந் தெழுத்தாய மந்திரம் ஒன்றே நெறியாதல் ஒருதலை என் பது தெளிவாகும்.

'மந்திரங்கள் பலவாய் இருப்ப, அவை யனைத்தும்ஒரு நிகரனவாகாமல் இத்திருவைந் தெழுத்து மந்திரம் ஒன்றே எல்லாவற்றினும் மேலாதற்குக் காரணம் என்னை?' என்னும் ஐயம், பொதுநிலையில் உள்ளார்க்கு எழுதல் இயல்பு. அதனால், அவ்வையத்தினை, ஆசிரி யன்மார்கள், குறிப்பாகவும் வெளிப்படை யாகவும் நீக்கி உண்மையைத் தெளிவித் துள்ளார்கள். அவ்வகையில், இந்நாயனார், திருவைந்தெழுத்தின் உண்மையை, இத்திருப் பதிகத்துள் இனிதெடுத்து விளக்கியருளினார். அதனுள் மிக விளக்கமாய் அமைந்ததொரு திருப்பாடல்,

"முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
றன்னெறி யேசர ணாதல் திண்ணமே
அந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெலாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே"

என்பது.

இத் திருப்பாடலுள், "முன்னெறியாகிய முக்கணன்றன்னெறி" என்பதனால், 'சிவ நெறியே உலகிலுள்ள எல்லா நெறிகட்கும் முற்பட்ட நெறி' என்பதனை அருளிச்செய் தார். "முதல்வன் முக்கணன்" என்பதனால், 'சிவநெறியே முற்பட்ட நெறியாதற்குக் காரணம், சிவபிரானே உலகிற்கு முன்னோனு தலே' என்பதனை யருளிச் செய்தார். சிவபிரானே உலகிற்கு முன்னோனாதல் ஏனை யாவரும், தோற்ற ஒடுக்கங்களாகிய முதல் ஈறுகளை உடையவராக, சிவபிரான் ஒருவனே அவற்றுள் ஒன்றும் இன்றி, என்றும் பெற்றியனாய் நிற்றல் பற்றி நன்கறியப் பட்டது. இதனை "ஈறிலாதவன் ஈசன் ஒரு வனே" என வேறோரிடத்தில் எடுத்தோதி யருளினார் நாயனார். "முக்கணன்றன் னெறியே சரணாதல்" என்பதனால், 'சிவ நெறியே உயிர்கட்குப் புகலிடமாவது, என் பதனை யருளிச் செய்தார். "திண்ணமே' என்பதனால், 'இவையனைத்தும், நூல்கள், பொருந்துமாறு என்னும் இவற்றானன்றி ஆன்றோர் ஒழுக்கமாகிய நடைமுறையானே நன்கு தெளியப்பட்டவை' என்பதனை அருளிச்செய்தார். "அந்நெறியே சென்றங் கடைந்தவர்க்கெலாம்" என்பதனால், மேற் கூறியவாற்றான் மக்கள் உண்மையை யுணரும் உணர்வுடையராயின், சிவநெறியே யாவர்க்கும் புகலிடமாவதென, அதனை மனம் பற்றி நின்று, அந்நிலையின் பயனாகச் சிவ பிரானைப் பொதுநீக்கி யுணர்தல் வேண்டும்' என்பதனை அருளிச் செய்தார். "நன்னெறி யாவது நமச்சிவாயவே" என்பதனால், அவ் வாறு சிவபிரானைப்பொது நீக்கியுணர் வார்க்கு நன்னெறியாய் நின்று அவனைப் பெறுவிப்பது திருவைந்தெழுத்தன்றி வேறில்லை என்பதனை அருளிச்செய்தார்.

இன்னும் இத்திருப்பதிகத்துள், நாயனார் திருவைந்தெழுத்தின் சிறப்பினை எத்துணை எத்துணை வகைகளால் விளக்குதல் வேண் டுமோ அத்துணை அத்துணை வகைகளிலெல் லாம் இனிது விளக்கியருளினார். இவ்வாற்றால் இத்திருப்பதிகம் எத்துணை இன்றியமையாச் சிறப்பினது என்பது தெளிவாகும்.

மற்றும், மூவர் முதலிகளுள் இந்நாயனார் ஏனை இருநாயன்மார்போல, தம் திருப்பதிகம், தன்னை ஓதுவார்க்கு இன்ன பயனைத் தரும் என்பதனை எடுத்தோதி முடித்தல் இல்லை. "தன்கடன் அடியேனையும் தாங்குதல்—என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்பதனை விதந்தோதிய நாயனார் இவராகலின், அதற் கேற்ப, முதல்வனையே பொருளாக உடைய திருப்பதிகத்தை, அவனுக்கு அடியராயினார் ஓதும் கடப்பாடுடையர். அவர், அக்கடப் பாட்டினைச் செய்யவே, அம்முதல்வன் அதற் குறிய பயனை தருங் கடப்பாட்டினை உடை யனாகின்றான் என்னும் கருத்தான் வாளாதே திருப்பதிகத்தினை முடிக்கும் வழக்கமுடை யார். ஆயினும், இவ்வொரு திருப்பதிகத் தினைமட்டும் இதனை ஓதுவார்க்கு இன்ன பயன் உண்டாகும் என எடுத்தோதி முடித் துள்ளார். அத்திருப்பாடல்,

"மாப்பிணை தழுவிய மாதோர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்து
ஏத்தவல் லார்தமக்குஇடுக்கண் இல்லையே"

என்பது. இதனால், இத்திருப்பதிகத்தை, நாயனார், எத்துணை இன்றியமையாததாக அளித்தருளினார் என்பது தெற்றென விளங்கும். இன்னதோர் அரிய பெரிய திருப்பதிகம் வெளிப்படுதற் பொருட்டே, நாயனாரை, அரசன் கல்லிற்கட்டிக் கடலிடை வீழ்த்துவித்த நிகழ்ச்சி நிகழ்ந்ததென்க. இத்திருப்பதிகம், இந்நிகழ்ச்சிக் காலத்தில் வெளிப்பட்டு, 'திருவைந்தெழுத்து இடுக்கணைத் தீர்ப்பது' என்னும் உண்மையை எத்துணைத் தெளிவுபட அனுபவமாய் எடுத்துக்காட்டுகின்றது!

இவ்வாறு நாயனார், "எப்பரிசாயினும் ஆக; ஏத்துவன் எந்தையை" என்று திருவுளங்கொண்டு நமச்சிவாயத் திருப்பதிகத்தை அருளிச்செய்யுங்கால், கடலிடை வீழ்த்தப்பட்ட கல், அதனுள் ஆழ்ந்து போகாது, தெப்பம் மிதப்பது போல மிதக்கத் தொடங்கிற்று. கல் மிதக்கவே, அதற்கேற்ப நாயனாரைக் கட்டியிருந்த கயிறுகளும் தாமாகவே அவிழ்ந்து நீங்கின. அதனால், கல்லாகிய தெப்பத்தின்மீது, நாயனார்பொலிவு பெற்று விளங்கினார்.

'நீற்றறைசூடின்றி யிருந்தது' என்பதும் 'நஞ்சு தலைக்கொள்ளா தொழிந்தது' என்பதும், 'கொல்யானை குனிந்து வணங்கிச் சென்றது' என்பதும் ஒருவாற்றாற் கூடினும் கூடலாம்; 'பெரிய கருங்கல் ஒன்று நீரிடை ஆழ்ந்து போகாது, மிதந்தது' என்பது, கூடுங்கொல்லோ!' எனப் பெரியதோர் ஐயமாம் என்னுங் கருத்தால், சேக்கிழார் நாயனார் அதற்கு விளக்கம் தருகின்றார். அன்றியும், மேற்காட்டிய அற்புதங்கள் பலவற்றிற்கும் பொருந்தும் வகையானே இவ்விளக்கத்தை இறுதிக்கண் கூறினார் எனவுங் கொள்க. அவ்விளக்கம் வருமாறு :

கருங்கல் நீரின்மேல் மிதத்தல் என்பது, பொருளியல்புகட்கு முரணான செயலாதலின், அது நம்மனோர்க்கு அதிசயச் செயலாகும். ஆயினும், பொருளியல்புகட்கு மாறான இன்னோரன்ன சில செயல்கள், மணி மந்திர ஔடதங்களில் வல்ல சிலராற் செய்யப் படுவனவேயாம். அதனால், மணி மந்திர ஔதடங்கள் பொருளியல்புகளை மாற்றியமைக்கின்றமை புலனாகும். ஆயினும், அவை, குறிப்பிட்ட பொருள்களைக் குறிப்பிட்ட காலத்திற்குக் குறிப்பிட்ட வகையில் குறிப்பிட்டவர்வழி அவ்வாறு செய்வனவாம். முதல்வனது திருவருள் எல்லாம் வல்லதாதலின், அது, தான் வேண்டும் பொழுது வேண்டிய பொருள்களை வேண்டியவாறு அடியவர் பொருட்டுச் செய்வதாகும். அத்திருவருளின் பொதுநிலையே திருவைந்தெழுந்து மந்திரமாதலின், 'அது, கருங்கல்லையும் மிதக்கச் செய்யுமோ!' என்று ஐயுற வேண்டா. திருவைந்தெழுந்தின் ஆற்றலுக்கு இக் கருங்கல்லைக் கடலில் மிதக்கச் செய்தமை ஒரு பெருஞ் செயலன்று; ஏனெனின், மேற் கூறியாவாறு ஏனைச் சில மணி மந்திர ஔடதங்களாலும் இயலக் கூடியது இது. ஆனால், உண்மையில் திருவைந்தெழுத்தால் ஆகும் பெருஞ்செயல், உயிர்களைப் பற்றியுள்ள மும்மலங்களை மெலிவித்து, அவை காரணமாகப்பற்றியுள்ள இருவினைத்தொடக்கையறுத்து, அதுகாரணமாக எல்லையின்றி வரும் பிறவிகளுக்கு ஒரு முடிவைத் தருதலே யாகும். இது, அத்திருவைந்தெழுத்து மந்திரத்தாலன்றி, ஏனை மணி மந்திர ஔடதங்களுள் ஒன்றாலும் ஆவதன்று. ஆகவே, வேறு எதனாலும் ஆகாத இப் பெருஞ்செயலை எல்லா உயிர்கட்கும் செய்ய வல்லதாகிய திருவைந்தெழுத்து, வேறு சில வற்றாலும் ஆகக்கூடிய இச் செயலை அருளாசிரியராகிய நாயனார்க்குச் செய்தது என்பதில் ஐயம் உண்டாதற்கு இடன் யாதுளது! இக் கருத்தமைந்த சேக்கிழாரது செய்யுள்,

"இருவினைப் பாசமும் மலகல்லார்த் தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்கள் ஏறிட
அருளும்மெய் அஞ்செழுத்து அரசை இக்கடல்
ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க
வேண்டுமோ!"

என்பது. இதனுள், 'இருவினை' என்றது நல்வினை தீவினையாய்க் காரியப்படும் காரிய கன்மத்தை. அவற்றிற்கு முதலாயுள்ளது மூலகன்மமாதலின், அது மும்மலங்களுள் ஒன்றாகவைத்து எண்ணப்பட்டது. பவம் —பிறப்பு. 'ஆன்மாக்கள்' என்பது 'மாக்கள்' எனத் தலைக் குறையாய் வந்தது. 'அரசை என்றது, 'ஆளுடையஅரசுகளை' என்றவாறு. 'இக்கடல்' என்புழி' நீக்கப் பொருள்தரும் ஐந்துனுருபுவிரித்து, அதனை 'ஏற்றிடல்' என்பதனோடு முடிக்க. 'ஒருகல் மேல்' என்புழி, 'ஆக' வென்பது தொகுத்தலாயிற்று; 'மேலாக' என்றது, 'மிதக்க' என்றவாறு இதனுள், இருவகைப்பட்ட வினைகள் பலவும் கயிறுகளாகவும், மும்மலங்கள் மூன்று கற்

களாகவும், ஏழுவகைப்பட்ட பிறவிகள் ஏழு கடல்களாகவும் உருவகஞ் செய்யப்பட்டன. 'பல கயிறுகளால், மூன்று கற்களில் பிணிப்புண்டு ஏழுகடலுள் தாமே வீழ்ந்து கிடக்கின்ற எண்ணற்ற உயிர்களை அக்கற்களை மிதக்கச் செய்து, அக் கயிறுகளும் அவிழ, அக்கடல்களினின்றும் கரையேற்றுவதாகிய திருவைந்தெழுத்து, சிலகயிறுகளால் ஒரு கல்லில் கட்டப்பட்டு, ஒருகடலில் கொடியோர் சிலரால் வீழ்த்தப்பட்ட ஒருவர் அருளாளரைக் கரையேற்ற வல்லதாதல் சொல்லவேண்டுமோ!' என்பது நயம்.

நாயனார் கடல் கடந்து கரையேறுதல்

இவ்வாற்றால், நாயனார், கருங்கல்லே தெப்பமாக மிதக்க, அதன்மீது இனிதே வீற்றிருந்து திருப்பதிகத்தை முழுவதும் அருளிச்செய்தார். திருப்பதிகத் திருப்பாடல்களை அவர் அருளிச் செய்யுந் தோறும், கருங்கல், மெல்ல மெல்லக் கடல் அலைகளால் கரை நோக்கித் தள்ளப்பட்டது. நாயனார் அதன் மீது, படகின்மீதேறிக் கடலில் மகிழ்ச்சியாகச் சென்று மீள்வார் போல வந்துகொண்டிருந்தார். நாயனாரைக் கருங்கல்லாகிய சிவிகைமேல் வைத்துத் தன் அலைகளாகிய கைகளால் தான் ஒருவனே தன் தலைமேல் தாங்கிச் செல்வதற்குக் கடல் இறைவனாகிய வருணனும் முன் பிறப்பில் பெரிய தவத்தைச் செய்திருந்தான். இவ்வாறு வருணன், திருநாவுக்கரசரை கருங்கல்லே சிவிகையாக அதன் மேல் வைத்துத் தலையில் சுமந்து கொண்டு வந்து, திருப்பாதிரிப்புலியூருக்கு அருகில் கரையேற்றினான். சிவபிரான் தனது திருவருட்பெருக்கால் திருநாவுக்கரசரைக் கடலினின்றும் கரையேற விட்ட அந்த இடம் ஒரு சிற்றூராய் 'கரையேறவிட்ட குப்பம்' எனப் பெயர் பெற்றது; சிவபிரானும் அத் திருப்பாதிரிப் புலியூரில், 'கரையேற விட்ட முதல்வன்' என்ற ஒரு பெயரைப் பெற்றான். சமணர்கள் வாழ்ந்த, 'பாடலிபுத்திரம்' என்னும் ஊர், இத் திருப்பாதிரிப்புலியூர்ப்பக்கத்தில் இருந்ததே. அதனால், சமணர்கள் நாயனாரைக் கடலில் வீழ்த்திய இடத்திற்குச் சிறிது தொலைவிலேயே நாயனார் கரையேறினார் என்க.

நாயனார், கல்லே மிதப்பாகக் கரையேறியதைக் கண்ட சிவனடியார்கள், கடல் முழக்கம் போல 'அரகர' முழக்கத்தைச் செய்து, அவரை வணங்கிச் சூழ்ந்து நின்று போற்றினார்கள். அடியார்கள் செய்த 'அரகர' முழக்கத்தைக் கேட்டுக் கடலும் அம் முழக்கத்தையே செய்வதுபோல் ஒலித்தது.

திருப்பாதிரிப்புலியூரில் இறைவனை வணங்கல்

அப்பால் திருநாவுக்கரசர் தம்மைச் சூழ்ந்துள்ள அடியவர் கூட்டத்தோடும் திருப்பாதிரிப்புலியூர்த் திருக்கோயிலை அடைந்து, அங்கு எழுந்தருளியுள்ள பெருமானைக்கண்டு தீயவர் இழைத்த தீங்குகள் பலவற்றினின்றும் தம்மைக் காத்தருளிக் கல்லிலே மிதப்பாகக் கடலைக் கடந்து கரையேறச் செய்த அவனது திருவருட்பெருக்கில் ஈடுபட்டுத் தம்மை மறந்த அன்பு மேலீட்டால் நிலத்திலே வீழ்ந்து வணங்கி, எழுந்து நின்று அவனது திருவருள்முறைமை உலகத்தார் அனைவருக்கும் இனிது விளங்குமாறு, "ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாகி" என்று எடுத்துத் தண்டமிழ்த்த திருப்பதிகம் பாடியருளினார். அம் முதற்றிருப்பாடல்.

"ஈன்றாளு மாய் எனக்கு எந்தையு மாய் உடன் தோன்றினராய்
மூன்றா யுலகம் படைத்துகந் தான்மனத் துள்ளிருக்க
ஏன்றான் இமையவர்க்கு அன்பன் திருப்பாதிரிப் புலியூர்த்
தோன்றாத் துணையாய் இருந்தனன்தன்னடியோங்களுக்கே"

என்பது. இத்திருப்பாடலுள், 'இறைவன் பலருக்கும் தோன்றாதிருத்தல் போலவே, தன் அடியார்கட்கும் தோன்றாதே இருக்கின்றான்; ஆயினும், அடியவர்கட்கு வரும் நலம் தீங்குகளிலெல்லாம் அவன் முன்னின்று பற்பலவாற்றால் அவைகளை முடித்தும், தடுத்தும் துணைபுரிகின்றான்' என்று அருளிச் செய்தார். அவ்வாறு அருளிச்செய்யுமிடத்து, அவன், தமக்குத் தம்மை ஈன்ற தாயார் வாயிலாகவும், தந்தையார் வாயிலாகவும், தமக்கையார் வாயிலாகவும் நலங்கள் பல புரிந்தமை மையக் குறித்தருளினார்.

மற்றும் பல அரிய பெரிய உண்மைகளை இத்திருப்பதிகத்துள் நாயனார் எடுத்து அருளிச் செய்தார். அவையெல்லாம், 'எந்நிலையிலும் புகலிடமாய் நின்று காப்பது சிவபிரானது திருவடியே' என்பதையும் 'அதனை ஒரு

மைப்பட்டமனத்தோடு திருவைந்தெழுத்தை உணர்ந்து நிற்கும் முகத்தால் மறவாதிருத்தல் வேண்டும் என்பதையும் அடிநிலையாகக் கொண்டவையே. அந்நிலையில், எப்பிறவிவரி னும் அப்பிறவிகளில் சிவபிரானது திரு வடியை மறவாதிருக்கும் வரத்தினை அப்பெரு மானை வேண்டியாயினும் பெறுதல் வேண்டும். மனிதப் பிறப்பே வரினும் எவையேனும் காரணங்கள் பற்றி அவனை மறத்தல் கூடும் என்பதற்கு எனது வரலாறே சான்றாதலின் பிறவியுள் வீழாது என்று கொள்ளுமாறு அப்பெருமானை வேண்டிக் கொள்ளுதலே சாலச் சிறந்தது என்பவற்றைக் குறிப்பாக அருளிச்செய்தார். இத்தகைய அரிய திருப் பதிகம் ஒன்று அதுபோழ்து திருப்பாதிரிப் புலியூர்ப்பெருமானது திருமுன்பில் வெளிப் பட்டருளியது. இதனுள், முதற்கண் "தோன்றாத் துணையாய் இருந்தனன்" என்று இறைவனை நாயனார் குறித்தருளினமையால், அத்தலத்தில் பெருமானுக்கு தோன்றாத் துணை நாதன் என்னும் திருப்பெயர் உளதாயிற்று.

திருவதிகை மீளல்

பின்னர்த் திருநாவுக்கரசர், தம்மைப் பரசமயப் படுகுழியினின்றும் எடுத்துக் காத் தருளிய திருவதிகை வீரட்டானப் பெரு மனது திருவடிகளையும் பெரிதும் நினைந்து, அளவிறந்த ஆர்வம் பொங்க, அங்குநின்றும் திருவதிகை நோக்கி நடந்தருளினார்.

வழியில், 'திருமாணிகுழி', 'திருத்தினைநகர்' என்னும் திருத்தலங்களில் சிவபிரானைக் கண்டு வணங்கித் திருப்பதிகங்களை அருளிச் செய்து, சோலைகள் சொரிகின்ற பூக்களின் நறுமணம் தமது திருவடிகளிற் பொருந்தி இனிது கமழ, மெய்ப்பொருளை விளக்கி யருளும் சொற்களுக்குத்தலைவராகிய நாயனார் திருக்கெடில நதியைக் கடந்து, திருவ திகையை வந்து அடைந்தார்.

திருவதிகையிலுள்ளோர் யாவரும் இன்றமிழ் வேந்தராகிய திருநாவுக்கரசர், சமணர் இழைத்த தீங்குகள் பலவற்றையும் சிவபெருமானது திருவருள் வன்மையால் வென்றுவிளங்கி வருதலையறிந்து, நகரத்தைத் தோரணம், இரத்தின மாலை முதலியவை களால் நன்கு அணிசெய்து, மங்கல வாத்தி யங்கள் முழங்க, ஆடல் பாடல் முதலியவை களுடன், பொற்சுண்ணமும் பூவும் பொரியும் தூவி, பெருமகிழ்வுடன் எதிர் கொண்டார் கள். அந்நிலையில் நாயனார், சிறந்த சிவ வேடப் பேலிவும் சிவபிரானது திருவடியிலே பதிந்த மனமும், அன்புக் கண்ணீர் மழையும், திருப்பதிகப்பாடலும் உடையவராய், வீதி யினுள்ளே சென்றார். அவரது எழுதற் கரிய திருக்கோலத்தை நாமெல்லாம் நம் நெஞ்சிற் பதித்து உய்தற்பொருட்டுச் சேக் கிழார் தமது சொல்லோவியத்தால் நன்கு எழுதிக் காட்டுகின்றார். அவ்வரிய திருப் பாட்டு,

"தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரும் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போல் அன்பு நீர்பொழி கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே"

என்பது. அத்திருக்கோலத்தைக் கண்டவர் யாவரும் தம்மை யறியாமல் சிவபெருமானது திருவருளில்கலந்து,கைகளைச்சிரமேற்குவித்து நாயனாரை வணங்கினர். அவரது அருள் தோற்றமானது கொடியோரையும் மனங் கனிந்து உருகச் செய்யும் எளிமையும் அருமை யும் உடையதாய் இருந்தமையால், அதனைக் கண்டவர்கள் 'இத்திருமேனியைக் கண்டும், இதற்குப் பலவாற்றானும் தீங்கு இழைக்கச் சமணர்களுக்குக் காழ்ப்புத் தோன்றிற்றே; அது பெரிதும்கொடுமையை உடையது' எனக் கூறினர்.

இவ்வாறு பலர் பலவற்றைச் சொல்லிச் சமணர்களை இகழ்ந்து நாயனாரைப் போற்றி செய்ய அடியார் குழாத் துடனே நாயனார் திருவீரட்டானத்தை அடைந்து, உள்ளே, சென்று ஆராத பேரன்பால் இறைவனை வணங்கி, "இப்பெருமானை முன்பு எனது அறிமையால் இகழ்ந்திருந்த ஓர் அவலநிலையை என்னென்பேன்' எனக் கூறும் ஏழைத் திருத் தாண்டகத்தை அருளிச் செய்தார்.

பின்பு, மற்றும் அடையாளத் திருத் தாண்டகம், போற்றித் திருத்தாண்டகம், திருவடித் திருத்தாண்டகம், காப்புத் திருத் தாண்டகம் முதலிய பல அரிய திருப்பதிங் களை அருளிச்செய்து, அத்தலத்திலே உழவாரப்பணி செய்து கொண்டிருந்தார்.

பல்லவன் சைவனுதல்

அந்நாளில், பல்லவன் நாயனுரது உண்மை நிலையையும், சமணர்களது பொய்ம்மை நெறியையும் உணர்ந்தவனுய், தான் செய்த அளவிடற்கரிய பெருங்குற்றத்திற்கு மனம் வருந்தினவனுய், திருவதிகையில் வந்து திருநாவுக்கரசரை வணங்கி, தன்னை மன்னித்தருளுமாறு வேண்டினுன். அவர், 'தவறு செய்தவர்கள் அதனை உணர்ந்து தன்னை அடைவார்களேயாயின் அத் தவறுகளைப் பொறுத்து அவர்களுக்கு அருளைப் புரிபவன் எங்கள் சிவபெருமான்; ஆதலின். அவனை அடைக' என்று அருளிச் செய்த குறிப்பினுல், பல்லவன் அப்பொழுதே சமண சமயத்தைத் துறந்து, சிவபிரான் திருவடிகளை அடைந்து, அப்பெருமானுக்கு அடியவன் ஆனுன்.

அதன்பின்பு, தான் செய்த குற்றத்திற்கெல்லாம் கழுவாயாக 'பாடலிபுத்திரத்தில் தான் சமண சமயவளர்ச்சிக்காக அமைத்திருந்த பள்ளிகளையும் பாழிகளையும் இடித்துக் கொணர்ந்து, திருவதிகையில் சிவபிரானுக்குத் தன்பெயரால், 'குணதரவீச்சரம்' என்ற ஒரு திருக்கோயிலைக் கட்டினுன். எவ்விடத்திலும் சமண சமயத்திற்கெனத்தான் வைத்திருந்தநிவந்தங்களையெல்லாம்நீக்கிவிட்டான். அதனுல், அன்றேடு சமணசமயம் வடதமிழ் நாட்டில் இருந்த இடம் தெரியாமல் மறைந்தொழிந்தது; சைவ சமயம் தழைத்தோங்கிற்று. திருநாவுக்கரசர் திருவதிகையில் திருவீரட்டானப் பெருமானுக்கு மிகச்சிறப்புடன் பணிசெய்து கொண்டிருந்தார்.

(தொடரும்)

செய்திகள்

திருப்பெருந்துறை : ஆத்மநாதப்பெருமான் கோயிலில் ஆருத்திர தரிசன பெருவிழா 12—12—61 முதல் 22—12—61 வரை நடைபெற்றது.

கரூர் : அபயப்பிரதான ரங்கநாதசுவாமி கோயிலில் வைகுண்ட ஏகாதசி விழா 8—12—61 முதல் 27—12—61 வரை நடைபெற்றது.

நாகப்பட்டினம் : சௌந்தரராஜப் பெருமாள் கோயிலில் வைகுண்ட ஏகாதசி விழா 8—12—61 முதல் 17—12—61 வரை நடைபெற்றது.

திருவெண்காடு : அகோரமூர்த்திக்கு 3-12-61-ல் மகாருத்ராபிஷேகம் நடைபெற்றது.

ஸ்ரீரங்கம்: அரங்கநாத சுவாமி கோயிலில் வைகுண்ட ஏகாதசிப் பெருவிழா 7-12-61 முதல் 28—12—61 வரை நடைபெற்றது.

சுசீந்திரம் : தாணுமாலயமூர்த்தி கோயிலில் மார்கழித் திருவிழா 13—12—61 முதல் 22—12—61 வரை நடைபெற்றது. இன்னிசை யரங்குகளும் நடைபெற்றன.

ஆத்தூர் : பிரசன்ன வெங்கடேசுவர சுவாமி கோயிலில் வைகுண்ட ஏகாதசி விழா 8—12—61 முதல் 28—12—61 வரை நடைபெற்றது.

திண்டுக்கல் : சீனிவாசப் பெருமாள் கோயிலில் திருவத்ய யனேத்சவம் 8—12—61 முதல் 28—12—61 வரை நடைபெற்றது.

கோட்டை-சேலம் : சுந்தரராஜப்பெருமாள் கோயிலில் வைகுண்ட ஏகாதசி விழா 7—12—61 முதல் 28—12—61 நடைபெற்றது.

செவ்வாய்ப்பேட்டை—சேலம் : பிரசன்ன வெங்கடாசலபதி பெருமாள் கோயிலில் வைகுண்ட ஏகாதசிப் பெருவிழா 7—12—61 முதல் 28—12—61 வரை நடைபெற்றது.

திருமருகல்

(இரத்தினகிரீசுவரர் கோயில்)

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா,யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உள் மெலிவே

—திருஞானசம்பந்தர்.

பெருக லாந்தவம் பேதைமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருக லாம்பர மாயதோ ரானந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே

—திருநாவுக்கரசர்.

திருஞானசம்பந்தர் வரலாற்றுச் சம்பந்தமுடைய திருத்தலங்களில் ஒன்று திருமருகல். இது சோழநாட்டில் பாடல்பெற்ற பதியுமாகும். தஞ்சைமாவட்டம் நன்னிலம் பகுதியிலிருக்கிறது. மாயூரம்-அறந்தாங்கி இருப்புப்பாதையில் நன்னிலம் புகைவண்டி நிலையத்துக்குக் கிழக்கே ஏழுகல் தொலைவிலிருக்கிறது. நன்னிலத்திலிருந்து நாகப்பட்டினம் செல்லும் பஸ்கள் இவ்வூர் பக்கமாகச் செல்கின்றன.

நீர்வளம், நிலவளம் மிக்க அழகிய சிற்றூர் திருமருகல். கோயில் நடுநாயகமாய் விளங்குகிறது. கோபுரமும் அதன் முன் இருக்கும் திருக்குளமும் அழகிய தோற்றமுடையவை. (பின் அட்டைப்படம் பார்க்க) திருக்குளத்தின் கரைமேல் முத்துவிநாயகர் கோயில் இருக்கிறது. கோயிலின் கிழக்கு வாயிலில் 68 அடி உயரமுள்ள ஐந்து நிலைக் கோபுரமும், தெற்கு வாயிலில் அம்மன் சந்நிதிக்கு நேரே மூன்று மாடக்கோபுரமும் இருக்கின்றன. கோயில் செயற்கை மலை போல் கட்டப்பெற்றது. சிலந்திச்சோழன் எனப்படும் கோச்செங்கட் சோழன் அமைத்த எழுபதுமாடக் கோயில்களில் இதுவும்ஒன்று. கட்டுமலைமேல் ஒரு பிரகாரமும், கீழே ஒரு பிரகாரமும் இருக்கின்றன. தெற்கு வெளிப் பிரகாரத்தில் சாஸ்தா, சப்தமாதா இவர்களின் சந்நிதியிருக்கிறது. தென்மேற்கு மூலையில் சுரந்தீர்த்த விநாயகர் சந்நிதி உள்ளது. சோழ மன்னன் ஒருவன் வெப்பு நோயால் துன்புற்று இந்த விநாயகமூர்த்தியை வழிபட்டு நோய் நீங்கப்பெற்றான் என்பது கர்ண பரம்பரைச் செய்தி. இப்போதும் சுரநோய் கண்டவர்கள் இவரை வேண்டிக் கொண்டு நோய் நீங்கப்பெறுகின்றனர். வடக்குப் பிரகாரத்தில் சந்தான விநாயகர் சந்நிதி இருக்கிறது. அதற்கு எதிரில் மேற்கு நோக்கி ஒரு சிவலிங்கமூர்த்தி காணப்படுகிறார். இவரைப் பிரயாவிடையார், திருமருகலுடையார் என்றழைக்கின்றனர். இவர் கோயில் மிகப் பழைமையானது என்று சொல்லப்படுகிறது. இதற்கருகில் தெற்கு பார்க்க சௌந்தரநாயகியம்மன் சந்நிதி இருக்கிறது.

தெற்கு உட்பிரகாரத்தில் நால்வர், மற்ற நாயன்மார் சந்நிதிகளும், மேற்குப் பிரகாரத்தில் பிரதான விநாயகர், முருகன், கஜலட்சுமி சந்நிதிகளும், வடக்குப் பிரகாரத்தில் சண்டேசுவரர், நடராஜர் முதலியவர்களுடைய சந்நிதிகளும் உள்ளன.

கட்டுமலைமேல் மூலஸ்தான சுயம்பு மூர்த்தியான இரத்தினகிரீசுவரர் கிழக்குநோக்கி எழுந்தருளியுள்ளார். இவருக்கு மாணிக்க வண்ணர் என்ற அழகிய திருநாமமும் உண்டு. இந்த சந்நிதிக்குத் தென்புறம் சோமாஸ்கந்தர் சந்நிதி இருக்கிறது. வெளிப் பிரகாரத்தின் வடகிழக்கே அம்பிகையின் தெற்கு நோக்கிய சந்நிதி இருக்கிறது. தேவியின் திருப்பெயர் வண்டுவார்குழலி என்பது. ஆமோதள நாயகி என்றும் கூறுவர்.

இத்தலத்திற்கு மூன்று தீர்த்தங்கள் முக்கியமானவை. இலக்குமிதீர்த்தம் என்பது கோயிலுக்கு முன் இருக்கும் திருக்குளம் (பின் அட்டைப்படம் பார்க்கவும்). இந்த தீர்த்தத்தில் வரலட்சுமி நோன்பு நாளிலும், மறுநாளிலும் நீராடி மாணிக்கவண்ணரை வழிபடுவோர் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வையடைவர் என்பது மக்கள் நம்பிக்கை. இப்போதும் மக்கள் பலர் வந்து அந்த நாட்களில் நீராடி இறைவனை வழிபடுகின்றனர். தெற்கு வீதியில் ஆலய அலுவலகத்தின் பின்புறம் சீராளன்குளம் இருக்கிறது. இக்குளத்திலும் சித்திரை, ஐப்பசி அமாவாசை நாட்களில் நீராடி மாணிக்கவண்ணரையும் வண்டுவார்குழலியையும் வழிபடுவோர் புத்திரப்பேறடைவர் என்று சொல்லப்படுகிறது. இப்போது ஆலய அலுவலகமாக இருப்பது மடமாக இருந்ததென்றும், இவ்விடத்தே சிறுத்தொண்டர் மகனாகிய

சிராளன் கல்வி பயின்ற சாலையாக இருந்த தென்றும் சொல்லப்படுகின்றது. வடக்கு உட்பிரகாரத்தில் சாட்சிக்கிணறு என்ற தீர்த்தமும் இருக்கிறது. இதன் வரலாறு பின்னர் சொல்லப்படுகிறது. இத்தல விருட்சம் வாழை. இது உட்பிரகாரத்தில் மதில் ஓரமாக இருக்கிறது. இக்காரணத்தால் இத்தலத்திற்குக் கதலிவனம் என்ற பெயரும் உண்டு.

கோயிலில் ஐந்துகால பூசை நடைபெறுகிறது. சித்திரையில் பிரமோற்சவம் நிகழ்கிறது. மாசிமகத்தன்று இவ்வூர் வரதராஜப் பெருமாள் இங்கெழுந்தருளி இந்த சுவாமியுடன் திருமலைராயன் பட்டினத்துக்கடற்கரையில் தீர்த்தம் கொடுத்துமீளுவர்.

இவ்வூரில் இன்னும் சில கோயில்கள் இருக்கின்றன. தெற்கு வீதியில் தெற்குக் கோபுரவாயிலுக்கெதிரில் விடந்தீர்த்த விநாயகர் கோயிலும், மேற்கு வீதியின் மேல்புறம் வரதராஜப்பெருமாள் கோயிலும், வடக்கு வீதியில் முருகன் கோயிலும் இருக்கின்றன. மேலும் புழுகீசமுடையார், தருமர், பிடாரி, ஐயனுர் முதலியவர்கள் கோயில்களும் உள்ளன.

திருஞானசம்பந்தர் இத்தலத்திறைவன் மீது 'சடையாய் எனுமால்' என்று தொடங்கும் பதிகம் பாடியருளியிருக்கின்றனர். திருமருகலுடன் திருச்செங்காட்டங்குடியையும் சேர்த்து வினுவுரையாக "அங்கமும் வேதமும்" என்று தொடங்கும் பதிகம் ஒன்றையும் ஓதியருளியுள்ளார். இதில் 'மங்குல் மதி தவழ் மாடவீதி மருகல்', 'மாடம் நெடுங்கொடி விண்தடவும் மருகல்', 'மாமருவும் மணிக்கோயில் மருகல்' என்றெல்லாம் போற்றிப் புகழ்கிருர். அவரே, திருக்ஷேத்திரக் கோவைத் திருப்பாடலில் 'நெற்குன்றம் ஓத்தூர் நிறைநீர் மருகல் நெடுவாயில்' என்று கூறியிருக்கிருர். 'நிறைநீர்' என்று சிறப்புக் கொடுத்துப் பாடியிருப்பதை இன்றும் நீர் வளத்துடன் இவ்வூர் இருப்பதால் அறியலாம்.

திருநாவுக்கரசர் ஒரு பதிகம் இத்தலத்தைப்பற்றிப் பாடியருளியிருக்கிருர். அதில் ஐந்து பாசுரங்கள் அகச்சுவைபட அமைந்திருக்கின்றன. தலைவி ஒருத்தி கிளிக்குப் பாலூட்டி வளர்த்து, சொற்கள் கற்பித்து, மருகற்பெருமானுக்குத் தூது அனுப்புவதாகக் கூறியிருப்பது படித்து மகிழற்பாலது. பொதுத் திருத்தாண்டகம் ஒன்றில் "மருகலுறை மாணிக்கத்தை" என்று இறைவன் பெயரைக் குறிக்கிருர். க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்தில் "மருகல் வன்னி நிலமலி நெய்த்தானத்தோடு எத்தானத்தும் நிலவு பெரும் கோயில் பல கண்டால் கைலாயநாதனைக் காணலாம்" என்றும் கூறியிருக்கிருர். சுந்தரர் இத்தலத்திற்குத் தனிப்பதிகம் பாடவில்லையானுலும் "வாழைகாய்க்கும் வளர் மருகல் நாட்டு மருகலே" என்று குறிப்பிட்டிருக்கிருர். இதிலிருந்து 'வாழை'தல விருட்சம் என்பதும், இவ்வூர் உள்நாட்டுப் பிரிவிற்குத் தலைநகராக இருந்ததென்பதும் அறியக்கிடக்கின்றது.

சேக்கிழார் பெரிய புராணத்தில் திருஞானசம்பந்தர் இத்தலத்திற்கு எழுந்தருளியதைக் கூறும் பகுதி அவசியம் தெரிந்து கொள்ளவேண்டியது. வைப்பூரில் தாமன் என்ற வணிகன் இருந்தான். அவனுக்கு ஏழு பெண்கள். அவனுடைய சகோதரி மகனுக்குப் பெண் கொடுப்பதாகச் சொன்ன சொல் தவறி, பொருள் ஆசையால் முதல் ஆறு பெண்களையும் அயலாருக்கு மணம் முடித்துக்கொடுத்து விட்டான். ஏழாவது பெண் தன் அத்தைமகனின் நிலைக்கிரங்கி, அவனுடன் புறப்பட்டு திருமருகலுக்கு வந்து மாணிக்கவண்ணரை வழிபட்டு இரவில் ஒரு மடத்தில் தங்கியிருந்தனர். இரவில் அவ்வணிகனைப் பாம்புகடிக்க, அவன் இறந்தான். 'விதியினை யாவரே வெல்லு நீர்மையார்?' திக்கற்ற அந்த வணிகப் பெண் நெடுங்குரலெடுத்து அழுதுகொண்டிருந்தாள். அத்தலத்திற்கு வந்து அடியார்களுடன் தங்கியிருந்த சம்பந்தர் காதில் விழுந்தது. சம்பந்தர் எழுந்தருளிப் பெண்ணை விவரம் கேட்டார். அவளும் தன் கதையைச் சொன்னுள். இதைச் சேக்கிழார் வாக்கால் அறிய வேண்டும்.

வளம்பொழில்சூழ் வைப்பூர்க்கோன் தாமன்எந்தை
மருமகன் மற்றிவனவற்கு மகளிர்நல்ல
இளம்பிடியார் ஒரெழுவர் இவரில்மூத்தாள்
இவனுக்கென் றுரைசெய்தே ஏதிலானுக்
குளம்பெருகத் தனம்பெற்றுக் கொடுத்தபின்னும்
ஓரொருவராக எனைஒழிய ஈந்தான்
தளர்ந்தழியும் இவனுக்காத் தகவுசெய்தங்
கவரைமறைத் திவன்தனையே சார்ந்து
[போந்தேன்

என்ற பாடலில் சுருங்கச்சொல்லி விளங்க வைத்திருக்கும் பெற்றி மகிழ்தற்குரியது. காழி வேந்தரும் மாணிக்க வண்ணரை நோக்கி 'சடையாய் எனுமால்' என்னும் பதிகத்தை விண்ணப்பித்தார். பதிகம் பாடி முடிந்த பின் உறங்கி விழித்தவன்போல் எழுந்தான் வணிகன். ஆளுடைய பிள்ளையாரும், மாணிக்கவண்ணர், கிணறு, வன்னி மரம் இவைகள் சான்ருக வணிகனுக்கும் கன்னிகைக்கும் மணம் செய்து வைத்தனர். கோயில் சந்நிதியில் வன்னிமரமும், திருமண மேடையும் இன்றும் காட்சிதருகின்றன. சித்திரை பிரமோற்சவத்தில் ஆரும் திருநாளன்று விடந்தீர்த்த புராணமும், ஏழாம் திருநாளன்று செட்டிப் பிள்ளைக்கும் பெண்ணுக்கும் கலியாணமும் நடைபெறுகின்றன.

அருணகிரிநாதர் பாடிய பழனித் திருப்புகழ் ஒன்றில் "தமிழ்க்காழி மருதவனம் மறைக்காடு திருமருகல் தனுக்கோடி வருகுழகர் தருவாழ்வே" என்பதில் இத்தலத்தைக் குறித்திருக்கிருர். வடமொழியில் தலபுராணம் ஒன்று உண்டு; அச்சாகவில்லை. வித்துவான் ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் எழுதிய "திருமருகல் தலவரலாறு" என்ற உரை நடை நூல் தேவஸ்தானத்தாரால் வெளியிடப்பெற்றிருக்கிறது.

கீழ்க்கோபுர உள் சுவரில் ஒரு கல்வெட்டு இருக்கிறது. இதில் சகாப்தம் 1617-ல் தஞ்சையை யாண்ட மன்னர் காலத்தில் சுபேதார் தீராத வினை தீர்த்த முதலியார் அகோர சிவபண்டாரம் மூலமாக மாணிக்க வண்ண சுவாமி கட்டளைக்காக 400 பொன் வழங்கியதைக் குறிக்கிறது. 'இலக்கண விளக்கம்' என்ற நூலின் ஆசிரியரான திருவாரூர்-வைத்தியநாத தேசிகரின் ஆசிரியரும், அபிஷேக அன்னதான கட்டளையின் மூலகர்த்தாவுமான அகோரசிவ பண்டாரமாக இவர் இருக்கக்கூடும் என்பர். திருப்புகலூர்க் கோயிலிலுள்ள குலோத்துங்கன் கல்வெட்டொன்றில் சீராளன் பள்ளிக்குச் செல்ல தெருவொதுக்க நிலம் அளந்துவிட்டதாகத் தெரிகிறது.

பாடல் முழவும் விழவும்ஓவாப் பன்மறை
  யோரவர் தாம்பரவ
மாடம் நெடுங்கொடி விண்தடவும் மருகல்
  நிலாவிய மைந்தசொல்லாய்
சேடக மாமலர்ச் சோலைசூழ்ந்த சீர்கொள்செங்
  காட்டங் குடியதனுள்
காடக மேயிட மாகஆடுங் கணபதி
  யீச்சரங் காமுறவே.

—திருஞானசம்பந்தர்.

பூவாளூர்: திருமூலநாத சுவாமி கோயிலில் வாரவழிபாட்டு மூன்ருவது ஆண்டு விழாவும் தமிழ் அர்ச்சனை துவக்க விழாவும் 10—12—61-ல் திருச்சி, தேசீயக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. இரா. இராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.



சிறுத்தொண்டர் முதலியோர் கயிலை செல்லும் காட்சி

திருச்செங்காட்டங்குடி
திரிபுரசம்மாரமூர்த்தி

திருச்செங்காட்டங்குடி
கங்காளமூர்த்தி

திருச்செங்காட்டங்குடி
ஊர்த்துவதாண்டவமூர்த்தி

திருச்செங்காட்டங்குடி
வாதாபிகணபதி



சிவபெருமானைக் கணபதி வழிபடுதல்

திருச்செங்காட்டங்குடி

(உத்திராபதீசுவரர்கோயில்)

நுண்ணியான் மிகப்பெரியான்
ஓயுளார் வாயுளான்
தண்ணியான் வெய்யான்நம்
தலைமேலான் மனத்துளான்
திண்ணியான் செங்காட்டங்
குடியான்செஞ் சடைமதியக்
கண்ணியான் கண்ணுதலான்
கணபதீச் சரத்தானே

— திருஞானசம்பந்தர்.

கல்லாதார் மனத் தணுகாக் கடவுள் தன்னைக்
கற்றார்கள் உற்றோரும் காதலானைப்
பொல்லாத நெறியுகந்தார் புரங்கள் மூன்றும்
பொன்றிவிழ அன்றுபொரு சரந்தொட்டானை
நில்லாத நிணக்குரம்பைப் பிணக்கம் நீங்க
நிறைதவத்தை அடியேற்கு நிறைவித் தென்றுஞ்
செல்லாத செந்நெறிக்கே செல்விப்பானைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே

—திருநாவுக்கரசர்.

முற்றத்துறந்த பெரியாரான தாயுமான சுவாமிகள் மற்றொரு பெருந்துறவியாரைப் புகழ்ந்து பாடினர். "பாரனைத்தும் பொய் யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல் ஆருந்துறக்கை அரிதரிது" என்பதும், "ஒட்டுடன் பற்றின்றி உலகைத் துறந்த செல்வப் பட்டினத்தார் பத்ரகிரி பண்புணர்வதெந் நாளோ" என்பதும் அவர்தம் திருவாக்குகள். அத்தகைய பெருந்துறவு பூண்ட பட்டினத் தடிகள் செயற்கரும் செயல் செய்த மூன்று பெரியார்களை ஒரு பாடலில் அமைத்துப் போற்றுகிறர்.

வாளால் மகவரிந்தூட்ட
  வல்லேனல்லேன் மாதுசொன்ன
சூளால் இளமைதுறக்க
  வல்லேனல்லேன் தொண்டுசெய்து
நாளாறிற் கண்ணிடந் தப்பவல்லே
  னல்லேன் நானினிச்சென்று
ஆளாவ தெப்படியோ
  திருக்காளத்தி யப்பனுக்கே

என்பது அப்பாடல். அறுபத்து மூன்று நாயன்மார்களில் சிறுத்தொண்டர், திருநீல கண்டர், கண்ணப்பர் இவர்கள் மூவரையும் பாராட்டியிருக்கிறர். அம்மூவரிலும் முத லாக வைத்தெண்ணப்பட்டவர் சிறுத்தொண் டர். அதற்குக் காரணமும் உண்டு. மற்ற நாயன்மார்கள் தனியாகவோ அல்லது தாமும் தம் மனைவியருமாகவோ அற்புதச் செயல்கள் புரிந்தார்கள். ஆனல் சிறுத்தொண்டர் தாமும், மனைவியாகிய வெண்காட்டுநங்கை யும், அவ்விருவரின் அரும்பெருமகவான சீராளதேவரும், அவர்களுடைய பணிப்பெண் ணை சந்தனநங்கையும் சேர்ந்து செயற்கரும் செயல் செய்து ஆண்டவன் சோதனையில் வெற்றிபெற்றனர். இந்த வரலாறு யாவரும் அறிந்ததே. அவ்வற்புதச் செயல் நிகழ்ந்த பொற்புடைய திருவூரே திருச்செங்காட்டங் குடி.

திருச்செங்காட்டங்குடி என்ற இப்பாடல் பெற்ற பழம்பதி சோழநாட்டுச் சிவத்தலங் களுள் ஒன்று. இது தஞ்சைமாவட்டத்தில் நன்னிலம் பகுதியிலிருக்கிறது. மாயூரம்—அறந்தாங்கி இருப்புப்பாதையில் நன்னிலம் என்ற புகைவண்டி நிலையத்திலிருந்து ஏறக் குறைய ஆறுகல் தொலைவிலிருக்கிறது. நன் னிலத்திலிருந்து நாகை செல்லும் மோட்டார் வண்டியிலேறிக் கிழக்கில் நாலுகல் தொலைவி லுள்ள திருப்புகலூர் சென்று, முடிகொண் டான் ஆற்றைக்கடந்து தெற்கே ஒருகல் தூரத்திலுள்ள திருக்கண்ணபுரத்தைச் சேர்ந்து, அங்கிருந்தும் கிழக்கே ஒருகல் தொலைவுபோய்த் திருச்செங்காட்டங்குடியை யடையலாம். பல வகுப்பினர்க்குச் சொந்த மான சத்திரங்கள் சுமார் 50 இருக்கின்றன.

முடிகொண்டான் ஆற்றுக்கும் புத்தாற் றிற்கும்இடையே அமைந்துள்ள இப்பதியை, "காவேரித் திருநாட்டு வளங்காட்டும் செங் காட்டங்குடியாகும்" என்று வாயாரப் புகழ்ந்து பாடுகிறர் சேக்கிழார் பெருமான். ஊருக்குச் செங்காட்டங்குடியென்றும், இறை வன் திருக்கோயில் அமைந்துள்ள இடத்திற் குக் கணபதீச்சரம் என்றும் பெயர்கள் வழங் கப்படுகின்றன.

திருச்செங்காட்டங்குடிக்கு வேறு எட்டு பெயர்கள் உள்ளன. சிவபெருமான், தேவர் முனிவர்களுக்கு மகாமந்திரங்களை உபதேசித் ததால் மந்திரபுரியென்றும், சத்தியாஷாட முனிவர் தவத்தை அழிக்கவந்த அசுரர்களைச் சிவபெருமான் கொன்றபோது இரத்தம் சிந் தியதால் செங்காடு என்றும், சத்தியாஷாடர் வழிபட்டதால் சத்தியபுரி என்றும், பிரமன் பூசித்ததால் பிரமபுரி என்றும், பிரமனுக்காகப் பொய்சாட்சி புகன்ற தாழம்பூ பெற்ற சாபம் நீங்க இங்கு காட்டாத்தி மரமாக முளைத்த மையால் ஆத்திவனம் என்றும், மகாசிவராத் திரி காலத்தில் சூரியன் வழிபட்டதால் பாஸ் கரபுரி என்றும், வருணன் இலிங்கத்தை நிலை பெறுத்தி வணங்கியதால் சமுத்திரபுரி என் றும், இந்திரன் வழிபட்டுப் பேறுபெற்றதால் இந்திரபுரி என்றும் பெயர்கள் ஏற்பட்டன. இதைத்தலபுராணம் ஒரு பாடலில் அமைத் துக்காட்டுகிறது. அது,

மந்திரபுரி செங்காடு சத்தியபுரி மலரோன்
தந்திரபுரி ஆத்தியின் வனம் சுடர் தயங்கும்
முந்து பாஸ்கரபுரி சமுத்திரபுரி முடிசேர்
இந்திரன் மகிழ் கணபதீச்சரம் பெயரெட்டே

என்பது. செங்காட்டங்குடி, கணபதீச்சரம் என்ற பெயர்கள் ஏற்பட்டதற்கு வேறொரு வரலாறும் புராணங்களில் கூறப்படுகிறது. விநாயகப்பெருமான் கஜமுகாசுரனைக் கொன்றபோது குருதிபெருகிச் செங்காடாய்ப் போனமையால் செங்காட்டங்குடியென்றும், அவனைக்கொன்ற பாவம்தீர இறைவனை

அவர் வழிபட்டதால் கணபதீச்சரம் என்றும் பெயர்கள் உண்டாயிற்று என்று திருவிளை யாடற்புராணம், கந்தபுராணம் முதலியவற் றில் கூறப்பட்டிருக்கிறது. "கரிமுகத்தவு ணற் காய்ந்து கரிமுகத்தண்ணல் பூசை புரி சிவ நகரம் ஈது" என்பது திருவிளையடற் புராணக்கூற்று. சம்பந்தர் தேவாரத்திலும் கணபதீச்சரம் என்ற பெயரைக் கூறுகிறார். கணபதீச்சரம் என்பதைப்பற்றி வரலாற்றுப் பேரறிஞர்கள் செய்திருக்கும் ஆராய்ச்சி முடிவுகளை ஒருவாறு தெரிந்துகொள்வது அவசியம். இத்தலத்தில் அவதரித்த சிறுத் தொண்டர், பரஞ்சோதியார் என்ற பெய ருடன் நரசிம்மவர்ம பல்லவனின் சேனைத் தலைவராக இருந்தார். அவர் படையுடன் வட திசை சென்று வாதாபி என்ற நகரை அழித்து மீண்டபோது வெற்றிச்சின்னமாகக் கொண்டு வந்த கணபதி விக்கிரகமே வாதாபி கணபதி என்றும், அதை இவ்வூரில் பிர திஷ்டை செய்ததால் கணபதீச்சரம் என்ற பெயர் உண்டாயிற்றென்றும், அது முதல் தான் தமிழ் நாட்டில் விநாயக வழிபாடு ஏற் பட்டதென்றும் ஆராய்ச்சியாளர் சிலர் கருது கின்றனர். வாதாபிப்போர் நடந்தது கி. பி. 642-ல் என்பர். மற்றொரு சாரார், அதற்கு முன்பே கணபதி வழிபாடு தமிழ் நாட்டில் இருந்ததென்று கூறுகின்றனர். சேக்கிழார்,

மன்னவற்குத் தண்டுபோய்
வடபுலத்து வாதாவித்
தொன்னகரந் துகளாகத் துளை
நெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியு நிதிக்குவையும்
பகட்டினமும் பரித்தொகையும்
இன்னனவெண் ணிலகவர்ந்தங்
கியலரசன் முன்கொணர்ந்தார்

என்று, பரஞ்சோதியார் வாதாபி நகரத்தை அழித்துப் பொருள்கொண்டு மீண்டதைக் கூறியிருக்கிறார். பொருள்கள் கொண்டுவந் ததில் விநாயக உருவமும் ஒன்றாக இருப்பின் அதைச் சேக்கிழார் கூறாமல் விட்டிருக்கமாட் டார். சம்பந்தரும் சிறுத்தொண்டரும் ஒரு காலத்தவர். காழியர்கோன் திருச்செங்காட் டங்குடி வந்தபோது சிறுத்தொண்டர் வர வேற்று உபசரித்தார். திருஞானசம்பந்தர் இவ்வூருக்கு வருவதற்கு முன்பே சீகாழிப்பதி யில் பாடிய பாடலொன்றில் "ஒற்றைச்சேர் முற்றற் கொம்புடைத்தடக்கை முக்கண் மிக் கோவாதே பாய் மாதானத்துறு புகர்முக இறை" என்று அருளியிருப்பதால் கணபதி வழிபாடு முன்னாலேயே இருந்ததென்பர் இக் கொள்கையுடையவர்கள்.

இனி, ஆலயத்தின் அமைப்பை ஒரு சிறிது அறிந்துகொள்ள முற்படுவோம். இறைவன் திருக்கோயில் கிழக்கு நோக்கி யிருக்கிறது. கிழக்கு, மேற்கு, தெற்குப் புறங் களில் திருவாயில்கள் உள்ளன. கோபுரங் களும் இருக்கின்றன. இரண்டு பிரகாரங்கள் கோயிலுக்குள் இருக்கின்றன. உட்பிரகாரத் திற்குச் செல்லும் வாயிலின் மேலும் மூன்று மாடக் கோபுரம் ஒன்றுண்டு. கிழக்குவாயில் வழியே உள் நுழைந்ததும் வலதுபுறம் தெற்கு நோக்கி அம்பிகையின் சந்நிதி இருக் கிறது. தேவியின் திருநாமங்கள் வாய்த்ததிருக்குழலி, திருக்குழல்நாயகி, சூளிகாம்பாள் என்பன. கிழக்கு உட் பிரகாரத்தில் தென்புறம், சிறுத் தொண்டர், மனைவி, மகன், தாதி இவர்களின் படிமங்கள் காணப் படுகின்றன. (படம் பார்க்க). தெற்கு உட்பிரகாரத்தில் அறுபத் துமூவர், பிரமன், அர்த்தநாரீசுவ ரர், நால்வர், சங்கநிதி-பதுமநிதி முதலியோர் சந்நிதிகள் உள்ளன. இப்பிரகாரத்தின் தென்மேற்கு நடுவில் வாதாபிகணபதி சந்நிதி இருக்கிறது. மேற்கு உட்பிரகா ரத்தில் சம்பந்தர், விநாயகர், சத்தி யாஷாடலிங்கம், முருகன் முதலி



யோர் சந்நிதிகளும், வடக்கு உட்பிரகாரத்தில் நவதாண்டவ மூர்த்திகள், நடராஜர் முதலியோர் சந்நிதிகளும் இருக்கின்றன.

கர்ப்பக்கிரகத்தில் மூலஸ்தான மூர்த்தி எழுந்தருளியுள்ளார். கணபதீசுவரர் என்பது அவர் திருப்பெயர். மேலே சொல்லப்பட்ட இத்தலத்தின் பெயர்களைக் கொண்டும் இவருக்கு மந்திரபுரீசர், சத்தியபுரீசர், பிரம்மபுரீசர், ஆத்திவனநாதர், பாஸ்கரபுரீசர், சமுத்திரபுரீசர், இந்திரபுரீசர் என்ற வேறு பெயர்களையும் தலபுராணம் கூறுகிறது. மூலவர் கர்ப்பக்கிரகத்திற்குத் தென்புறம் உத்திராபதீசுவரர் சந்நிதி இருக்கிறது. இத்தலத்தின் தலைசிறந்த மூர்த்தி இவரே யாவர். சிவபெருமான், உத்திராபதியார் (வடநாட்டார்) வேடம் தாங்கிவந்து, சிறுத்தொண்டரைப் பிள்ளைக் கறியமுதுகேட்டு, அப்படியே அவர் செய்ய, பின்னர் அக் குழந்தை உயிர்த்தெழ அருளிய திருக்கோலமே இது.



வாதாபி கணபதிசந்நிதி

ஸ்ரீ உத்திராபதீசுவரர்

இத்தல விருட்சம் ஆத்தி. அரியும் அயனும் அரனின் அடிமுடி தேடியபோது பிரமனுக்காகத்தாழம்பூ பொய் சாட்சி கூறியது. ஆகையால் அதற்குத் திருச்செங்காட்டங் குடியில் காட்டாத்தி மரம் ஆகும் சாபம் ஏற்பட்டது. இது திருவண்ணாமலைத் தலபுராணத்திலும், இத்தலபுராணத்திலும் கூறப்பட்டிருக்கிறது. உத்திராபதியார் இந்த மரத்தினடியில் தங்கியிருந்தார் என்பதை "கணபதீச்சரத்தின்கண் வண்ணமலர் ஆத்தியின் கீழ் இருக்கின்றோம்" என்று பெரிய புராணம் கூறுகிறது.



இத்தலத்திற்கு முக்கியமான தீர்த்தங்கள் இரண்டு. சத்தியதீர்த்தம் என்ற திருக்குளம் இருக்கிறது. சத்தியாஷாட முனிவர் இங்கு நீராடி இறைவனை வழிபட்டார். சிவபெருமான் சூலத்தை ஊன்றி ஏற்பட்டதால் இதற்கு சூலதீர்த்தம் என்ற மற்றொரு பெயரும் உண்டு. சூரியதீர்த்தம் என்றமற்றொரு திருக்குளம் மேலக் கோபுரவாசல் பக்கம் இருக்கின்றது. இவையன்றி இந்திர தீர்த்தம், யமதீர்த்தம், அக்கினி தீர்த்தம், வருண தீர்த்தம், வாயுதீர்த்தம், சந்திரபுட்கரணி தீர்த்தம் முதலியவைகளும் இத்தலத்திலுள்ளன.

கோயிலில் நாள்தோறும் ஐந்துகாலபூசை நிகழ்கின்றன. சித்திரை மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகின்றது. ஆரும் திருநாள் பரணி நட்சத்திரத்தில் அமுதுபடையல் விழாக்கொண்டாடப்பெறுகிறது. அதிலிருந்து 21-ஆம் நாள் திருவோண நட்சத்திரத்தன்று ஐயடிகள் காடவர்கோனுக்குக் காட்சிகொடுக்கும் ஐதீகமும் நடைபெறுகிறது. (ஐயடிகள் காடவர்கோனே நரசிம்மவர்ம பல்லவன் என்பர் சில ஆராய்ச்சியாளர்.) ஐப்பசி மாதப் பரணி நட்சத்திரத்திலும் உத்திராபதீசுவரர் வெளியில் எழுந்தருளுவார். "ஆறு திங்கள் ஒழிந்துண்போம்" என்று பெரிய புராணத்தில் கூறியதற்கிணங்க, சித்திரைப் பரணியிலும், ஐப்பசிப்பரணியிலும் உத்திராபதியார் எழுந்தருளுகிறார்.

திருஞானசம்பந்தர் இத்தலத்தின் இறைவன் மீது மூன்று திருப்பதிகங்கள் ஓதியருளியிருக்கிறார். அவைகளில் ஒரு திருப்பதிகத்தில் திருமருகலையும் திருச்செங்காட்டங்குடியையும் வினாவுரையாகப் பாடியுள்ளார். "அங்கமும் வேதமும்" என்று தொடங்குவது அப்பதிகம். "செங்காட்டங்குடியதனுள் கணபதீச்சரம்" என்று கூறுவதால் ஊருக்குச் செங்காட்டங்குடி யென்றும், கோயில் இருக்கும் இடத்தைக் கணபதீச்சரம் என்றும் கொள்ளக் கிடக்கிறது. ஒரு பாடலில் "செந்தமிழோர்கள் பரவியேத்தும் சீர்கொள் செங்காட்டங்குடி" என்று சொல்கிறார். மற்றொரு பதிகப்பாடல் ஒன்றில் "பொடி நுகரும் சிறுத்தொண்டர்க்கருள் செய்யும் பொருட்டாகக் கடிநகராய் வீற்றிருந்தான் கணபதீச்சரத்தானே" என்று சிறுத்தொண்டர்க்கருள் செய்யும் பொருட்டு இறைவன் வீற்றிருக்கிறார் என்று குறிப்பிடுகிறார். இன்னொரு பதிகம், தலைவி நாரை முதலிய பறவைகளைத் தலைவனாகிய சிவபெருமானிடத்தில் தூதாகச் சென்று தன் நிலையை உரைக்குமாறு வருந்திக் கூறுவதாக அமைந்துள்ளது. ஒரு பாடலில் "சீராளன் சிறுத்தொண்டன் செங்காட்டங்குடிமேய பேராளன் பெருமான்தன் அருள் ஒரு நாள் பெறலாமே" என்று அருளுகிறார்.

திருநாவுக்கரசர் ஒரு பதிகம் பணித்தருளியிருக்கிறார். இறைவன் திருமேனி, திருவிளையாடல்கள் முதலியவற்றை அழகுபடச் சித்திரித்துக் காட்டுகிறார். ஒரு பாடலில் "பத்திக்கே வழிகாட்டிப் பாவந்தீர்த்துப் பண்டை வினைப்பயமான எல்லாம் போக்கித் தித்தித்தென் மனத்துள்ளே ஊறுந்தேனைச் செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே" என்று கூறுகிறார். "திருகுகுழல் உமை" என்று அம்பிகையின் பெயரை ஒரு பாடலில் குறிக்கிறார்.

உத்திராபதீசர் கணபதீசர் விமானங்கள்

பெரிய புராணத்தில் சேக்கிழார், திருஞானசம்பந்தர் புராணம், திருநாவுக்கரசர் புராணம், சிறுத்தொண்டர் புராணம் முதலியவற்றில் இத்தலத்தைப் பற்றிக்கூறிய யிருக்கிறார். சிறுத்தொண்ட நாயனார் புராணத்தில் 88 பாடல்கள் உள்ளன. மாமாத்திரர் குலத்தில் பிறந்த பரஞ்சோதியார் சேனைத் தலைவராகப் பல்லவனிடம் அமர்ந்திருந்து, வாதாபிக்குப் படையெடுத்துச் சென்று அந்நகரை அழித்து வெற்றிவாகை சூடித் திரும்பினார். அவர் சிவபெருமான் திருத்தொண்டர் என்பதையறிந்த அரசன் நிதிக்குவை நல்கி, திருத்தொண்டு செய்துகொண்டிருக்கும்படி வேண்டிக்கொள்ள, அவரும் தம் மூரான திருச்செங்காட்டங்குடிக்கு வந்து கணபதீச்சரப்பெருமானை வழிபட்டு வருவராயினர். சிவபெருமான் பைரவர்வேடத்துடன் அவர் மனைக்கெழுந்தருளி, பிள்ளைக்கறியமுதளிக்கும்படி கேட்டார். சிறுத்தொண்டரும் தன் மகன் சீராளனை அவ்வாறே செய்து அடியார்க்கமுது படைக்க, அக்குழந்தையை எழுந்தருளச் செய்து தானும், உமாதேவி முருகன் இவர்களுடன் காட்சிதந்தார். அறுபான்மும்மை நாயன்மார் சரிதங்களில் இந்த நாயனார் ஒருவர் வரலாற்றில்தான் தேவியொடு முருகனுடனும் சிவபெருமான் தோன்றியதைக் காண்கிறோம். மற்றவற்றில் பார்வதியொடு மாத்திரம் காட்சி வழங்கியதைப் பார்க்கிறோம். சேக்கிழார், இறைவன் நாயனார் முன் தோன்றியதை, "அவர்தம் மலைபயந்த தையலோடுஞ் சரவணத்துத் தனயரோடும் தாமணைவார்" என்று கூறியிருக்கிறார். தானும் உமாதேவியும் சிறுத்தொண்டருக்கும் அவர் மனைவியார் திருவெண்காட்டு நங்கைக்கும் அருள் புரியவும், முருகன் சீராள தேவர்க்கு அருள் புரியவும் தோன்றியது போல அமைந்திருப்பது சிந்தித்து மகிழ்தற்குரியது.

பட்டினத்தார், "வாளால் மகவரிந்தூட்ட வல்லேனல்லேன்" என்றும், "நின்முதல் வழிபடத்தன்மகன்தடிந்த தொண்டர் மனையில் உண்டல் போற்றி" என்று சொல்கிறார். நம்பியாண்டார் நம்பி "விரும்பும் புதல்வனை மெய்யரிந்தாக்கிய .... சிறுத்தொண்டனை ஏத்துதிரேல் சுரும்பின் மலர்த்தமிழாகரன் பாதத்தொடர் வெளிதே" என்று கூறியிருக்கிறார். பரணதேவர் "சிவனந்தஞ் செல்கதிக்கோர்" என்று தொடங்கும்பாடலில் செங்காட்டங்குடியைக்குறிக்கிறார். திருக்களிற்றுப் பாடியாரில்

வரங்கள்தரும்செய்ய வயிரவர்க்குத்தங்கள்
கரங்களினால் அன்று கறியாக்க—இரங்காதே
கொல்வினையே செய்யுங் கொடுவினையே—யானவற்றை
வல்வினையே என்றது நாம் மற்று

என்ற ஒரு பாடல் உண்டு.

காளமேகப் புலவர்,

காலனையும் காமனையும் காட்டுசிறுத்தொண்டர்தரு
பாலனையும் கொன்ற பழிபோமோ—சீலமுடன்
நாட்டிலே வீற்றிருந்த நாதரே நீர்திருச்செங்
காட்டிலே வீற்றிருந்தக்கால்

என்று நகைச்சுவைப்படக் கூறுகிறார். சொக்கநாதப் புலவர், பின்வரும் பாடலைப் பாடியிருக்கிறார்:—

மெய்யிலே ஒருபாதி உமைக்களித்த
செங்காட்டு விமலனாரே
மையிலே தோய்ந்த விழிச்சந்தனமான்
தலைக்கறியை வளமாயாவின்
நெய்யிலே தான்சமைத்துக் கொடுத்திருந்தும்
படைத்திருந்தும் நீர்தானின்று
கையிலே மழுவெடுத்தாற் பொய்யாமோ
பிள்ளைகொன்ற களவுதானே.

போற்றிக் கலிவெண்பாவில், "வைரவராய் வந்தவற்கு வாளான்மகவை யரிந்தூட்டி மகிழ்சிந்தாச் சிறுத்தொண்டர் சீர்போற்றி" என்று கூறப்பட்டிருக்கிறது. அருணகிரிநாதர் பாடியருளிய "வங்கார மார்பிலணி" என்று தொடங்கும் திருப்புகழில்,

எண்டோளர் காதல்கொடு காதல்கறியே பருகு
செங்காடு மேவிபிர காசமயில் மேலழகொ
டென்காதல் மாலைமுடி ஆறுமுகவா அமரர்
பெருமாளே

என்று கூறியிருக்கிறார்.

சைவ எல்லப்ப நாவலர் பாடியதாகச் சொல்லப்படும் தலபுராணச் செய்யுள் ஓலைச்சுவடியாக இருக்கிறது; அச்சாகவில்லை. பாயிரம் முதல் அபிடேகச்சருக்கம் ஈறாக 22 சருக்கங்கள் உள்ளன. அதிலிருந்து எடுத்துக்காட்டாக அம்பிகையின்மீது பாடப்பெற்ற ஒரு திருப்பாட்டு பின்வருவது.

கங்காட்டுங் கரங்களத்துக் கறைகாட்டும்
பிறைமவுலிக் கடவுள் மாலோ
டங்காட்டு நான்முகனை ஐங்கரனை அறுமுகனை
அளித்த பேதை
சங்காட்டும் புனற்கரஞ்சேர்க் காவேரி வளங்
தமிழ் நன்னாட்டிற் [காட்டு
செங்காட்டங் குடிவாய்த்த திருக்குழலி உபயபதஞ்
சென்னி சேர்ப்பாம்.

இது சேக்கிழார் சிறுத்தொண்டர் புராணத்தின் முதல் பாட்டான "உருநாட்டும்" என்றுதொடங்கும் பாடலை நினைவூட்டுவதாக அமைந்திருக்கிறது. முன்னோர்மொழிபொருளை பொன்னேபோல் போற்றியிருக்கும் தல புராண ஆசிரியரின் பெற்றிதான் என்னே!

வாலாம்பிகைதாசர் என்றசோழபுரத்துப் பிள்ளை இத்தலத்துப் பெருமான்மீது அமுது படைச்சிந்து என்ற நூல் இயற்றியிருப்பதாகத்தெரிகிறது. இத்தலத்தைப்பற்றி இன்னும் பல தனிப்பாடல்களும் உள்ளன.

தெற்குவீதி மேல் கோடியில் சிறுத்தொண்டர் தனிக்கோயில் இருக்கிறது. அக்கோயில் வாயில்மேல் உத்திராபதியார் உருவம் காணப்படுகிறது. உள்ளே உத்திராபதியார் அமர்ந்த கோலத்திலும், திருவெண்காட்டு நங்கை கிண்ணம் கரண்டியுடன் உணவு பரிமாறும் தோற்றத்திலும் காணப்பெறுகின்றனர். காடவர்கோனின் உருவமும் அங்கேயுள்ளது.

கி. பி 642-ல் வாதாபி சண்டை முடித்து, கணபதி யுருவத்தைச் சிறுத்தொண்டர் இங்கே கொண்டுவந்து அமைத்ததால் இக்கோயில் மிகப் பழய கோயில் என்பது புலனாகும். அழகிய பல சிற்பங்கள் இக்கோயிலில் இருக்கின்றன. நவ

தாண்டவ மண்டபத்தில் புஜங்கலளிதர், கஜ சம்மாரர், ஊர்த்துவதாண்டவர், காலசம்மாரர், கங்காளர், தாருகாவன பிட்சாடனர், திரிபுரசம்மாரர், பைரவர் முதலிய மூர்த்திகளின் சிலைகளில் சிற்பக்கலையின் அழகு ததும்பி நிற்கிறது, (தனிப்படம் காண்க). இந்த எட்டு மூர்த்தங்களுடன் உத்திராபதீசுவரரையும் சேர்த்தால் நவதாண்டவ மூர்த்திகள் ஆவர். உத்திராபதியார் சந்நிதிக்கெதிரில் சிரமேல் கரம்கூப்பி நிற்கும் சிறுத்தொண்டர், அவர் மனைவி, சீராளன், தாதி இவர்களின் படிமங்களைப் பார்க்கப் பக்திப் பரவச மூட்டுவன. வாதாபி கணபதியின் சிற்ப அமைப்புத் தனிப்பட்டது (படம் காண்க). சிறுத்தொண்டர் கைலாசம் செல்லும் காட்சியைச் சித்திரிக்கும் சிற்பமும் கண்டு மகிழத்தக்கது.

இந்தகோயிலில் அரிய செய்திகளைத்தெரிவிக்கும் பல கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவை, இராஜராஜன் I, இராஜாதிராஜன், இராஜேந்திரன் I, பரகேசரிவர்மன், இராஜராஜன் III, குலோத்துங்க சோழன், பராக்கிரம பாண்டியன், விஜயநகர வீரவிருப்பண்ண உடையார், வீரபூபதிராய உடையார் முதலிய மன்னர்களின் காலத்தவை. ஜெயமாணிக்க வளநாடு, க்ஷத்திரிய சிகாமணி வளநாடு, மும்மடி சோழவளநாடு என்பவற்றின் உள் பகுதியான மருகல் நாட்டிலுள்ளது திருச்செங்காட்டங்குடி என்று அவை குறிக்கின்றன.

இறைவனை, கணபதீசுவரம் உடைய நாயனார், கணபதீச்சரமுடைய மகாதேவர், திருச்செங்காட்டங்குடி பரமேசுவரர், உத்திராபதி நாயகர், உத்திராபதீசர் முதலிய

பெயர்களால் அக்கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. அம்பிகையின் பெயர் சூளிகாம்பாள் என்றும் காணப்படுகிறது. நிலம் வழங்கியது, விளக்கு கொடுத்தது, பூசை, விழா முதலியவற்றிற்கு ஏற்பாடு செய்தது முதலியவற்றைப் பொதுவாக அறிவிக்கின்றன. கோயிலுக்கு ஒரு சிங்காசனம் கொடுத்த வணிகர்களுக்கு நிலம் வீடுகள் வழங்கியது, வரியில்லாமல் நிலம் கோயிலுக்கு விற்றது, சீராள தேவன் கோயிலுக்கு நந்தா விளக்கெரிக்க நிலம் கொடுத்தது, சீராளரைச் சிறுத்தொண்டர் மண்டபத்திற்கு எடுத்துப்போகும் திருவிழாவைக் காணவரும் தவசிகளுக்கு உணவளிப்பது,சீராளதேவர் புறப்பாட்டு உற்சவத்திற்கு ஏற்பாடு செய்தது, விளக்கெரிக்க மருகல் சபையார் நிலம் விலைக்கு வாங்கி வழங்கியது, சிறுத்தொண்டர் கோயிலுக்கு நிலம் அளித்தது, செங்கழுநீர் திருப்பள்ளித்தாமம் சாத்தியருளவும், திருநந்தவனம் ஆக்கவும் இறையிலியாக நிலம் வழங்கியது, திருச்செங்காட்டங்குடியிலுள்ள சீராளப்பிள்ளையாரை சிறுத்தொண்டர் மண்டபத்திலிருந்து திருமருகலுக்கு ஊர்வலமாகக்கொண்டு போவதற்கு நிலம் விலைக்கு வாங்கிக்கொடுத்தது, சீராள தேவரின் வழிபாட்டுக்காகக் கோயில் விலங்களுக்கு வரிவிலக்குச் செய்தது, சித்திரைப் பரணி நாளில் வடக்கிலிருந்து பைரவ வேடங்கொண்டு வந்த உத்திராபதியார் தமது பக்தரான சிறுத்தொண்டருக்கு முத்திகொடுக்கும் திருவிழாவில் திருமுத்துயாநெறி என்ற மண்டபத்தில் உத்திராபதிநாயகருக்கு ஆராதனைகள் நடத்த நிலம் வழங்கியது, கோயில் மேஸ்திரியான இராஜேந்திர சோழ ஆச்சாரியனுக்கு நிலம் கொடுத்தது, ஒவ்வொரு மாத பரணி நாட்களிலும் பூசை நடைபெற ஏற்பாடு செய்தது, கோயிலின் பிரகாரம் கட்டுவதற்கும் அதைச்சுற்றிச் சாலை அமைப்பதற்கும் நிலங்கள் உரிமையாக்கப்பெற்றது, மாளுவதேசச் சக்கரவர்த்தியின் வேண்டுகோளின்படி உத்திராபதி நாயகர் கோயிலில் உற்சவங்கள் நடத்துவதற்கு வரிப்பணம் வழங்கியது, கோயிலில் சீராளன் சிறுத்தொண்டன் மடம் இருந்தது, சித்திரை, ஐப்பசி மாதங்களில் பஜனை நடத்த ஏற்பாடு செய்தது, கைத்தறி முதலியவற்றிற்கு வரி விதிக்கப்பட்டது, இவை போன்ற பல அரிய செய்திகளை அக்கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

வல்குடி : சப்தரிஷீசுவரசுவாமி கோயிலில் ஆருத்ராதரிசன விழா 14—12—61 முதல் 23—12—61 வரை நடைபெற்றது. சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசையரங்குகளும் நடைபெற்றன.

திருத்துறைப்பூண்டி : பாவா ஔஷதீசுவரர் கோயிலில் 4—12—61 முதல் தமிழில் திருமுறை அர்ச்சனை நடைபெற்று வருகிறது.

திருப்பராய்த்துறை : பராய்த்துறைநாத சுவாமிக்கு 20—11—61 முதல் இலட்சார்ச்சனை நடைபெற்று வருகிறது.

கும்பகோணம் : நாகேசுவர சுவாமி கோயிலில் எட்டுக்கிரகங்களின் சேர்க்கையினால் உலகத்திற்கு ஏற்படும் இன்னல்களைத் தவிர்க்க 7—12—61 முதல், பல்லக்குவேலை திரு. நாகராஜ பிள்ளை அவர்களால் ஏகதேசமாக நாகேசுவர சுவாமிக்கு இலட்சார்ச்சனை நடத்தப் பெற்று வருகிறது.

சோளிங்கபுரம் : இலட்சுமிநரசிம்ம சுவாமி கோயிலில் வைகுண்ட ஏகாதசி விழா 8—12—61 முதல் 28—12—61 வரை நடைபெற்றது.

சென்னை புரசைவாக்கம் : கங்காதரேசுவர சுவாமி கோயிலில் 11—12—61-ல் திருப்பணி வேலை தொடங்கப் பெற்றது. மறுநாள் பாலபிரதிஷ்டையும் அடுத்தநாள் பாலமூர்த்திக்கு அபிஷேகமும் நடைபெற்றன.

விரயநல்லூர் : பூமிதானசுவாமி கோயிலில் திருவாதிரைப் பெருந்திருவிழா 14—12—61-ல் தொடங்கி 23—12—61-ல் முடிவுற்றது.

சமய உணர்வே வாழ்வின் அடிப்படை

[பேராசிரியர் திரு. அ. மு. பரமசிவானந்தம், M.A., M.Litt.,]

எடுத்த செயலில் வெற்றிபெறும்போது தானே எல்லாம் செய்யவல்லவன் என்று தருக்குக்கொள்ளுகின்றான் மனிதன். ஆனால் தன் முயற்சி தோல்வியுற்றபோதே 'என் செயலால் ஆவது யாதொன்றுமில்லை' என்று சொல்லித் தோல்வியைத் தன்மேல் ஏற்றிக் கொள்ள விரும்பாது, வேறு கண்ணிற் காணாத ஒன்றன்மேல் பழியேற்றுகின்றான். இந்த நிலை, மக்கள் சமுதாயத்தில் இன்றும் உள்ள நிலையாகவே உள்ளது. இது மனிதன் தனது தோற்றக் காலத்திலிருந்து எள்ளளவும் முன்னேறவில்லை என்ற அவல நிலையையே காட்டுகின்றது. ஆனால் அதே வேளையில் ஆண்டவனை உண்மையில் அறிந்த உள்ளுணர்வு பெற்ற நல்லடியவர்கள் வெற்றி தோல்வி இரண்டையும் தம்மேல் ஏற்றிக் கொள்ளாது "நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே" என்று கூறித் தம் கடமை வழுவாமல் மக்கட்பணி செய்வர். இந்த நிலை, சிலராவது சிற்சில காலங்களில் திருந்திய வாழ்வு பெற்றார்கள் என்ற உண்மையை உணர்த்தி உள்ளத்துக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

மனிதன் உலகில் தோன்றிய காலத்தை அறுதியிட இன்னும் அறிவியல் அறிஞர்கள் ஆராய்ந்துகொண்டே இருக்கிறார்கள். உயிர்த் தோற்ற வளர்ச்சியையும், அதன் உச்சியில் மனிதன் தோன்றிய வரலாற்றையும் பல உயிர் நூற்புலவர்கள் ஆராய்ந்து ஆராய்ந்து புதுப்புது உண்மைகளை உலகுக்கு உணர்த்திக்கொண்டே இருக்கின்றனர். முடிவு எப்போது எவ்வாறு காணப்பெறினும் மனிதன் பகுத்தறிவைப்பெற்று, தான் விலங்கினும் பிற உயிரினத்தினும் வேறுபட்டவன் என்று உணரத்தொடங்கிய நாள் பல ஆயிரமாயிரமாண்டுகளுக்கு முற்பட்டிருக்க வேண்டும் என்று கொள்ளல் பொருந்தும். அந்தப் பழம் பெருநாளிலேயே மனிதன் சமய உணர்வையும் பெற்றுவிட்டான் என்று கொள்ளுதலே ஆய்வுக்கும் வரலாற்றுக்கும் பொருத்தமாகின்றது.

பழங்கால மனிதன் விலங்கொடு விலங்காகக் கண்டதைத்தின்று விரும்பிய இடத்தில் உறங்கி எப்படியோ காலம் கழித்திருப்பான். காலம் செல்லச் செல்ல அவனுடைய ஆறாவது அறிவாகிய பகுத்தறிவு பல உண்மைகளை அவனுக்கு உணர்த்தியிருக்கும். அந்த உணர்வின் உச்சியிலே முளைத்த ஒன்றே 'சமயம்' என்ற பெயரொடு இன்று உலகில் வாழ்கின்றது எனக்கொள்ளல் வேண்டும். கண்டதைத் தின்று காலம் கழித்த மனிதனுக்கு, சென்றதையும் வருவதையும் எண்ணிப்பார்க்கும் அறிவுத்திறன் உண்டான காலத்தில் அவன் உள்ளம் பலவற்றை எண்ணியிருக்கும். விலங்குகளுக்கும் பிற உயிர்களுக்கும் இவ்வெண்ண ஆற்றல் இல்லை என்பார் சிலர். ஒரு சிலர் சிலவற்றிற்கு உண்டு என்பர். எப்படியாயினும் மனிதன் பெறுகின்ற அந்த உணர்வின் எல்லைக்கு அவை சமமாகா. இவ்வாறு எண்ணி உணரத் தொடங்கிய மனிதன் தன் செயல்களைப் பற்றியே கணக்கிட்டிருப்பான். தான் மேற்கொண்ட செயல்களுள் சில வெற்றி தந்ததையும் சில தோல்வி தந்ததையும் உணர்ந்திருப்பான். எல்லாத்திறனும் நல்ல சூழலும் பெற்றபோதும் எப்படித் தோல்வி வந்தது என நினைத்திருக்கும் அவன் உள்ளம். அந்த நினைவே தனக்கு மேம்பட்ட ஒருபொருள் தன்னை அறியாமல் எங்கோ இருக்கிறது என்ற நல்ல உணர்வினை அவனுக்கு உண்டாக்கியிருக்கவேண்டும். அந்த உணர்வுதான் சமய வாழ்வின் அடிப்படையாக அமைந்தது. அந்தக் காலம் 'என்று' என நம்மால் அறுதியிட முடியாது. என்றாலும் அது மனித வாழ்வில் தொடக்கத்தில் சிறந்த ஒரு நல்ல நாள் என்பதில் ஐயமில்லை. எல்லையிட்டுக் காண முடியாத அந்த நாளையே எண்ணி எண்ணிக் கணக்கிட நினைந்த அப்பரடிகளார் முடிவில்,

"புகையெட்டும் போக்கெட்டும் புலன்களெட்டும்
பூதங்களவை யெட்டும் பொழில்களெட்டும்
கலையெட்டும் காப்பெட்டும் காட்சியெட்டும்
கழற்சேவடி யடைந்தார் களைகணெட்டும்

நகையெட்டும் நாளெட்டும் நன்மையெட்டும்
நலஞ்சிறந்தார் மனத்தகத்து மலர்களெட்டும்
திகையெட்டும் தெரிப்பதற்கு முன்னே பின்னே
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே''

என்று பாடிவிட்டார். எனவே, அந்த நல்ல நாள் அறுதியிட முடியாத ஒன்றாகும்.

தனக்கு மேலான ஓர் பொருள் தன்னைச் செயலில் ஊக்குகின்றது என்ற உணர்வில் மனிதன் முதல் முதல் அதனிடம் அச்சமே கொண்டிருப்பான். கண்ணிற்குப் புலனாகா அப்பொருள் எப்படி இருக்குமோ என்ற உணர்வில் அவன் கண்ணிற்காணும் கொடிய சிங்கம், புலி, யானை முதலிய உருவங்கள் தோன்றியிருக்கலாம். பின் எண்ண எண்ணத் தன்னை ஆட்கொண்ட உருவம் அன்பின் வயப்பட்டதாக, அக்கொடியவற்றை யெல்லாம் தன் அடிக்கீழ் 'அடக்கி ஆளும் திறம் உடையதாக, அனைத்தினும் மேம்பட்டதாக உள்ள தன்மை வெளிப்பட்டிருக்கும். அந்த நிலையில் அவ்வச்சத்தினையும் அதை உணர்த்தும் சிங்கம், புலி, யானை முதலியவற்றையும் வாகனங்களாக்கி, இறைவனை அவற்றின்மேல் காட்சி அளிக்கும் கருணைக்கடலாகக் கண்டிருப்பான். இவ்வாறு உருவ வழிபாடுகளும் விழாக்களும் உருப்பெற்றிருக்கும் என்பதில் தவறில்லை.

முதல் உணர்வு அச்சத்தின் பாற்பட்டதாயினும் அவ்வுணர்வும் அவன் வாழ்வொடு பொருந்திய ஒன்றாகிவிட்டது. இடியையும் மின்னலையும் கேட்டும் கண்டும் அவன் அஞ்சினான். பெருநெருப்பும் சோனைமாரியும் அளவு மீறிய காட்டாற்று வெள்ளமும் கடுங்காற்றும் அவனைக் கவலைக்குள்ளாக்கின. அவை தன் சக்திக்கு மீறி, தன்னைத் துன்புறுத்துவதாகக் கண்டு, அவை தாம் கடவுளோ என நினைத்திருப்பான். அந்த நினைவின் வழியே அவற்றை வழிபடும் உணர்வும் உண்டாயிற்று. எனவே அவைகளைத் தெய்வமாக்கினான். பின்னால் அப்பொருள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தெய்வமும் உண்டு என்று கற்பித்துக்கொண்டான். அவையே இந்திரன், அக்கினி, வாயு, வருணன் என்ற பெயர்களைப்பெற்றன. பின்னால் மனிதன் ஊர்களை உண்டாக்கிக்கொண்டு, ஒவ்வோரிடத்தில் நிலையாக வாழத்தொடங்கிய காலத்தில் அத்தெய்வங்களுக்கெனத் தனித் தனியாகக் கோயில் கண்டான். அவையெல்லாம் அச்சத்தின் பாற்பட்டனவே. அவையே இன்று மாரியாகவும், காத்தவராயனாகவும், மன்னார்சாமியாகவும், காடனாகவும், மாடனாகவும் காட்சியளிக்கின்றன. சில கோயில்களில் உள்ள பெரிய உருவங்களைக் காணும்போது இன்றும் மக்கள் அஞ்சுகிறார்களன்றோ!

மனிதன் நல்ல அறிவுத்தெளிவு பெற்ற பிறகு இந்த அச்சத்தின் வழியாகப் பிறந்த கடவுள் உணர்வை எண்ணிப்பார்த்தான். அதற்குள் அவன் நாடுநகரங்களமைத்து, வீடுகள் கட்டிக்கொண்டு, மனைவி மக்கள் உற்றார் பெற்றாருடன் உறவாடி அன்பால் உள்ளங்கலந்து வாழக் கற்றுக்கொண்டிருக்க வேண்டும். கணவன் மனைவியிடமும் தாய் மகனிடமும், மக்கள் பெற்றோரிடமும் கொண்ட அன்பினைக்கண்ட அவன் உள்ளம், சாதாரண மனிதனே இப்படி அன்புக்குக் கட்டுப்படுகின்றான் என்றால், அவனுக்கு மேலான அவனைச் செலுத்தும் அந்தக் கடவுள் அவனைக் காட்டிலும் அன்புடையவராக அல்லவா இருக்கவேண்டும் என எண்ணியிருக்கும். அதுமுதல் கடவுளை அச்சப் பொருளாகக் கொள்ளாது, அன்பின் நிலைக்களனாகக்கொண்டு அவன் வழிபடத் தொடங்கியிருப்பான். அத்தொடக்கம் அன்பினையும் சிவத்தையும் அல்லது கடவுளையும் இணைத்துப் பார்த்து மகிழ்ந்து 'அன்பெனும் பிடியுள் அகப்படுமலையே' எனவாய் விட்டுக் கூற வழி செய்திருக்கும். இந்த நிலை எல்லா மக்களுக்கும் அமையவில்லை. ஒரு சிலர் இன்னும் அன்பால் அன்றி அச்சத்தாலேயே வழிபாடு செய்வதைக் காண்கின்றோம். இச்செயல் மனித இனம் இன்னும் முற்றிய பக்குவ நெறிக்குச் செல்லவில்லை என்பதைக் காட்டுகின்றது. அப்பரடிகள், சமயத்தில் இந்த ஆராய்ச்சியெல்லாம் வேண்டாம், அவன் வணங்குகிறானா? எப்படியாவது வணங்கட்டும் அதுபோதும் என்ற 'பரந்த நோக்கத்தில்,

'அஞ்சியாகினும் அன்புபட்டாகிலும்
நெஞ்சம்வாழி நினைநின்றியூரைநீ'

என்று பாடினார். என்றும் சமய உண்மைகளை நன்கு ஆராய்ந்து அன்பினை ஆண்டவனொடு பிணைத்துக் கண்ட திருமூலர்,

'அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்திலார்

அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந் திருப்பாரே' (270)

என்று பாடியுள்ளார். இப்படி அச்சத்துக்கும் அன்புக்கும் இடையிலே வளர்ந்த சமயம் பின் அன்பே அடிப்படையாகக்கொண்டு உலகில் உலவிவருகின்றது என்றாலும் அந்தப் பழைய அச்சத்தால் ஆற்றும் வழிபாடு இன்றும் அடியொடு அற்றுவிடவில்லை என்பதையும் காண்கின்றோம்.

சமயம், உண்டான நாள்தொட்டு மனித வாழ்வின் இன்றியமையாத ஒன்றாகிப் பின்னிப் பிணைந்துவிட்டது. அவனது வீட்டு வாழ்விலும் தனி வாழ்விலும் நாட்டு வாழ்விலும் உலகவாழ்விலும் சமயம் நிலைத்த இடம் பெற்றுவிட்டது. உயிர்கள் அன்புகொண்டே ஒன்றை ஒன்று தழுவி வாழ்கின்றன. இதையே வள்ளுவர் 'அன்பின் வழியது உயிர் நிலை' என்றார். அந்த அன்பு எல்லை இல்லாது யாண்டும் பரவுவதே தெய்வச் சமயநிலை என்பதைத்தான் திருமூலர் அவ்வாறு சிவத்தையும் அன்பையும் பிணைத்துக்காட்டினார். கடவுளைப் பாடவந்த இராமலிங்க அடிகளார் 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று ஓரறிவுயிரிடத்தும் அன்பு செலுத்தும் சமயநெறியை உணர்த்துகிறார்.

'படமாடக் கோயில் பகவற் கொன்றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங்காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன்றீயில்
படமாடக் கோயில் பகவற்கதாமே' (1857)

என்று திருமூலர் மக்களுக்குச் செய்யும் தொண்டே மாதேவன் தொண்டு எனக்காட்டிச் சமயம் வாழ்வொடு பிணைந்த ஒன்றே என்பதை நன்கு விளக்கியுள்ளார். இந்த அடிப்படையிலே சமயம் தான் தோன்றிய நாள்தொட்டு மக்கள் வாழ்வொடு பிணைந்து மக்கள் வாழ்வே தன் வாழ்வாக, மக்களைவாழ்விப்பதே தன் வாழ்வாக, அமைந்து வாழ்ந்து வருவதைக் காண்கின்றோம். அச்சமய வாழ்வு இன்று உலகில் பல துறையாகப் பிரிந்துள்ளது.

உலகின் பல பாகங்களிலும் கடவுளை வழிபடுகின்ற அடியவர் தம் தம் விருப்பத்துக்கும் சூழலும் பிறவற்றிற்கும் ஏற்ப வழிபாட்டை அமைத்துக்கொள்ளுகின்றனர். அதனாலேயே உலகத்தில் சமயங்கள் ஒன்றுக்கு மேல் என்று எண்ணில் பெருகி வளர்ந்தன. எல்லாச் சமயங்களும் அடிப்படையில் ஒன்றாக அமைந்து, உலக வாழ்வுக்கு உதவும் நிலையிலே சென்றாலும் அவ்வச் சமயத்தைப் பின்பற்றுகின்றவர் சிற்சில வேளைகளில் வழுக்கி வீழ்கின்றதைக் காண்கின்றோம். அதனாலே நாட்டு-உலக வரலாற்றில் சமயத்தின் அடிப்படையில் பலப்பல போர்கள் உண்டாவதைக் காண்கின்றோம். பரந்த பாரதநாட்டில் நம் தலை முறையில் சமய அடிப்படையில் நாடு துண்டாக்கப்பட்டதையும் அறிகின்றோம். தமிழ் நாட்டில் இடைக்காலத்தில் நடைபெற்ற சமயப் போராட்டங்களை இலக்கியங்களும் வரலாறும் காட்டுகின்றன. இந்த மாறுபாடு எதனால் ஏற்பட்டது? 'மக்கள் உள்ளத்தில் அன்புவித்திட்டு ஒன்றிய உணர்வாகிய அருள் பழத்தை அளிக்கவந்த சமயத்தின் வழியேயும் பூசலும் சண்டையுமா?' என்று நல்லவர் என்றும் இவற்றைக்கண்டு வாடுவர். பிரிந்த மனிதனைச் சேர்த்துவைத்த சமயங்களையே தமக்குத் துணையாகக்கொண்டு வாழ்வதை விடுத்து, அவற்றின் அடிப்படையிலேயே ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிகின்றார் என்றால் - ஆம் - மனிதன் மறுபடியும் விலங்காகிக்கொண்டு வருகின்றான் என்பதே அதன் பொருளாகும். அவ்வப்போது உலகில் தோன்றும் நல்ல அடியவர்கள் இப்பிரிவு மனப்பான்மையைப் போக்கிச் சமரச உணர்வை வளர்க்க நினைத்தாலும், சமுதாய வாழ்வின் அடிப்படையில் எங்கோ என்றோ உண்டான தடுமாற்றம் எல்லாத் துறையிலும் மனிதனைப் பிரித்துக் கலைத்து அல்லல் வழிச் செலுத்துகின்றது. இந்த நிலைகளனைத்தும் மனிதன் சமயத்தை நன்கு அறிந்து கொள்ளாத காரணத்தாலே உண்டாவனவே. இதனாலேயே சைவசமயத்திலே வாழ்ந்த பெரியவர்கள் சமயக்காழ்ப்பை நீக்க வேண்டிய தேவையை வற்புறுத்தினர்.

'தென்னாடுடைய சிவனேபோற்றி
என்னாட்டவர்க்கும் இறைவாபோற்றி'

என்றும்,

'யாதொரு தெய்வங் கொண்டீர்
அத்தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்'

என்றும்,

'விரிவிலா அறிவினார்கள்
வேறொரு சமயம்செய்தே
எரிவினால் சொன்னாரேனும்
எம்பிராற்கு ஏற்றதாகும்'

என்றும் பலவாறு பாடிச் சமய ஒருமைப் பாட்டுக்கு வழி கோலியுள்ளனர். எனினும் இன்றைய மனித உணர்வு எங்கே செல்லு கின்றது.

வாழ்வின் அடிப்படையாகிய சமய உணர்வு மனிதனை அவ்வாழ்வுக்குத் தேவை யான அன்பையே மேற்கொள்ளச் செய்கின் றது. அன்பு இல்லாவிட்டால் உலகில் ஒன் றிய வாழ்வு இல்லை. அன்பகத்தில்லாத் தனி உயிர் எதுவும் தழைப்பதில்லை. அன்பில்லா வீடும் நாடும் வளமுறுவதில்லை. இந்த அவல நிலையை இன்று உலக அரங்கத்திலே நன் ருகக் காண்கின்றோம். எத்தனையோ வேறு பாடுகளுக்கிடையிலும் தமிழ் நாட்டில் ஓர் அமைதி நிலவுகின்றதென்றால் அதற்குக் கார ணம் சமய வாழ்வேயாகும். மக்கள் மனக் கோயில்களில் ஆண்டவன் அமர்வதை அவர் கள் நன்கு உணரவில்லை என்றாலும் தமிழ் நாட்டில் எங்கு நோக்கினும் வானோங்கிய கோபுரத்துடன் காட்சி அளிக்கும் கோயில் கள் நம்மை அன்பு வழிக்குப்பற்றி ஈர்க் கின்றன. கொடுமை செய்ய நினைக்கின்ற ஒருவனும் அக்கோயிலைக் காணின் சற்றே பின்னடைவதை இன்றும் காண முடி கின்றது. எங்கோ ஒரு சிலர் கோயிலை மறந்து அவற்றின் வாழ்வைத் தம் வாழ்வாக மாற் றிக்கொள்ள முயல்கின்றார்கள் என்றாலும், தம் வாழ்வைக் கோயில் வாழ்வுக்கெனவே வழங்கிய பழங்கால நல்லவர்தம் உணர்வு களே கோயில்களைச் சிறக்க வாழவைக்கின் றன. கோயில் மனித வாழ்வொடு பின்னிய ஒன்று என்பதைத் தமிழ் நாட்டுக் கோயில் களின் அடிப்படைகளை உணர்ந்தால் அறிந்து கொள்ளலாம். ஓர் ஊரில் கோயில் உண்டு என்றால் அதில் அவ்வூரார் அனைவரும் இடம் பெறுவர். கோயில்கள் மக்களைப் பஞ்சக் காலத்தும் பாதுகாக்கும் உணவுச்சாலைகளாக, வெள்ளம் முதலிய போக்கிக் காக்கும் விடுதி களாக, வேறுபாடற்ற சமுதாயத்தை உரு வாக்கும் சீர்திருத்த மாடங்களாகத் திகழ வேண்டும்; திகழ்கின்றன. ஒருசில இந்த நிலைக்கு மாறுபட்டுள்ளன என்றால் அதை நிருவகிக்கும் மக்கள் உள்ளமே அதற்குக் காரணமே யன்றிக் கோயில்கள் காரண மாகா.

கோயில்களில் நடைபெறும் சிறப்பு விழாக்கள் மக்கள் வாழ்வொடு எப்படிப் பின் னிப் பிணைந்துள்ளன என்பதைக் காணின் 'சமய உணர்வே வாழ்வின் அடிப்படை' என் பது நன்கு விளங்கும். 'பசியும் பிணியும் பகையும் நீங்க, வசியும் வளனும் சுரக்க'வைப் பதுவே விழா என்ற உண்மை இரண்டா யிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர் கண்டு அறுதியிட்ட ஒன்றாகும். சமய சம்பந்தமான கோயில் விழாக்களில் இந்த நிலை இன்றும் காண்கின்றோம். பெருவிழாக் காலங்களில் வருபவருக்கு இல்லை என்னாது வாரிவழங்கும் 'ஓயாமடங்'களுக்கு இன்றும் குறைவில்லை. நாட்டில் பிணியும் பகையும் நீங்கும் வழி யிலே நாட்டு விழாக்களும் வீட்டு விழாக் களும் அமைகின்றன. பொங்கல் விழாவுக்கு முன் வீட்டைத் துப்புரவு செய்து, வெள்ளை யடித்து, பலவகையில் தூய்மைப்படுத்துவது பிணி நீக்கம்தானே. விழா நாளில் மற்ற வரையும் அழைத்து வேறுபாட்டை மறந்து கலந்து வாழ்வது பகை நீக்கந்தானே. இவ் வாறு நாட்டை நலிவுறுத்தும் பசி, பிணி, பகை இவைகளைக் களைவது சமயச்சார்பான விழாக்கள் எனக் காணும்போது அச்சமய உணர்வு வாழ்வொடு பிணைந்த ஒன்று என் பதை யாரே மறுக்கவல்லார்! அவ்வாறே மழையும் வளனும் சுரக்க ஆற்றும் விழாக் களும், மழையாலும் அதன் வரவால் பெற்ற வளனாலும் கொள்ளும் விழாக்களும் நாட்டை வாழ்விக்க வல்லன அல்லவோ!

இவ்வாறு சமயம் வாழ்வொடு பிணைந் துள்ளமையைச் சாதாரண அன்றாட வாழ்வி னும் காணலாம். தமிழ் நாட்டில் இடைக் காலத்தில் எல்லாவற்றையும் சமயத்தின்மேல் சார்த்தியே வாழ்ந்தனர். வீடு துப்புரவு செய் வது தொடங்கி நாடுகாக்கும் பெருநிலை வரை யில் சமயமே இடம் பெற்றிருந்தது. எனவே தான் உள்ளத்துப்புரவும் வீட்டுத்துப்புரவும் சமயச் சடங்குகளாயின. சமயச்சடங்குகள் வருவதாயின் அதற்கு முன் வீட்டைத் துப் புரவு செய்கிறோம். வாயிற்படிகளுக்கு மஞ் சள் குங்குமம் இடுகிறோம். மாவிலையும் வேப்பிலையும் கட்டுகிறோம். சாணத்தால் மனையை மெழுகுகின்றோம். இவை அனைத் தும் இன்றை நல்வாழ்வு நெறிப்படி நோயற்ற வாழ்வுக்குத் தேவையாக வேண்டு வனவல்லவோ! இவற்றையும் இடைக்காலத் தார் சமயநெறியொடு பிணைத்து, 'மனித வாழ்வு வேறு சமய உணர்வு வேறு' என்ற

எண்ணமே மக்கள் மனதில் தோன்றுதபடி வாழ்ந்தும் வழிகாட்டியும் சென்றனர்.

இவ்வாறு புறவாழ்வினை விட்டு அக வாழ்வினை ஆராயும்போதும், ஆண்டவன் தங்கும் அடியவர் உள்ளங்களைக் காட்டும் அடியவர்,

'பொய்யனைத்தையும் விட்டவர் புந்தியுள்
மெய்யன்'

என்றும்

'கல்லார்தார் மனத்தணுகாக் கடவுள் தன்னைக்
கற்றார்கள் உற்றோரும் காதலானை'

என்றும்

தொழுதுதூமலர் தூவித்துதித்து நின்று
அழுதுகாமுற்று அரற்றுகின்றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப்பாரையும்
எழுதும் கீழ் கணக்கு இன்னம்பர் ஈசனே'

என்றும்

தன்னில் ஆசறு சித்தமும் இன்றித்
தவம்முயன்று அவமாயினபேசி
பின்னல் ஆர்சடைக் கட்டிஎன் பணிந்தார்
பெரிதும் நிந்துவ தரிது'

என்றும் விளக்கிக்காட்டி நல்லதூய உள்ளங்களே நாட்டை வாழ்விப்பன என்ற உண்மையை எடுத்து உரைத்துள்ளனர். எனவே மக்கள்வாழ்வுக்கு இன்றியமையாத அகத் தூய்மை புறத்தூய்மை இரண்டும் சமயங்களின் அடிப்படையாக அமைந்துள்ளன. இன்னும் கோயில்களும் அவற்றின் பல நிகழ்ச்சிகளும் மக்கள் வாழ்வில் பிணைந்த, நிலைகளை ஒவ்வொன்றாக விளக்கின் எல்லையற்று விரியும் எனவே இந்த அளவோடு நிறுத்திக் கொள்ளலாம் என எண்ணுகின்றேன்.

இக்காலத்துச் சிலர் இவ்வாழ்வொடு பிணைந்த சமய வாழ்வை வேண்டாமெனப் பேசுகின்றனர். எனினும் அவர்தம் உள்ளங்கள் அவர் தம்பேச்சுக்களை முற்றவும் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை அவர்தம் செயல்களும் அவரைச் சேர்ந்தார் செயல்களும் நன்கு காட்டும். ஒரு சிலர் உலக இன்பமே கடவுள் என்று எண்ணியும் வாழ்கின்றார்கள். அவர்கள் தாம் நினைக்கும் உலக இன்பத்துக்கே தம்மை அடிமையாக்கி அழிந்தொழிவதையும் காண்கிறோம். இந்த நாத்திகமும் உலகாயதமும் நேற்று இன்று ஏற்பட்டவையல்ல. என்று உண்மை கூறப்பட்டதோ அன்றே இன்மையும் உண்டாகிவிட்டது. பழங் காலச்சங்க இலக்கியங்களிலேயும் 'இல்லை என் போர்க்கு இன்னாகியர்' என்ற எச்சரிக்கை பிறந்திருப்பதைக் காண்கின்றோம். இத்தனைக் காலமாக அவை வாழ்கின்றன என்றாலும் அவை மக்கள் வாழ்வொடு பொருந்தாத காரணத்தால் அழிவுப் பாதைக்குச் சென்று கொண்டே இருக்கின்றன. சமயநெறி எத்தனைக் கால்களாகப் பிரிந்தாலும் அத்தனையும் ஊற்றுப் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டே இருக்கின்றன. இன்று உலகில் வாழும் சமயங்கள் அடிப்படை மறவாது,

''கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக்
கலந்த நீத்தம்
'எல்லையில் மறைகளாலும் இயம்பரும்
பொருள் ஈது' என்னத்
தொல்லையில் ஒன்றே யாகித் துறை தொறும்
பரந்த சூழ்ச்சிப்
பல்பெருஞ் சமயம் சொல்லும் பொருளும்
போல் பரந்ததன்றே

என்று கம்பன் காட்டியபடி எல்லாவற்றின் அடிப்படையும் ஒன்றே என்ற உணர்வை உளம் கொண்டு, சமயம் மக்கள் வாழ்வுக்காகவே-உயிர்களின் வாழ்வுக்காகவே-என்ற உண்மையைச் செயல்விளக்கி, 'தன்தெய்வம் என் தெய்வமென்று எங்கும் தொடர்ந்து எதிர் வழக்' கிடாது மக்கட் பணிபுரியின் உலகில் எல்லாத் துன்பங்களும்இல்லையாகும். இத்துறையில் எச்சமயத்தோரும் தத்தம் கருத்தை இருத்தி நாட்டில் 'தீதொழிய நன்மைசெய்ய'முயலவேண்டும். தமிழ்நாட்டுச் சமயநெறியும் அதன் வழிகிளைத்த நல்ல பண்பாடும் இந்த அன்போடு கலந்த அறப் பணியை அந்த நாள் தொட்டு ஆற்றிவருகின்றன. இனியும் அச்சமயநெறி பிறழாது, தான், மக்கள் சமுதாயத்தின் ஆணிவேர் என்ற உணர்வில் தலைதாழ்த்துவாரின் நிலையை உயர்த்தி வாடுவரை வாட்டம் போக்கி வாழவைக்கவேண்டும். அத்துறையில் சமயக் கோயில்களும் பிற இடங்களும் பணி செய்யத் தூண்டும் வகையில் அறநிலைய அமைப்புக்களும் அவற்றின் ஆணையாளர்களும் அன்றைய சமயத்தலைவர்கள் போன்று

ஒளிக்குஞ் சோரன்

[திரு. ரா சண்முகசுந்தரம் செட்டியார், திருவதிகை]

அருணூல்கள் இறைவனைக் கள்ளன் எனவும் சோரன் எனவும் அருளுகின்றன. கள்ளன், சோரன் என்னும் மொழிகள் ஒரு பொருளன. அங்ஙனமாக இறைவனைப் போற்றுதல் என்னையென அவ்வவ் அருளாசிரியர்கள் கருத்தினை ஈண்டு ஆராய்வாம். பொதுவாக, இறைவன் அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் பொருளாவன். ஆயினும் அப்பொருள் உயிர்கட்காகப் படைத்தல் முதலிய ஐந்தொழில்களை இயற்றுகின்றது என்பது சைவாகமங்களின் துணிந்த முடிபாகும். உலகியலில் செயல் செய்வானாகிய வினைமுதல் உருவமுடையவனாய் வினைமுடிப்பது கண்கூடு. அங்ஙனமிருக்க, படைத்தல் முதலிய வினைகளைச் செய்வானாகிய இறைவன் உருவமின்றி எங்ஙனம் செய்யக்கூடும் என்ற ஆசங்கை நிகழும். உருவமின்றிய உயிர் உடலைச் செலுத்து முறைமையைக் கண்டு உருவமின்றிய இறைவன் படைத்தல் முதலிய தொழில்களைச் செய்யவல்லவன் என்று தெளியலாகும். எனவே கட்புலனுக்கு அறியவாராது இறைவன் மறைந்து நிற்பன் என்பது விளக்கமாம். இனி இவ்வாறு இறைவன் மறைந்து நிற்குங்காரணம் ஆராய்தற்குரியது. இறைவன் நீக்கமற நிற்கின்ற வியாபகன். அவன் உருவுடன் குறைவுபடுவானலன். வியாபகப்பொருள் உருவுடனிருக்க இயலாதென்பது தெளிவு. எனவே அவ்வியாபகப் பொருளாகிய இறைவன் கட்புலனுக்கும் உயிரறிவுக்கும் மறைபொருளாகவே அறியவாராது விளங்குந்தன்மையதாகும். இவ்வாறு எங்குங் கலந்து நின்று அறியமாட்டாத்தன்மையை அறிவிப்பான் இறைவனை "விறகிற்றீயினன் பாலிற்படு நெய் போல், மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்" என்று அப்பர்பெருமான் போற்றியுள்ளனர்.

இனி, காழிப்பிள்ளையார் தாம்பாடிய முதற்றிருப்பதிகத்துள், 'உள்ளங்கவர் கள்வன்'' என்று இறைவனைக் குறிக்கின்றனர். இத்திருப்பதிகம் தோடுடைய செவியனெனும் முதலையுடையது. அது சீகாழிப்பதியில் பிரமதீர்த்தக் கரையில் பாடப்பெற்றது. ஈண்டு கள்வன் என்று குறிப்பிட நேர்ந்த நிலையைக் கருதுவாம். கள்வனாயின் தான் விரும்பிய பிறர் பொருளை அவர் அறியாவண்ணம் மறைந்து நின்று கொள்பவன். ஈராண்டுப் பாலனாகும் பிள்ளையார் முன்னைத் தவத்தின் காரணமாய் அழுது தன் தந்தையாரொடு பிரமதீர்த்தக்கரைக்குச் சென்றார். தந்தையாரும் அவர் தம்மைக் கரையினில் தனிவைத்துத் தோணிபுரத்து ஈசர் கழல் வணங்கி நீர் மூழ்கினர். தனி நின்ற பிள்ளையார் முந்தையுணர்வு பெற, இறைவனார் கழல் நினைந்து அழுதனர். அவர் அழுத நிலையினைச் சிறந்த ஓவியமாக,

கண்மலர்கள் நீர்ததும்பக் கைம்மலர் களாற் பிசைந்து
வண்ணமலர்ச் செங்கனிவாய் மணி அதரம்புடைதுடிப்ப
எண்ணில் மறை ஒலிபெருக எவ்வுயிருங்குதூகலிப்பப்
புண்ணியக்கன் றனையவர்தாம் பொருமி அழுதருளினர்

[திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம்—62]

என்று சேக்கிழாரடிகள் அருளியுள்ளனர். இங்ஙனம் அழுத பிள்ளையார் சுற்றுப் புறங்

நாடு முழுவதும் சுற்றி நல்லபணி ஆற்றிவருகின்றனர். அவர்தம் அலுவலகத்திலிருந்து திங்கள் தோறும் தோன்றும் முழுமதியென்னுமாறு திருக்கோயிலும் அப்பணியை உலகுக்கு உணர்த்துகின்றது. இப்பணிகள் சிறக்கவும் மக்கள் வாழ்வு சமய உணர்வால் செழிக்கவும் செய்ய வேண்டுமென 'தானே வந்தெம்மைத் தலையளித்து ஆட்கொண்டு, காக்கும் அண்ணல் அடிபணிந்து அமைகின்றேன்.

கண் மீது கண்களைப் போக்கினர். அவர் கண்கள் செம்மேனி வெண்ணீற்ருராகிய சிவபெருமான் திருத்தோணிபுரத்தின் சிகரத்தைப் பார்த்தன. அவர்தம் உள்ளம் உருவின்றியே உருவெலாமாயவனை நினைவுற்றது. உள்ளெழுந்த காதல் வாய்விட்டு "அம்மே அப்பா" என்றழைக்கச் செய்தது. இவ்வழைப்பு இறைவனுர் திருச்செவியையுற்றது. அன்பின் வலையில் அகப்படும் ஆண்டவன் அவரது ஞானப்பசியினை அறிந்தார். உமையம்மையாரை ஆங்குப்போந்து பொன் வள்ளத்தில் பால் சுரந்து ஞானத்தைக் குழைத்து ஊட்டச் செய்து அப்பசியினைத் தணியச் செய்வித்தார். அப்பசிய பிள்ளையார் உள்ளத்தில் எழுந்ததன்ருே! அவ்வுள்ளத்தை இறைவனுர் தன் வசமாக்கினுர். அவ்வருட்செயல் அப்பாலகனுர் அறியாமே நிகழ்ந்தது. அந்நிகழ்ச்சி அச்சிறுவர்க்கு வியப்பினைத் தந்தது. உள்ளம் தன் வசமில்லாமை தெளிந்தார். அதனுல் தோணிபுரத்தீசனைத் தான் அறியாமே தன்னுள்ளத்தைக் கவர்ந்த கள்வர் என்ருர்.

இச்சிறிய பெருந்தகையார் இங்ஙனம் தெளிய, ஆண்டில் முதிர்ந்த அப்பர்பெருமானுர் மேலே யுணர்த்திய முறையேயன்றிப் பிறிதொரு வகையானும் இறைவன் மறைந்து நிற்கும் நிலையுணர்த்துகின்றனர். இறைவன் உயிர்கள் தோறும் கலந்துநிற்கும் பெற்றியன். அவனுல் பெறப்படும் இன்பத்தினை வேட்கையோடு வள்ளத்தேபொருந்திய தேனை நுகருமாறு போல அநுபவிக்க இயலாமையாகிறது. இந்நிலையைக் கூருவொண்ணு வியப்பாகக் கருதுகிருர். இறைவன் உயிர்ப்பின் வழிஉள் புகுவதும் புறம் போவதுமாய் இருப்பினும் உயிர்களது கட்புலனும் அறிவும் அறியா மாட்டாதனவாய் நிற்றலால் காண்பது அரிதாகிறது என்று வருந்துகிருர். இதனை

வெள்ளத்தானென்று மாட்டேன்
விருப்பென்னும் வேட்கை யாலே
வள்ளத்தேன் போல நுன்னை
வாய் மடுத்துண்டி டாமே
உள்ளத்தே நிற்றி யேனும்
உயிர்ப்புளே வருதியேனும்
கள்ளத்தே நிற்றியம்மா
எங்ஙனம் காணுமாறே (7)

எனவரும் பொதுத்தனி நேரிசைப் பாட்டால் அறியலாகும்,

இங்ஙனமாகும் இறைவன் என்றும் மறைந்து நிற்கும் இயல்பினன் என்பார் ஒளிக்குஞ் சோரன் என்றுணர்த்துகின்ருர். அது

மரகதக்குவாஅல் மாமணிப் பிறக்கம்
மின்ஞெளி கொண்ட பொன்ஞெளி திகழத்
திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்தும்
முறையுளி ஒற்றி முயன்றவர்க் கொளித்தும்
ஒற்றுமை கொண்டு நோக்கும் உள்ளத்
துற்றவர் வருந்த உறைப்பவர்க் கொளித்தும்
மறைத்திறம் நோக்கி வருந்தினர்க் கொளித்தும்
இத்தந்திரத்திற் காண்டும் என்றிருந்தோர்க்கு
அத்தந்திரத்தின் அவ்வயின் ஒளித்தும்
முனிவற நோக்கி நனிவரக்கௌவி
ஆணெனத் தோன்றி அலியெனப் பெயர்ந்து
வாணுதற் பெண்ணென ஒளித்தும் சேண்வயின்
ஐம்புலன் செலவிடுத்தருவரை தொறும் போய்த்
துற்றவை துறந்த வெற்றுயிர் யாக்கை
அருந்தவர் காட்சியுள் திருந்த ஒளித்தும்
ஒன்றுண்டில்லை யென்றறி வொளித்தும்
பண்டே பயிறொறும் இன்றே பயிறொறும்
ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம்
ஆர்மின் ஆர்மின் நாண்மலர் பிணையலில்
தாள்தளை இடுமின்
சுற்றுமின் சூழ்மின் தொடர்மின் விடேன்மின்
பற்றுமின் என்றவர் பற்றுமுற்றொளித்தும்
(124-145)

எனவரும் திருவாசகத் திருவண்டப் பகுதி அடிகளால் விளக்கப்பெறுவது உணரத்தக்கது. ஈண்டு உயிர்கள் உபாயங்களால் இறைவனைக் காணமுயல்கின்றன. அவனைக் காண முயல்பவர்க்கெல்லாம் மறைந்து நிற்பவனுகவே விளங்குகிருன். உபாயங்கள் பல்வகைத்தாய் விரிக்கப் பட்டுள்ளன. முன்னர்ப்பருப் பொருளாய் ஒரு வரலாறு குறிக்கப்படுகின்றது. அஃது அரியயன் அடிமுடி தேடிய வரலாருகும். பருப்பொருளாய் அவ்வரலாறு காணப்பெறினும் உள்ளுறையாக ஓர் உண்மைப் பொருளையுடையதாகும். இறைவன் ஞானவடிவினன். அந்த ஞானம் எல்லையற்றது. ஆகவே அதனைத் தற்போத சிற்றறிவு எத்துணை உயர்வு பறந்து சென்ருலும் அல்லது ஆழம் ஆழ்ந்து சென்ருலும் அதனைக் காண்பதரிது. தற்போத நீங்கி இறைவனை வழிபாடு செய்வோரே காண்டற் கெளிமையாகும் என்பது நாவுக்கரசர் கருத்து போலும். இதனை

மரங்களேறி மலர் பறித்திட்டிலர்
நிரம்ப நீர் சுமந்தாட்டி நினைந்திலர்
உரம் பொருந்தியொளி நிறவண்ணனை
நிரம்பக் காண லுற்றாரங்கிருவரே

எனவரும் இலிங்க புராணம்—திருக்குறுந்தொகை அறிவிக்கின்றது. அயன் அரி என்றிருவர் தற்போதவுணர்ச்சியால் அறியாதாராயினர். அங்ஙனமாயின் நூல்பல துறை போகக் கற்றுத் தெளிந்து அவ்வழி ஒற்றித்து நின்று காண்போம் எனினும் அவர் தாந்தெளிந்தோமெனும் முனைப்பு உடையாராதலின் அவர் தமக்கும் இறைவன் மறைந்து நிற்பவனேயாவன். புலன்களையடக்கி ஒருமுகப்பட்ட மனத்துடன் வருந்தி நின்றார்க்கும் இறைவன் மறைந்து நிற்பவனே யாவன். இவர்கள்யோகிகளாவர். இவர்கட்குச் சிவஞானம் கைகூடாமையான் இறைவன் அரியவனானன். வேதங்களை நன்கு ஓதி வருந்தினர்க்குத் தெளிவுபெறப் படாமையின் அவர்கட்கும் இறைவன் மறைந்து நிற்பவனே யாவன். சூழ்ச்சிகளால் இறைவனைக் காண்டற்கியலுமென்று ஒவ்வோர் சூழ்ச்சியினைக் கைக்கொண்டு நின்றோர்க்கும் அவன் மறைந்து நிற்பவனேயாவன். அறுவகைக் குற்றங்களையும் நீக்கிக் காண நின்றோர் மிகுதியும் பற்றி நின்றாலும் அவர்கட்கும் உண்மை வடிவத்தைப் புலப்படுத்தாது ஆண் எனவும் அலி எனவும், பெண் எனவும் தோன்றி மறைந்து நிற்பவனே யாவன். மற்றும் உலகச்சூழுறவு விட்டு மலையுச்சியடைந்து உணவின்றி வெற்றுயிர் யாக்கையுடன் விளங்கும் அருந்தவாரயினும் அவர் சீரிய பக்குவமடைதற் பொருட்டு முழுவதும் மறைந்து நிற்பவனே யாவன். இனி அறிவின் கூர்மையாற்றெளிவன் என்று மெய்ப்பொருள் உண்டு இல்லை என்று ஆராய்ந்தார்க்கும் அவர் சிவஞானம் பெறாமையான் அவர்கட்கும் இறைவன் மறைந்து நிற்பவனே யாவன். இத்தகைய இயல்பு இறைவன்பால் என்றுமுள்ளதென்று உணர்த்துவார் பண்டே பயில்தொறும் இன்றே பயில்தொறும், ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம் என்றார். இறைவன் பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருளாதலின் அவனதியல்பும் என்றுமுள்ளதாயிற்று. பன்னெடு நாள் வருந்திக் காணும் புண்ணியம் பெற்றோர் இறைவனைப் பற்றித் தன்பால் இருத்திக் கொள்ள முந்துவர். அவர்தம் முயற்சியை ஓர் எடுத்துக் காட்டால் உணர்வாம். பலநாட்களாகத் திருடிவந்த கள்வனை ஒரு கால் கண்டபோது கோபம் பொங்கி அவனைப் பற்றுதற்குப் பிறர் தம்மைஅழைப்பர். பிடியுங்கோள், காட்டுங்கோள், சூழ்ந்துநில்லுங்கோள். அவன் கால்களைக் கட்டுங்கோள், விடாதேயுங்கோள், தொடர்ந்து செல்லுங்கோள் என்றிவ்வாறு கதறுவர். அவ்வாறு அலறுதலைக் கேட்ட மற்றையர் கள்வனைப் பற்றுதலும் இயலும். அவர்தம்பற்றிளின்றும் கள்வன் நீங்கி ஓடுதலுமுண்டு. அங்ஙனமே மணிவாசகனார் என்றும் மறைந்து நிற்கும் ஒழுக்கமுடைய இறைவனைக் கண்ட மாத்திரத்தே பற்றுததற்கு முயற்சிப்பார் போல் பற்றுங்கோள், பற்றுங்கோள், திருவடிகளை மலர் மாலையால் பிணைத்துகட்டுங் கோள், வலஞ்செய்யுங்கோள், தொடர்ந்து செல்லுங்கோள், விடாதேயுங்கோள் என்று இவ்வாறு அலறுகின்றனர். அங்ஙனம் சென்றவர் தங்கைப் பிடியில் அகப்படும் முன்னம் இறைவன் மறைந்து நிற்பவனேயாவன். எனவே எத்துணை உபாயங்களாலும் இறைவன் காணமாட்டாத தற்பரனாதலின் மெய்ஞ்ஞானிகள் அனைவரும் இறைவனைக் கள்வன் என்றே போற்றுவராயினர்.

இனி அக்கள்வனார் உயிர்கள் தம்மைக் கலந்திருந்தும் ஆற்றும் பயன்களையுணர்வாம். அகண்டமாய் விளங்கும் அவன் மறைந்து நிற்பானாயினும் உயிர்களைப் பக்குவம் செய்வதே கடனாகக்கொண்டு விளங்குவன். இதனை ஓர் எடுத்துக்காட்டால் விளக்குவர் ஆன்றோர். களவுகாண்பானொருவன் தன்னுண்மை நிலை மறைத்துக் கொண்டு பொருள் மிக்காரோடு பரிவுடையவன் போல கலந்து பழகுவன். மந்திரத்தாலும், மருந்தாலும், தன்னை எப்போது நினையுமாறு செய்வித்தலாலும் அவனைத்தன் வசமாக்குவன். பின் அவன் பொருளனைத்தையும் கைக்கொள்வன். அதுபோலவே இறைவனார் அநாதியே மலத் தொடர்புடைய உயிர்கள் தம்மைக் கலந்து மறைந்து நின்று இருவினையொப்பும், மலபரி பாகமும் வரச் செய்வான். அவர்கட்குத் திருநீறு என்ற மருந்தும், திருவைந்தெழுத்து என்ற மந்திரமும், தன்னைத் தொடர்ந்து நிற்கும் வகை தியானமும் உதவி அவர் தம்மைத் தன்

வசமாக்குவன். இங்ஙனம் அணைந்தோர்க்கு வீடு எளிதாவது இறைவனால் பெறப்படும் முடிந்தபயனாகுமென்பதனை

கள்ளரோடு இல்லமுடையார் கலந்திடில்
வெள்ள வெளியா மென்றுந் தீபற
வீடுமெளிதா மென்றுந் தீபற

என்று திருவுந்தியார் உணர்த்துவது உணரத் தக்கதாகும். இறைவன் உயிர்களிடத்தே யொளித்து நின்று ஆளுந்தன்மையன் எனத் திருமூலர்

வள்ளற்றலைவனை வானநன்னாடனை
வெள்ளப் புனற்சடைவேத முதல்வனைக்
கள்ளப் பெருமக்கள் காண்பர்கொலோ என்று
உள்ளத்தினுள்ளே ஒளித்திருந்தானுமே

எனவருந் திருமந்திரத்துட் குறிப்பதும் அறியத்தக்கது.

செய்திகள்

தகட்டூர் : பைரவநாத சுவாமி கோயிலில் இலட்சார்ச்சனைப் பூர்த்திவிழா 6—12—61-ல் நடைபெற்றது.

மதுரை : கூடலழகப்பெருமாள் கோயிலில் வைகுண்ட ஏகாதசி விழா 18—12—61 முதல் 27—12—61 வரை நடைபெற்றது.

திருவாலங்காடு : இரத்தின சபாபதீசுவர் சுவாமி கோயிலில் ஆருத்திரா தரிசனவிழா 23—12—61-ல் நடைபெற்றது.

திருமுருகன்பூண்டி : திருமுருகநாதசுவாமிக்கு 13—12—61-ல் கலாகர்ஷண அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன.

திருக்குற்றாலம் : திருக்குற்றாலநாதசுவாமி கோயிலில் திருவாதிரை திருவிழா 13—12—61 முதல் 23—12—61 வரை நடைபெற்றது; சமயச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

திருவாதவூர் : மாணிக்கவாசகர் கோயில் மகாசங்காபிஷேகம் 11-12-61-ல் நடைபெற்றது.

வள்ளியூர் : சுப்பிரமணிய சுவாமி கோயிலில் தெப்பத்திருவிழா 15—12—61-ல் நடைபெற்றது.

திருவாரூர் : தியாகராஜப்பெருமானுக்கு மார்கழித்திருவாதிரைவிழா 21, 22, 23—12—61 தேதிகளில் நடைபெற்றது.

சிரவணபுரம் : கௌமார மடாலயத்தில் இராமானந்த சுவாமிகளின் ஐந்தாவது ஆண்டு குருபூசை விழா 25—12—61-ல் நடைபெற்றது.

திருவாரூர் : கமலாம்பாளுக்கு கால்கோடி அர்ச்சனை விழா 4—10—61 முதல் நடைபெற்று வருகிறது.

குளித்தலை : நீலமேகப்பெருமாள் கோயிலில் வைகுண்ட ஏகாதசிப் பெருவிழா 17—12—61 முதல் 28—12—61 முடிய நடைபெற்றது.

பேரூர் : பட்டீசுவரர் கோயிலில் மார்கழித்திருவாதிரைத் திருவிழா 14—12—61 முதல் 27—12—61 வரை நடைபெற்றது.

சங்கரநல்லூர் : தாண்டேசுவரசுவாமி கோயிலில் மார்கழித்திருவாதிரைத் திருநாள் 13—12—61 முதல் 24—12—61 முடிய நடைபெற்றது.

திருச்சுழி : திருமேனிநாதசுவாமி கோயிலில் இலட்சார்ச்சனை 25—12—61 முதல் 29—12—61 வரை நடைபெற்றது.

திருப்போரூர் : ஸ்ரீ கந்தசாமி தேவஸ்தானத்தைச் சார்ந்த முருகன் செந்தமிழ்க் கழகத்தின் மூன்றாவது ஆண்டு விழா 25—10—61-ல் சென்னை அறநிலையத் துணை ஆணையர் திரு. D. இராமலிங்க ரெட்டியார் M.A., B.L. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சைவசித்தாந்த மகா சமாஜத்தின் செயலாளர் திரு. G.கலியாணம் M.A., அவர்கள் 'அடியார் திருக்கூட்டம்' என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். ஒவ்வொரு கிருத்திகையிலும் இக்கழகத்தின்மூலம் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்கின்றன.

திருவெண்ணெய்நல்லூர்க் கல்வெட்டுக்கள்

[வித்துவான். திரு வை. சுந்தரேசவாண்டையார், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்]

திருவெண்ணெய்நல்லூர் என்பது நடு நாட்டுத்தேவாரம் பெற்ற தலங்களுள் ஒன்றாகும். இது சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடப்பெற்ற பழமையும் பெருமையும் வாய்ந்தது. இது தென்னார்க்காடு ஜில்லாவில் திருக்கோவலூர்த் தாலூகாவில் இருக்கின்றது. இத்திருக்கோயிலில் சோழ மன்னர்களில் முதலாம் இராசராசன், கோப்பரகேசரி பன்மரான இராசேந்திரதேவன், இரண்டாங் குலோத்துங்கன், இரண்டாம் இராசாதிராசன், மூன்றாங் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன், மூன்றாம் இராசேந்திரன் இவர்கள் காலங்களிலும்; பாண்டிய மன்னர்களில், ஜடாவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி வீர பாண்டியதேவன், விக்கிரம பாண்டியன் காலங்களிலும்; பல்லவமன்னர்களில் முதலாம் கோப்பெருஞ்சிங்கன், இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் இவர்கள் காலங்களிலும்; விசயநகர வேந்தர்களில் மகாமண்டலேஸ்வரன் வீரபூபதி உடையார், விஜய மகாராயர், விருபாட்சு மகாராயர், குமார மல்லிகார்ச்சுனராயர், கிருஷ்ணதேவராயர் இவர்கள் காலங்களிலும்; சாளுவ மன்னர்களில் மகாமண்டலேசுவரன் நரசிங்க தேவமகாராயர் காலத்திலும், சம்புவராய மன்னரில் இராஜநாராயண சம்புவராயர் காலத்திலும் செதுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

இறைவரின் திருப்பெயர் :—

இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவர், முதலாம் இராசராசன்கல்வெட்டில் திருவெண்ணெய்நல்லூர்த் திருவருட்றை ஆள்வார் என்றும், கோப்பரகேசரி பன்மரான உடையார் இராசேந்திரதேவர் கல்வெட்டில் திருவருட்டுறை உடைய மகாதேவர் என்றும், இரண்டாம் இராசாதிராசன் முதலானோர் கல்வெட்டுக்களில் திருவெண்ணெய்நல்லூர் உடையார் ஆட்கொண்டதேவர் என்றும், தடுத்தாட்கொண்ட தேவர் என்றும் அழைக்கப் பெறுகின்றனர்.

A. R. E. 1902—Numbers 309—319
A. R. E. 1921— ,, 420—483
S.I.I. Vol VII ,, 938—948 and
S.I.I. Vol XII The Pallavas.

குறிக்கப்படும் திருமேனிகளுள் சில

திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவரின் 32-ஆம் ஆண்டுக் கல்வெட்டில் பள்ளியறை நாச்சியார், வாணலிங்கதேவர் இவர்களும், திரிபுவனச்சக்கரவர்த்தி இராஜராஜதேவரின் கல்வெட்டில் க்ஷேத்திர பாலப் பிள்ளையாரும், இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனின் கல்வெட்டில் திருக்காமக்கோட்டம் மேலைமூலையில் எழுந்தருளியிருக்கும் பிள்ளையாரும் குறிக்கப்படுகின்றனர். இப்பிள்ளையாரின் முழுப்பெயரும் கிடைக்கப்பெறவில்லை. எழுத்துக்கள் சிதைந்து விட்டபடியால் தில்லைவ...நன்பிள்ளையார்" என்பது மாத்திரம் கிடைக்கின்றது.

எழுந்தருளுவிக்கப்பெற்ற திருமேனி

"பூமருவிய திசைமுகத்தோன் படைத்த பெரும்புவிவிளங்க"—என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியையுடைய மூன்றாங் குலோத்துங்க சோழன் காலத்தில், கூடல் ஏழிசை மோகன்மணவாளப்பெருமாள் வாள்விலைகண்டானான காடவராயன் ஒரு திருமேனியை இக்கோயிலில் எழுந்தருளுவித்துள்ளான். கல்வெட்டில் அப்பெயர் சிதைந்துவிட்டது.

சுந்தர மூர்த்தி சுவாமிகளைப் பற்றிய செய்திகள்

இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆளுடைய நம்பி என்னும் பெயரால் அழைக்கப் பெறுகின்றனர். அவர் நாச்சிமாரோடு எழுந்தருளியிருக்கும் இடம் ஆட்கொண்ட தேவர் தீர்த்தக்குளமான தேவனார் கேணியின் கீழ்கரை ஆகும். இச்செய்திகள் "பூமன்னு பதுமம் பூத்த ஏழுலகும் தாம் முன்செய் தவத்தால் பருதிவழித்தோன்றி"—என்று தொடங்கப் பெறும் மெய்க்கீர்த்தியையுடைய இரண்டாங் குலோத்துங்க சோழதேவரின் கல்வெட்டில் குறிக்கப் பெற்றுள்ளன. இக்கல்வெட்டு

ஏற்பட்ட காலம் கி. பி. 1148 மே மாதம் ஒன்பதாம் தேதி ஆகும். ஒரு தெருவுக்கு ஆலாலசுந்தரப் பெருந்தெரு என்றும், ஒரு சுரபி மன்றுடிக்கு நம்பி ஆரூரன் கோன் என்றும், ஒரு ஊர்க்கு. தடுத்தாட்கொண்ட நல்லூர் என்றும் பெயர்கள் வைக்கப்பெற்றிருந்தன. இவ்வூரில் வழக்கு வென்ற திருவம்பலம் என் னும் பெயரால் கருங்கல் கட்டிடம் ஒன்று இருந்ததை,திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத் துங்க சோழதேவரின் 29-ஆம் ஆண்டுக் கல்வெட்டு அறிவிக்கின்றது. இந்த அம்பலம் உள்ள இடம் வேறு ஒருவர்க்கு உரியதாய் இருந்தது. அதற்குப் பதில் கோயிலுக்கு உரிய இடத்தை அவர்க்குக் கொடுத்து இந்த இடம் கொள்ளப்பட்டது என்பதையும் அக் கல்வெட்டு தெரிவிக்கின்றது.

திருச்சின்னத்துக்கு "பிச்சன் என்று பாடச்சொன்னுன் திருச்சின்னம்" என்று பெயர் வைக்கப் பெற்றிருந்தது. சுந்தரமூர்த்தி சுவாமியை நோக்கி "நமக்கும் அன்பில் பெருகிய சிறப்பின் மிக்க அர்ச்சனே பாட்டே யாகும். ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக" என்ருர். அதற்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகள், 'கோதிலா அமுதே! இன்று உன் குணப்பெருங்கடலே நாயேன் யாதினே அறிந்து என் சொல்லிப்பாடுகேன்' என்ருர். அதற்கு இறைவர் "முன்பு என்னேப் பித்தனென்றே மொழிந்தனே, ஆத லால் என்பெயர் பித்தன் என்றே பாடு வாய்"—என்ருர். அப்பொழுது சுந்தர மூர்த்தி சுவாமிகள் "பித்தாபிறைசூடி" எனப் பெரிதாந்திருப்பதிகம் பாடினுர் எனச் சேக்கிழார் பெருந்தகையார் கூறியவர லாற்றை உறுதிப்படுத்துகின்றது "பிச்சன் என்று பாடச் சொன்னுன் திருச்சின்னம்" என்ற கல்வெட்டுத் தொடர். [பித்தன்—பிச்சன் தகரத்துக்குச் சகரம் போலி]

அக்கல்வெட்டு பின்வருமாறு

ஸ்வஸ்திஸ்ரீ ஸகலபுவனச் சக்கரவர்த்தி கள் ஸ்ரீகோப்பெருஞ்சிங்கதேவர்க்கு யாண்டு 27 ஆவது (உஎ) மேஷ நாயற்று பூர்வ பக்ஷத்து சதுர்த்தஸியும் புதன் கிழமையும் பெற்ற அத்தத்து நாள் திருவெண்ணெ நல்லூர் உடையார் ஆட்கொண்ட தேவற்கு மத்யஸ்தன் செஞ்சி உடையான் உதையன் கைலாய முடையான் இட்ட பிச்சன் என்று பாடச்சொன்னுன் திருச்சின்னம் இரண்டினுல் வெள்ளி எடை ஐம்பத்து ஐங்கழஞ்சும், ஆவுடைய நாயனுர் சீபாதத்து சாத்தின கொடி உடன் கோத்த கால் காறையுடன் ஒன்பது மாற்றில் பொன் இரு கழஞ்சு. இது பன்மாஹேஸ்வரரக்ஷை. (S. I.I. Vol. The Pallavas No. 231)

N.B.—இக்கல்வெட்டு இரண்டாம்கோப் பெருஞ்சிங்கன் காலத்தில் பொறிக்கப் பெற் றது. இக்கல்வெட்டு ஏற்பட்ட காலம் கி.பி. 1268 மார்ச்சு 28-ஆம் தேதியாகும்.

சுந்தரமூர்த்தி நாயனுர்க்கு விடப் பட்ட நிலநிவந்தம்

நாச்சிமாரோடு பூசை கொண்டருளுகிற ஆளுடைய நம்பிக்கு அமுதுபடி உள்ளிட்ட நிவந்தங்களுக்கு உடலாக (மூலதனமாக) திருவெண்ணெய்நல்லூர்ச் சபையார் திரு வெண்ணெய்நல்லூர் நாட்டு, பட்டர்கள் ஆதனூர் எல்லேயில் அதிராதிர காடகையாஜி யார், ஆட்கொண்டதேவற்குச் சட்டிவிளாக மாகக் கொண்டு விட்ட நிலத்துக்கு வடக்கே அரைவேலி நிலத்தைக் கொடுத்துள்ளனர். இது நிகழ்ந்தது இரண்டாம் குலோத்துங்க சோழதேவரின் காலமாகும் (கி. பி. 1148). இதே ஆண்டில், களத்தூர் சிறிய நம்பி சகஸ்ரன், ஆளுடைய நம்பிக்கு அடைக்காய் அமுது இலேயமுது இவைகளுக்குத் திருவெண் ணெய்நல்லூரில் ஸ்ரீவானவன் மாதேவி வதிக்கு மேற்கு, மும்முடி சோழவாய்க் காலுக்கு வடக்கு இதற்குட்பட்ட தோட்ட நிலத்தைக் கொடுத்துள்ளான்.

ஆட்கொண்டதேவர் கோயிலிலே மாடா பத்தியஞ் செய்த உடையார் அகமுடையாள் பொன்னுண்டாள், ஆளுடைய நம்பிக்கு அமுது படிக்கும், திருக்கை கொட்டிப் புறத் துக்கும் ஆக திருவெண்ணெய்நல்லூரில் வானவன் வதிக்கு மேற்கு, மும்முடி சோழ வாய்க்காலுக்கு வடக்கு நிலம் ஒன்றே அரைமா அரைக்காணிக் கீழரையை விற்று, விற்ற காசை ஸ்ரீபண்டாரத்திலே ஒடுக் கினுள். மாடாபத்தியம்—கோயில் விசாரணே. திருக்கை கொட்டிப்புறம்=திருமுறை ஓது தற்குரிய கோயில் மண்டபத்துக்கு விட்ட நிவந்தம்]

திருவருட்டுறை உடைய மகா தேவர்க்கு அளிக்கப்பெற்ற நிவந்தம்

அருட்டுறை உடைய மகாதேவர் கோயில் தேவரடியாரில் அறமுடையார் மகன் திருமலே அழகியானை வீரகள் வீரப் பல்லவரையன் அருட்டுறை உடைய மகா தேவர்க்கு தூபமணி, தூபம், துடர், திருவா ராத்தித் தட்டம் இவைகளைக் கொடுத்துள் ளான். இவனுக்கு ஏமப் பேறூரில் பெண்ணை யாற்றுக்குத் தெற்கே புன்செய் நிலம் 3500 குழியும் இவன் தம்பிக்குத்திருவெண்ணெய் நல்லூரில் 1250 குழியும் ஆக 4750 குழிகள் அல்லதுமுப்பது மாவரைநிலங்கள் இருந்தன. இத்திருமலே அழகியான் இறக்கும் பொழுது இந்நிலங்களை இரண்டாம் கோப்பொருஞ்சிங் கன் தன் முதலிகளில் ராசராச தேனம்மைய னுக்குத் திருக்கை வழக்கமாக வழங்கினான். அந்நிலத்தை இந்த முதலி, கோயில் மண்ட பத்தில் பதினாலும், திருக்காமக்கோட்டத்தில் மூன்றும், திருநடை மாளிகையில் மேல் எல்லேயில் அழகிய நாயனார் இருக்கும் இடத் தில் ஒன்றுமாக நாடோறும் பதினெட்டு சந்திவிளக்குகள் எரிப்பதற்குக் கொடுத்துள் ளான்.

பொதுச் செய்திகள்

இவ்வூரில் இராஜராஜப் பேரேரி ஒன்று உள்ளதை கோப்பரகேசரி இராஜேந்திர தேவரின் ஆறும் ஆண்டில் வெட்டப்பட்ட கல்வெட்டு குறிப்பிடுகின்றது. எனவே இந்த ஏரி மிகப் பழமையானதாகும்.

ஆட்கொண்ட தேவர் கோயிலுக்குத் தென்பாலுள்ள குளம் கி.பி. 1396 இல் விருபாக்ஷ—வின் அமைச்சர் நஞ்சண்ணுவின் தமையனார் விருப்பண்ணுவால் பழுதுபார்க் கப்பட்டது. விசயநகரவேந்தராகிய கிருஷ்ண தேவராயர் தம்பேரால் தடுத்தாட் கொண்ட தம்பிரானார் திருக்கோயிலிலும், வைகுந்தப் பெருமாள் திருக்கோயிலிலும் கிருஷ்ண தேவ ராயர் சந்தி நடத்துவதற்கு சர்வமான்யமாக நன்செய் நிலம் 35 மாவும் புன்செய் நிலம் 20 மாவும் கொடுத்துள்ளார். இக்கோயிலில் உள்ள கோபுரத்து வாசலின் முகப்பு குலோதுங்க சோழ தேவரின் மூன்றும் ஆண்டில், கூடல் மோகன் ஆளப்பிறந்தான் நாராயணனுகிய காடவராயனால் கட்டப் பெற்றதாகும். இக்கோபுரத்தில் திருவெண் ணெய்நல்லூர் இறைவரின் புகழைப் பற்றி ஐந்து தமிழ்ப்பாடல்கள் செதுக்கப்பட்டுள் ளன. இக்கோபுரத்தின் உள்சுவரில் சகம் 1108 அதாவது கி.பி. 1186-இல் சில பாடல் கள் அரசு நாராயணன் ஆளப் பிறந்தான் வீரசேகரனை காடவராயர் காலத்தில் செதுக்கப்பட்டுள்ளன. அவை காடவ்ராயர் குடும்பத்தைப் பற்றிய செய்திகள் ஆகும். இக்கோயிலில் ஆட்கொண்டதேவர் பாலா டியருள பசுக்கள்விடப்பட்டிருந்தன. பசுக் களை விட்டவர் ரிஷபம் ஒன்றையும் கொடுத் துளளனர். அப்பசுக்கள் சுரபிமான்ருடி களிடம் விடப்பட்டிருந்தன. அவர்கள் அப் பாலே அருமொழிதேவன் நாழியால் தவருது அளந்துவந்துனர்.

சுரபிமன்ருடிகள் பசுக்களைப்பாதுகாக் கும் இடையர்.

இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் திரு வெண்ணெய்நல்லூரில் ஆனைக்கு அரசு வழங் கும் பெருமாள் தோப்பு என்னும் தோப்பு திருக்கோயிலுக்கு விட்டிருந்தான். அது 12 மாநிலப் பரப்புள்ளது. மேலும் இவன் சிழகம்பட்டில் கோப்பெருஞ்சிங்கன் தோப்பு என்னும் பெயருள்ள தோப்பு ஒன்றையும் விட்டிருந்தான்.

சோழமண்டலத்தில் விக்கிரம சோழ வள நாட்டில் திருப்பழனம், வடகுரங்காடு துறை முதலான ஊர்கள் விறைக்கூற்றத்தை சேர்ந்தவை. அந்த விறை என்னும் ஊர்க்கு அகளங்கபுரம் என்னும் வேறு பெயர் உண் டென்பதை இக்கோயில் கல்வெட்டு உணர்த்துகின்றது. அவ்வூரிலுள்ள ஒருவன், தடுத்தாட்கொண்ட தேவர்க்கு விளக்குக்கும் விழாவிற்கும் 120 காசு கொடுத்துள்ளான் என்பதைக் குறிக்கவந்தவிடத்தில், இச் செய்தி கூறப்பெற்றுள்ளது.

பட்டுடையான்

"இந்நாளில் இப்படி செலுத்துவேனுய் இப்பொன் கொண்டேன் இத்தளிப் பட்டுடை யான் ஈஸ்வரக்காணி வாமதேவன் திருவெண் காடனேன்" (S I. I. Vol III Part III No. 94, Page 227) என்னும் கல்வெட்டுப் பகுதி யில் பட்டுடையான் என்ற தொடர் வந்துள் ளது. இதற்கு இதுவரை Priest என்றே பொருள் கொள்ளப்பட்டது. ஆனுல் இந்த ஆட் கொண்ட தேவர் கோயிலில் திரிபுவன சக்கர

வர்த்தி கோனேரின்மை கொண்டான் கல்வெட்டில் கண்ட "ஆட்கொண்ட தேவர் கோயிற் பூசையும் சைவாசாரியரும் பண்டு செய்து வருகிற சிவப்பிராமணரையும், சைவாசாரியஞ் செய்து வருகிற பட்டுடையார்களையும் தவிர...(S. I. I. Vol 7 எண் 944) என்னும் கல்வெட்டுப் பகுதியால் பட்டுடையார் என்பது கோயிலில் சைவாசாரியம் மட்டும் செய்வாரைக் குறிக்கும் என்பது பெறப்படுகின்றது.

இவ்வூரைத் தன்னகத்துக் கொண்டுள்ள நாடு

முதலாம் இராசராசன் காலத்தில் இவ்வூர், திருவெண்ணெய்நல்லூர் என்றும், கோப்பரகேசரிபன்மரான உடையார் இராஜேந்திர தேவர் கல்வெட்டில் இராஜேந்திர சோழவளநாட்டுத் திருமுனைப்பாடித் திருவெண்ணெய்நல்லூர் நாட்டுப் பிரமதேயம் திருவெண்ணெய்நல்லூர் என்றும், இரண்டாம் இராசாதிராசன் காலம் முதல் பின்னுள்ளோர் காலம்வரை, இராசராச வளநாட்டு திருமுனைப்பாடி திருவெண்ணெய்நல்லூர் நாட்டுப் பிரமதேயம் திருவெண்ணெய்நல்லூர் என்றும் இக்கோயில் கல்வெட்டுக்களில் குறிக்கப்பெற்றுள்ளது.

*

திருவெண்ணெய்நல்லூர் வைகுந்தப் பெருமாள் கோயில் கல்வெட்டு வரலாறு

இத்திருக்கோயிலில் சோழமன்னர்களில் இரண்டாம் இராசராசன், இரண்டாம் இராசாதிராசன், மூன்றாங் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன் இவர்கள் காலங்களிலும்; பாண்டிய மன்னர்களில் மாறவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி, வீரபாண்டிய தேவன், விக்கிரமபாண்டியன் இவர்கள் காலங்களிலும்; சாளுவமன்னரில் வீரநரசிங்க மாராயன் காலத்திலும்: விசயநகர வேந்தர்களில் வீரப்பிரதாப உடையார், ஸ்ரீரெங்க ராயர் இவர்கள் காலங்களிலும் செதுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

திருமாலின் திருப்பெயர்

இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் திருமால் சோழமன்னர், பாண்டிய மன்னர் இவர்களின் காலங்களில் வைகுந்தத்து ஆழ்வார், வைகுந்தத்து எம்பெருமான் என்னும் திருப்பெயர்களாலும்; இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் காலத்துக் கல்வெட்டில் அழகிய பல்லவ விண்ணகர் எம்பெருமான் என்னும் பெயராலும் அழைக்கப் பெறுகின்றனர்.

திருவிழாக்கள்

இத்திருக்கோயிலில் ஸ்ரீவைகுண்டத்தெம்பெருமானுக்கு ஆனித்திருநாள், புரட்டாதித் திருநாள் இவைகள் சிறப்பாகக் கொண்டாடப்பெற்று வந்தன.

எழுந்தருளுவிக்கப்பட்ட திருமேனிகள்

இத்திருக்கோயிலில் ஆட்கொல்லி காடவராயன் இரண்டாம் இராசராச சோழனின் 12-ஆம் இராச்சிய ஆண்டில், தனக்குப் புத்திரப்பேறு கிடைக்கும் பொருட்டு திருவாய்க்குலத்து ஆழ்வாரையும் பிராட்டியாரையும் உகந்தருளப் பண்ணுவித்துள்ளான்.

[ஆய்க்குலத்து ஆழ்வார் = ஸ்ரீகிருஷ்ணர். உகந்தருளப் பண்ணுவித்தல் = எழுந்தருளுவித்தல்]

இரண்டாங் கோப்பெருஞ்சிங்கனின் 32-ஆம் ஆண்டில் திருப்பாணாழ்வார் எழுந்தருளுவிக்கப்பெற்றனர்.

இக்கோயிலில் திரிபுவனச் சக்கரவர்த்தி திரிபுவன வீரதேவரின் 35-ஆம் ஆண்டில் அழகிய பல்லவன் ஸ்ரீகோப்பெருஞ் சிங்க தேவரின் திருத்தாயார் திருநாமத்தால் பெரிய பிராட்டியார் எழுந்தருளுவிக்கப் பெற்றனர்.

[திரிபுவன வீரதேவன் — மூன்றாங் குலோத்துங்கசோழன்]

திருப்பணிகள்

"திரிபுவனச் சக்கரவர்த்தி திரிபுவன வீரதேவர்க்கு 29-ஆவது நாளில் இ ஸ்ரீ விமானம் புறச்சாரணையாய் இது இழிச்சி செகிற போது"... என்னும் கல்வெட்டுப் பகுதியால் மூன்றாங் குலோத்துங்க சோழன் காலத்தில் இக்கோயில் விமானம் இடித்துக் கட்டப் பெற்ற செய்தி அறியக்கிடக்கின்றது.

[இங்கு விமானம் என்பது திருக்கோயிலில் உள்ள பிரிவுகளில் கர்ப்பக்கிருகம் (Central shrine) என்னும் பகுதியாகும். இக்காலம் விமானம் என்பது கர்ப்பக்கிருகத்

தின் மேல்கூட்டுக்கு வழங்கப் பெறுகின்றது. அதில் கல்வெட்டு செதுக்கப்பெறும் வழக்கம் யாண்டும் இல்லை. "கோப்பெருஞ் சிங்க தேவற்கு யாண்டு 11-ஆவது முன்பு இ...... கல்வெட்டு இஸ்ரீ விமானம் இழிச்சி எடுக்கிற போது படியெடுத்த படிப்படி இற்றை நாளால் கல்வெட்டினபடி"—என்ற இக் கோயில் கல்வெட்டால் அறியக்கிடக்கின்றது.

மேலும் தஞ்சை இராசராசேச்சரத்தில் "நாம் குடுத்தனவும் நம் அக்கன் குடுத்தனவும், நம் பெண்டுகள் குடுத்தனவும், மற்றும் குடுத்தார் குடுத்தனவும் ஸ்ரீ விமானத்திலே பொறிக்க"—என்று இராசராசன் I கட்டளையிட்டது எல்லாம், புறச் சுவர்களில் பொறிக்கப் பெற்றிருத்தலை இன்றும் காணலாம். மேல்கூட்டில் இல்லை என்பது உறுதி]

இக்கோயில் திருமுற்றம் கோப்பெருஞ் சிங்கன் II காலத்தில் பழுது பார்க்கப் பெற்றது. இச்செய்தி "இவ்வெம்பெருமான் கோயில் முற்காலந்துடங்கி எங்கள் ஆச்சிமார் தன்மமாய் போதுகிற இத் திருமுற்றம் நோவுபடுகையாலே இன்னுளிலே நம்முடைய பேரால் உகந்தருளப் பண்ணி" என்னும் கல்வெட்டுப் பகுதியால் அறியக் கிடக்கின்றது. [இதில் ஐயன்மணவாளப் பெருமாள் என்றது இரண்டாம் கோப் பெருஞ்சிங்கனின் தந்தையார் ஆவர். ஆச்சிமார்—தாயார்]

முன்மண்டபத்தைக் கட்டியவர்

இக்கோயில் கர்ப்பக்கிருகத்துக்கு முன்னே இருக்கிற மண்டபம் கட்டியவர் இரண்டாம் கோப்பெருங் சிங்கதேவரின் எட்டாம் ஆண்டில் பெறுகை ஆளப்பிறந்தார் அழகிய சீயர்திருத்தமக்கையார் அரசாழ்வார் ஆவர். [திருக்கோவலூர்த்தாலூகாவில் உள்ள பெரியனூர் பெறுகை ஆக இருக்கலாம்]

பொதுச் செய்திகள்

இக்கோயிலில் வழங்கிய மரக்காலுக்கு அதிகைநாயகன் மரக்கால் என்று பெயரிடப் பட்டிருந்தது. இத்திருமால் கோயிலுக்கு விடப்பட்ட நிலங்கள் திருவிடை யாட்டம் என்று குறிக்கப்பெற்றுள்ளன. எனவே திருவிடையாட்டம் என்பது திருமால் கோயிலுக்கு விடப்பட்ட நிலமாகும். [சிவபெருமான் கோயிலுக்கு விடப்பட்ட நிலமாயின் திருநாமத்துக்காணி என்று கூறப்பெறும்.] இத்திருமால் கோயிலுக்கு விடப்பட்ட நிலங்களின் நான்கு எல்லைகளிலும் திருவாழிக்கற்கள் நாட்டப்பெற்றுள்ளன.

திருவாழிக் கல் என்பது—திருமாலின் சக்கரம் பொறிக்கப்பெற்ற கல்லாகும். [இங்ஙனமே சிவபெருமானுக்கு விடப்பட்ட நிலத்தின் எல்லையில் திரிசூலக்கல் நாட்டுவது உண்டு.] இத்திருமால் கோயில் கல்வெட்டு ஒன்றில் காப்புரையாக "இது ஸ்ரீ வைஷ்ணவ ரக்ஷை" என்று குறிக்கப்பெற்றுள்ளது. ஸ்ரீ வைஷ்ணவர்கள் காப்பார்களாக என்பது இதன் பொருளாகும். [சிவன் கோயிலாயின் 'இது பன்மாஹேஸ்வர ரக்ஷை' என்று குறிக்கப்பெற்றிருக்கும். பல சிவனடியார்கள் இதைக் காப்பார்களாக என்பது இத்தொடரின் பொருளாகும்.] இக்கோயில் கல்வெட்டிலும், திருவெண்ணெய்நல்லூர் திருவருட்டுறைக் கோயிலிலும் ஏமப்பேறூர் என்னும் ஊர் குறிக்கப்பெற்றுள்ளது. இது நடுநாட்டில் உள்ள ஏமப்பேறூர் ஆகும். நமிநந்தியடிகள் என்னும் நாயனரின் திருப்பதி சோழநாட்டில் திருவாரூர்க்கு அருகிலுள்ள ஏமப்பேறூர் ஆகும். பாண்டிய மன்னர்கள் தங்கள் பேர்களால் விக்கிரம பாண்டியன் திருநாள், இராஜாக்கள் நாயன் திருநாள் இவைகளுக்கு நிவந்தங்கள் விட்டிருந்தனர். கோயிலை இடித்துக் கட்டும் பொழுது, அதிலுள்ள கல்வெட்டுக்களைப் படி எடுத்து, கோயில் கட்டப்பெற்றபின் அதில் பொறிக்கப் பெறுவது மரபு என்பதை இத் திருமால் கோயில் கல்வெட்டு அறிவிக்கின்றது.

லால்குடி : சப்தரிஷீசுவர சுவாமி கோயிலில் பரஞ்சோதி முனிவர் அருளிச்செய்த திருவிளையாடற்புராண விரிவுரைத் தொடக்க விழா 3—12—61-ல் திரு. ஜி. வரதராசன், பி. ஏ., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் மாலை 6-மணிக்கு திரு. வித்துவான் முத்து சு. மாணிக்கவாசக அடிகளாரால் விரிவுரை நடத்தப் பெற்று வருகிறது.



கோயிலுள் குப்த கங்கை

திருவாஞ்சியம்

மேவிலொன்றர் விரிவுற்ற இரண்டினர் மூன்றுமாய்
நாவின்நா லர்உடலஞ்சினர் ஆறர் ஏழோசையர்
தேவில்எட் டர்திரு வாஞ்சியம் மேவிய செல்வனர்
பாவந்தீர்ப் பர்பழி போக்குவர் தம்அடி யார்கட்கே

—திருஞானசம்பந்தர்.

அற்றுப் பற்றின்றி யாரையு மில்லவர்க்
குற்ற நற்றுணை யாவா னுறைபதி
தெற்று மாடங்கள் சூழ்திரு வாஞ்சியம்
கற்றுச் சேர்பவர்க் குக்கருத் தாவதே.

—திருநாவுக்கரசர்.

ஸ்ரீவாஞ்சியம் என்று மக்களால் வழங்கப் பெறும் இந்த தேவாரப்பாடல் பெற்ற சிவத் தலம் தஞ்சை மாவட்டத்தில் நன்னிலம் பகுதியிலிருக்கிறது. மாயூரம்—அறந்தாங்கி இருப்புப் பாதையில் நன்னிலம் புகைவண்டி நிலயத்திற்கு மேற்கே ஏழுகல் தொலைவிலி ருக்கிறது. வண்டிகளிற் சென்றே இதை யடையமுடியும். இவ்வூர் புத்தாற்றின் வட கரையிலிருக்கிறது.

திருமால் தம்மை விட்டுப் பிரிந்துபோன இலட்சுமியை இவ்விடத்தில் பெற்ருர். திரு வாகிய இலட்சுமியை மகாவிஷ்ணு வாஞ்சித்த தால் திருவாஞ்சியம் என்று இவ்வூருக்குப் பெயர் ஏற்பட்டது. நாககன்னிகையொருத்தி இறைவனைத் தழுவிச் சாயுச்சியமடைந்ததால் இப்பெயர் ஏற்பட்டதென்றும் கூறுவர். பூகைலாசம், கந்தாரண்யம் என்ற பெயர் களும் உண்டு.

சிவபெருமான் திருக்கோயில் கிழக்கு நோக்கி இருக்கிறது. நான்கு பக்கமும் திரு வாயில்கள் உள்ளன, மேற்குவாசல் உப யோகத்தில் இல்லை. கீழ வாசலில் அழகிய கோபுரம் இருக்கிறது. கோயிலுக்குள் மூன்று பிரகாரங்கள் இருக்கின்றன. வெளிப் பிரகாரத்தின் தென்கிழக்கு மூலையில் எமதரும ராஜன்கோயில் தெற்குநோக்கி யிருக்கிறது. இது இத்தலத்திற்கே தனிச் சிறப்புடையது. இவ்வூரில் இறந்தவர்களுக்கு எமவாதனை இல்லையென்றும், எந்த ஜீவனும் இறக்கும் போது வலதுகாது மேற்புறம் இருக்கும்படி

கிடக்கும் என்றும், பரமசிவம் பஞ்சாட்சர உபதேசம் செய்கிறார் என்றும் சொல்லப்படுகிறது. எமன் தான் உயிர்களுக்கு இம்சை கொடுக்கும் பணியினின்றும் விலகவேண்டி இறைவனை நோக்கித் தவம்கிடந்து கேட்க, அவர் இத்தலத்தில் பஞ்சக்குரோச எல்லையளவு எமபாதை இல்லாமற்செய்ய வேண்டுமென்று அருள் புரிந்தார் என்று கூறப்படுகிறது.

வெளிப்பிரகாரத்திலிருந்து இரண்டாவது உட்பிரகாரம் செல்லும் வாயில் மேலும் ஒரு கோபுரம் உண்டு. அதன் இருமருங்கும் விநாயகர், முருகன் சந்நிதிகள் இருக்கின்றன. இரண்டாவது பிரகாரத்தின் வடகிழக்கு மூலையில் அம்பிகையின் தனிக்கோயில் தெற்கு நோக்கி இருக்கிறது. அம்பாளின் திருப்பெயர்கள் வாழவந்தநாயகி, மங்களாம்பிகை என்பன. மூன்றாவது திருவாயிலையும் கடந்து சென்றால் தென்புறம் வெண்ணெய்ப் பிள்ளையார் சந்நிதியிருக்கிறது. மேற்குப் பிரகாரத்தில் முருகன், கலைமகள், திருமகள் சந்நிதிகள் இருக்கின்றன. இவை, திருவெண்காடு, திருவையாறு, திருமயிலாடுதுறை (மாயூரம்), திருவிடைமருதூர், திருச்சாய்க்காடு இத்தலங்களின் மூர்த்திகளைக் குறிக்கும். தென்னாட்டில் காசிக்குச் சமமாகச் சொல்லப்படும் தலங்கள் ஆறு. அவை மேற்கண்ட ஐந்துடன் திருவாஞ்சியத்தையும் சேர்க்க ஆறு ஆகும். மூன்று காரணங்களால் காசியைவிட இத் திருவாஞ்சியத்திற்கு மகத்துவம் அதிகமென்று கூறுகின்றனர். காசியில் வசிப்பவர்களுக்குப் புண்ணிய பாவங்கள் விருத்தியாகும். இங்கே வசிப்பவர்களுக்குப் பாவம் குறைந்தது புண்ணியம் அதிகமாகும். காசியில் மரிக்கிறவர்களுக்கு முத்தியுண்டு; ஆனால் பைரவதண்டனையுண்டு. இங்கே கிடையாது. கங்கை இங்கே முனிதீர்த்தத்தில் 999 பாகம் இரகசியமாக வசிக்கிறாள். காசியில் ஒரு பாகம்தான் இருக்கிறாள். இந்த தலத்தில் பைரவர் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறார். ஆசீன பைரவர் என்று அவருக்குப் பெயர். (படம் காண்க). தண்டனை கொடுக்க வேண்டியது அவருடைய வேலை.

ஆசீன பைரவர்

இன்னும் வடக்கு உட்பிரகாரத்தில் நடராஜர், அஷ்டகஜதுர்க்கை முதலியவர்கள் சந்நிதிகளிருக்கின்றன. கர்ப்பக்கிரகத்தில் மூலஸ்தான மூர்த்தியான வாஞ்சிநாத சுவாமி எழுந்தருளியிருக்கிறார். அவருக்கு விரோணக்னேசுவரர், பூகைலாசநாதர் என்ற பெயர்களுமுண்டு.

தலபுராணத்தில் இப்பதிக்கு இருபத்து நான்கு தீர்த்தங்கள் உள்ளதாகக் கூறப்படுகிறது. அனந்ததீர்த்தம் என்ற கிணறு கோயிலுக்குள் இருப்பது. மற்றவை குளங்கள். இதில் மிகவும் முக்கியமானது குப்தகங்கை எனப்படும் முனிதீர்த்தம். இது கோயிலுக்குள் வடக்குவெளிப் பிரகாரத்திலுள்ள பெரிய திருக்குளம். ஞாயிற்றுக்கிழமைகளில் இதில் முழுகினால் நலம். கார்த்திகை ஞாயிற்றுக் கிழமைகளில் நீராடி இறைவனை வழிபட்டால் பஞ்சமா பாதகங்களும் நீங்கும். கார்த்திகை மாதத்தில் ஐந்து ஞாயிற்றுக் கிழமைகள் வந்தால் மிகவும் சிறப்புடையதாகும். கார்த்திகையில் கடைஞாயிறைக் கடைசி நாளாக வைத்து உற்சவம் நடைபெறும். மக்கள் திரளாக வந்து குப்த கங்கையில் முழுகி வாஞ்சிநாதரை வழிபடு

இன்றனர். எமதீர்த்தம் கோயிலுக்கு வெளியில் தென்கிழக்கில் எமதருமராஜன் சந்நிதிக்கு நேராக இருக்கிறது. கோயிலில் ஆறுகால பூசை நடைபெறுகிறது. அம்பாளுக்கு ஆடிப் பூரமும், மாசியில் பிரதான பிரம உற்சவமும், கார்த்திகை ஞாயிறிலும் திருவிழாக்கள் உண்டு. எமதருமராஜன் வாகனத்தில் இறைவன் எழுந்தருளுவது தனிச்சிறப்பானது. இத்தல விருட்சம் சந்தனமரம்.

திருவாஞ்சியம் சமயாசாரியர் நால்வராலும் பாடப்பெற்ற பெருமையுடையது. திருஞானசம்பந்தர் பதினொரு பாசுரங்களுடைய ஒரு பதிகம் பணித்தருளியிருக்கின்றனர். 'தென்னவென்று வரிவண்டு இசைசெய் திருவாஞ்சியம்'', 'பண்ணிலான இசைபால்மல்கு திருவாஞ்சியம்', 'பரவுவார் வினைதீர்க்க நின்றார் திருவாஞ்சியம்' என்பனபோன்ற பலவற்றைக் கூறுகிறார்.

திருநாவுக்கரசர் அருளிய ஒரு பதிகத்தில் ஏழு பாடல்களேயுள்ளன. பற்றற்றவர்க்கு உற்ற நற்றுணை இறைவனேயென்றும், அவரையடைபவர்க்கு அல்லல் ஒன்றுமில்லையென்றும், அதனால் திருவாஞ்சியம் சென்று சேர்மின் என்றும் அறிவுரைகள் பல பகர்கின்றார்.

சுந்தரர் பாடியருளியது பத்துப்பாடல் களையுடைய ஒரு பதிகம். திருவாஞ்சியத்தின் இயற்கை வளத்தை அழகுபடப் புனைந்து காட்டுகிறார். 'வாஞ்சியத்தடிகள் விளங்கு தாமரைப்பாத நினைப்பவர் வினை நலிவிலரே' என்றும், 'வாஞ்சியத்துறையு மொருவனாரடியாரை ஊழ்வினை நலியவொட்டாரே' என்றும் கூறுகிறார்.

திருவாஞ் சியத்திற் சீர்பெற இருந்து
மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும்

என்று மாணிக்கவாசகர் பாராட்டுகிறார். இத்தலத்திற்கு அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்ப் பாடலொன்றும் உண்டு. 'இபமாந்தர்' என்று தொடங்குவது அப்பாடல். "திரை பாய்ந்த பத்மதட வயலியல் வேய்ந்த முத்தியருள்தரு திருவாஞ்சியத்திலமரர்கள் பெருமாளே'' என்று முடிக்கிறார்.

ஸ்ரீவாஞ்சியக்ஷேத்திர புராணம் என்ற வடமொழிப் புராணத்தை *1908*-ஆம் ஆண்டில் அச்சிட்டிருக்கின்றனர். அதிலிருந்து இத்தல மகிமையை ஸ்காந்த புராணம், ஸாம்போப புராணம், ஆக்னேய புராணம் இவைகளில் கூறப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த வடமொழி நூலை எல்லோரும் அறிந்து



திருவாஞ்சியம்—எமதருமராஜர் கோயில்

கொள்ளும் பொருட்டு 1939-ல் தமிழில் உரைநடையாக அச்சிட்டு வெளியிடப்பெற்றிருக்கிறது. அதில் அறுபத்தொரு அத்தியாயங்கள் இருக்கின்றன. பல அரிய செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் காணலாம். இறைவனுடைய பெருமையையும், கார்த்திகை ஞாயிறுகளில் குப்த கங்கையில் நீராடுவதால் அடையும் பயனையும், பிரமதீர்த்தம், சர்வதீர்த்தம், அக்கினி தீர்த்தம், இந்திர தீர்த்தம், இராம தீர்த்தம், இலக்குமி தீர்த்தம், சக்கரதீர்த்தம், விரக தீர்த்தம், தேவ தீர்த்தம் இவைகளின் மகிமையையும் மிகவும் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

களந்தைக்குமரன் என்பவர் தலபுராணச் செய்யுள் நூல் ஒன்று இயற்றியிருக்கிறார். இவருடைய வரலாறு தெரியவில்லை. அதில் பாயிரம் முதல் திருவிழாச் சருக்கம் ஈருக பதினேழு சருக்கங்கள் உள்ளன; பாடல்களின் தொகை 828. நூலாசிரியர் சகாத்தம் 1538-ல் இப்புராணம் பாடியதாகக் கூறியிருக்கிறார். மூர்த்தி, தலம், தீர்த்தம் இவைகளின் பெருமையையும், இங்கு வழிபட்டுப் பேறுபெற்றவர்களின் வரலாறுகளையும் கூறியிருக்கிறார். இந்நூல் 1959-ஆம் ஆண்டில் தேவஸ்தானத்தாரால் அச்சிட்டு வெளியிடப் பெற்றிருக்கிறது. அதிலிருந்து எடுத்துக் காட்டாக ஒரு பாடல்.

அருவமென உருவமென அருவுருவ
மெனலாகி யகண்ட மாகிப்
பொருவரிய மறைகளினு லளவையினுல்
அறியவரும் பொருள தாகி
மருவரு மிறுதிகடு வொப்பிகந்து
மூப்பிளமை மாசொன் றின்றி
ஒருமுதலா யோங்கிநிறைந் தழியாத
பரஞ்சுடரை யுள்ளத் துய்ப்பாம்.

சிவராமபிள்ளை என்பவர் 'மங்களநாயகியம்மை பிள்ளைத்தமிழ்' என்ற நூலை இத்தலத்து அம்பிகைமீது பாடியுள்ளார். இவருடைய முழு வரலாறும் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு பாட்டில் "நாமேவுபுகழ் செல்வ வேளாளர்குல திலகன் முத்துமணி யீன்ற ரத்தினம் நாவலர்கள் கற்பகம் சிவ ராம சுந்தரன் நன்மனம் அமர்ந்தருளுவாய்" என்று தன்னைப்பற்றிக் கூறியிருக்கிறார். இந்த நூலையும் சேர்த்துத் தலபுராணத்துடன் தேவஸ்தானத்தார் அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றனர். அதிலிருந்து ஒருபாடல் கீழே கொடுக்கப்படுகிறது.

தத்துந் தரங்கக் கடல்முத்துந் தண்ணங்
குவளை சொரி முத்துந்
தாமக் குழலார் களமுத்துந் தழைத்த
வேழந் தரு முத்தும்
வித்துஞ் சாலி விளைமுத்தும்
வெவ்வா யிடங்கர் மிசைமுத்தும்
விரைசூழ் தாற்றுக் கதலிமுத்தும் மேவுங்
கமடஞ் செறி முத்தும்
குத்தும் களிற்றுப் பணைமுத்தும் கூர்வெங்
கேழற் கோட்டு முத்தும்
குலவு பழுக்காய்க் கந்திமுத்துங் குடகா
விரியிற் றுறையில் வளை
முத்தும் பழிக்கும் நினது செவ்வாய்
முத்தந் தருக முத்தமே
முகில்சூழ் சந்தா டவியில்முழு
முத்தே தருக மூத்தமே.

இப்பாடல் பகழிக்கூத்தர் இயற்றிய திருச்செந்தூர் பிள்ளைத் தமிழிலுள்ள "கத்துந்தரங்கம்" என்று தொடங்கும் முத்தப் பருவப் பாடலை அடியொற்றிச் செல்வது கண்டு மகிழத்தக்கது.

நால்வரும் பாயிடிருக்கும் மேன்மைபெற்றதாதலின் இது மிகவும் பழைய கோயில் என்பதில் ஐயமில்லை. இங்குள்ள அம்பிகை கர்ப்பக்கிரக விமானத்தில் ஐந்து தூபிகள் இருக்கின்றன. வேடன் மனைவியொருத்தி துர்நடத்தையால் கர்ப்பமுற்று இறைவன் சந்நிதியில் பொய் சொன்னதால் மேற்கே பார்த்திருந்த பெருமான் கிழக்கே திரும்பிவிட்டார். அதனுல் மேற்கு பார்த்த சந்நிதிக்குக் 'கருவறுத்தான் சந்நிதி' என்று பெயர் கூறப்படுகிறது. இவ்வூரில் கல்யாண வரதராஜப் பெருமாள் கோயிலும் இருக்கிறது.

இக்கோயிலிலிருந்து அரசாங்கத்தார் 1911-ல் பதினேழு கல்வெட்டுக்களைப் படியெடுத்திருக்கின்றனர். சுவாமி, அம்பாள் கர்ப்பக்கிரகச் சுவர்கள், பிரகார மதிற்சுவர், தட்சிணாமூர்த்தி சந்நிதித்தூண், உட்கோபுர வாசல் இவைகளில் அக்கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன, இராஜராஜன் I, இராஜாதிராஜன் II, குலோத்துங்கன், ஜடாவர்மன் சுந்தரபாண்டியன், ஜடாவர்மன் வீர பாண்டியன், தஞ்சை இரகுநாதநாயக்கர்



நால்வர்
(அண்மையில் புதிதாகச் செய்யப்பெற்ற திருவுருவங்கள்)

இம் மன்னர்களின் காலத்தவை. குலோத் துங்க சோழவளநாட்டு பனையூர்நாட்டுத் திரு வாஞ்சியம் என்று குறிக்கின்றன. திருவாஞ் சிய தேவர், திருவாஞ்சியமுடைய மகாதேவர், திருவாஞ்சியமுடைய நாயனர் இவை இறை வன் திருநாமங்களாகவும், திருப்பள்ளியறை நம் பிராட்டியார் என்பதை தேவியின் திருப் பெயராகவும் அக்கல்வெட்டுக்கள் அறிவிக் கின்றன. விளக்கு, நிலங்கள் தானம் செய் தது, கோயிலுக்கு நில விற்பனை செய்தது, விளக்கெரிக்கப் பொருள் வழங்கியது, கோயில் தேவரடியார்களுக்கு நிலம் விட்டது முதலியவற்றை அவை கூறுகின்றன. ஒருகல் வெட்டில் அம்பிகை கோயில் கட்டி கும்பாபி ஷேகம் நடத்தி, நிலம் வீடு தானம் செய்த தைக் கூறப்பட்டிருக்கிறது. திருவாஞ்சியத் திற்கு 'இராஜகம்பீர சதுர்வேதி மங்கலம்' என்ற பெயரும் உண்டென்பதைக் குறிக்கப் பட்டிருக்கிறது. ஒரு கல்வெட்டில் திருவாஞ் சியம் கோயில் அதைச் சார்ந்த கோயில்கள் முதலியவற்றிற்குச் சொந்தமான நிலங்களின் பட்டியல் கொடுக்கபபட்டிருக்கிறது. பெரும் பற்றப் புலியூர், சிறுபாண்டூர், கோமங்குடி, திருவெள்ளறை முதலிய ஊர்களின் பெயர் களும் காணப்படுகின்றன. இவ்வூர் வயலி லுள்ள ஒரு கல்லில் காணப்படும் சாசனத் தில், சிதம்பரம் பிட்சா மடத்துத் தலைவர் அகோர சிவாசாரியரின் மாணவரான அச் சுற்ற மங்கலம் (அச்சுதமங்கலம்) பெருமா நாயினர் பண்டாரம் என்பவர் தனது மடத் துக்காகக் குண்டுவாஞ்சேரியில் ஒரு வேலி நிலம் சகம் 1501-ல் விலைக்கு வாங்கியதைக் கூறப்பட்டிருக்கிறது.

வாழை யின்கனி தானும்
மதுவிம்மு வருகையின் சுளையும
கூழை வானரந் தம்மிற்
கூறிது சிறிதெனக் குழறித்
தாழை வாழையந் தண்டாற்
செருச்செய்து தருக்கு வாஞ்சியத்துள்
ஏழை பாகனை யல்லாமல்
இறையெனக் கருதுத லிலமே

—சுந்தரர்.

சிவஞானபோதம்

[திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T.]

(முன் இதழ்த் தொடர்ச்சி)

தோண்டியபோது வெளிப்படும் தண்ணீர் முன்னரே அமைந்து கிடந்தாற்போல, முன்னேயே நுட்பமாய்க் கருவினுள் அமைந்து கிடப்பவையே ஆகும். (பேறிழவின்பமோடு பிணிமுப்புச் சாக்காடென்னும்—ஆறு(ம்)முன் கருவுட் பட்டது—என்பது சித்தி). நிலத்தின் அடியில் நீர் இருப்பினும், அதனை வெளியிடப் பெறுதற்குத் தோண்டுதலாகிய முயற்சி வேண்டப்படும்; அதுபோல, மேற்கூறிய ஆறும் கருவுள் அமைந்து கிடப்பினும், அவை தூலமாய் (பருநிலையில்) வெளிப்படத் தோன்றிவந்து கூடுதற்கு முயற்சி வேண்டும். முயற்சியின்றிப் பொருள்களின் நுகர்ச்சி உண்டாதல் இல்லை; ஆவிற்குப் புல்லும் நீரும் நாம் கொடுப்பினும் அதன் முயற்சியால்தான் அவற்றை அஃது உட்கொள்ளும்; மரத்தின் அடியிற் பெய்த எருவோடு கலந்த நீரை அம்மரம் உறிஞ்சினாலன்றி அதற்கு நுகர்ச்சி உளதாகாது. இவைபோலக் கொள்க. சுருங்கக்கூறின், இன்பத் துன்பங்கட்கும் அவற்றுக்கு ஏதுவாக உள்ள செல்வ வறுமை, உயர்ச்சி தாழ்வுகட்கும் முதற்காரணம் ஊழ் எனப்படும் இருவினை. அவ்வூழான் அமைந்தவற்றைப் புலப்படக் காட்டிக் கூட்டும் துணைக் காரணம் முயற்சி எனப்படும். அது அவ்வப்போது நாம் இயற்றும் செயல்கள். இங்கு ஊழும் வினையே, முயற்சியும் வினையே என்பது உணரத்தக்கது. ஊழ் முன்செய்தவினை புலப்படாது அருவமாய்ப் புத்திதத்துவத்தைப்பற்றி நமது விருப்பு வெறுப்பு, அறிவு அறியாமை, ஊக்கம் ஊக்கமின்மை என்பவற்றைத் தோற்றுவிக்கும் நுட்ப ஆற்றலாய் உள்ளது. முயற்சி என்பது அவ்வப்போது நமக்கு உள்ளனவாகிய நினைவும் பேச்சும் தொழிலுமாகிய தூலவினை. இதுவே இரண்டற்கும் உள்ள வேறுபாடு.

இனி, உணவுக்காகக் கொள்ளப்படும் சாத்துக்குடி முதலிய பழங்கள் மேலைக்கு விதையும் ஆதலைக் காண்கின்றோம். அது போல, முன்னை ஊழை நுகர்தற்குத் துணையாக எழுந்த முயற்சியும் அந்த அளவின் முடிந்துவிடாமல், வேறோர் உடம்பிற்படும் பேறு இழவு முதலிய அந்த ஆறுவகைக்கும் வித்தாயும் நிலைபெறும்; முற்பிறவியின் இவ்வாறு நிகழ்ந்த முயற்சியே இப்பிறவியின் வரும் அந்த ஆறு பொருட்கும் ஏது ஆயினாற்போல. பின்னைக்குச் செய்யாது நுகர்வதில்லை (பிற்செயாது அநுபவிப்பது இன்று) எனக் கொள்க.

இதனால், "முன்செய்த வினை நுகர்ச்சியால் கழிந்து ஒழியின், மேலைக்கு வினை உளதாமாறு யாங்ஙனம்?" என்னும் வினாவிற்கும் விடை தரப்பட்டது. இவ்விடையை மெய்கண்டதேவர் சுருக்கமாக மேற்காட்டிய தொடரை அடுத்து, "உள்ளதாம் முற்செய் வினை உள்ளடைவே" எனக் கூறியருளினர். முன்செய்த வினையை நுகரும்போது அந் நுகர்ச்சிக்குத் துணைக்காரணமாய் நிகழும் விருப்பு வெறுப்புக்களான்வரும் முயற்சியே மேலைக்கு வினையாக ஏறும்—என்றபடி. உள் அடைவு—உள்ளுதற்கு ஏதுவான முறை, விருப்பு வெறுப்புக்கள்; உள்ளுதல்—நுகர்தல், அநுபவித்தல்.

(ii) இனி, வினையால் எல்லாம் விளையும் எனக் கொள்வோம் ஆயின், முதல்வனால் ஆகக்கடவது ஒன்றும் இல்லை என்று ஏற்படுகிறது; முதல்வன் செய்வன் எனின், வினை வேண்டப்படுவதின்று—எனச் சமணர் புத்தர் மீமாஞ்சகர் மதம்பற்றியும், வேதாந்தம் எனப்படும் பிரம சூத்திர மதங்கொண்டோருள் பழைய கொள்கையினரான பரிணாமவாதிகள் மதம்பற்றியும் தடைகள் எழும். அவற்றைப் பற்றிச் சிறிது ஆராய்வாம் :—

சமணரும் புத்தரும் மீமாஞ்சகரும் வினையும் வினையின் பயனும் உண்டு; வினைப்பயனை வினையே உருவெடுத்து வந்து ஊட்டும் (ஊழ்வினை உருத்து வந்துஊட்டும்—சிலப்பதிகாரம்); இதற்கொரு முதல்வன் வேண்டா என்பர்.

"பல ஆக்கள்கூடிய மந்தையில் உள்ள தன் தாயை ஓர் ஆன்கன்று நாடி அடைய வல்லது; அதுபோல, ஒருவன் முற்பிறப்பில் செய்தவினை இப்பிறப்பில் அவன் இருக்கும் இடம்தேடி அடைந்து, தன் பயனை நுகர்விக்கும்; ஆதலால், வினைப்பயனை வரைந்து வினைசெய்தோனுக்குச் சேர்த்தற்கு ஒரு முதல்வன் உளன் எனல் வேண்டா" என்னும் கருத்தைக்கொண்டதே பின்வரும் நாலடிப் பாட்டு. நாலடியார் செய்தோரும் தொகுத்தோரும் சமணர் என்பது தெளிவு.

> "பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
> வல்லதாம் தாய்நாடிக் கோடலைத்-தொல்லைப்
> பழவினையும் அன்ன தகைத்தேதற் செய்த
> கிழவனை நாடிக் கொளற்கு"

என்பது நாலடியில் உள்ளதொரு பாட்டு.

இக்கருத்தை மறுத்து மெய்கண்டார் வினைப்பயன் முதல்வன் ஆணையால் உயிர்க்கு வந்துபொருந்தும் எனச் சூத்திரத்தும் வார்த்திகத்தும் கூறியுள்ளார். வினை வயத்தால் உலகைத் தொழிற்படுத்துவான் இறைவன் ஆகான் என்னும் பரிணாமவாதிகளை நோக்கியே, வார்த்திகத்தில், ஒரு நாட்டை ஆளும் அரசன் தன் ஆட்சியை அரசியல் அமைப்பு, சட்டசபை, ஆட்சிக்குழு என்னும் இவற்றின்மேல் வைத்து நடாத்துதல் பற்றி அவன் முதன்மைக்கு இழுக்கு இல்லாததுபோல, முதல்வனும் தன் அருட் பாதுகாப்பை இருவினையின்மேல் வைத்து நடாத்துதல்பற்றி அவன்றன் சுதந்திரத்திற்கு இழுக்கில்லை எனக் கூறினர்.

இனி, அங்ஙனமாயின், வினையே அமையாதோ, முதல்வன் துணையையும் ஏன் கோடல் வேண்டும் என்பாரை நோக்கி "வள்ளல்வன்—செய்பவர் செய்திப் பயன்விளைக்கும் செய்யேபோற் — செய்வன் செயலணையா சென்று" எனக் கூறுகின்றார்.

வினை அறிவில்லது; வினையும் வினையைச் செய்தோரும், செயப்படுபொருளும், ஏற்றுக்கொள்வோரும் நிலைப்பதில்லை. ஆதலால், உயிரோடு உடனின்று அதன்செயலைக் கண்டுவரும் முதல்வன் அச்செயலின் பயனை அவ்வுயிர்க்கு ஊட்டுவன்; உழவர் செய்யும் தொழிலுக்குத் தக்கபயனை விளைநிலம் பயப்பதன்றி அத்தொழிலே பயவாததுபோல என்பது கருத்து.

இனி, வினை சடமாதலின் உயிரைச் சென்று அணையாது என்றது பொருந்தும்; உயிர் அறிவுடைப் பொருளாதலின் அதுவே தான்செய்த வினைப்பயனை அறிந்து நுகராதோ எனின், நுகராது. உயிரின் அறிவு கறைகெழுமிய சிற்றறிவு; காந்தம் இரும்பை வலித்துக்கொள்வதே எனினும், தன் ஈர்ப்புச் சத்தி எல்லைக்குள் (within the space of the magnetic field) வந்த இரும்பு ஊசியைத்தான் வலித்துக்கொள்ளும். அதுபோல, உடம்பின்கண் தங்கிச் சிற்றறிவுள்ளதாய்த் தன்வயமின்றி நிற்கும் உயிர்க்கு, அது முன் செய்துவைத்த வினைப்பயனை முதல்வன் அதன் அறிவின் எல்லைக்குள் கொடுவந்து நிறுத்திய போதே அது முயற்சியோடு அதனை அநுபவிக்கவல்லதாம். உயிர்க்குச் சுதந்தர அறிவு இல்லை; வினை சடம்; உலக முதற் காரணமாகிய மாயை முதல்வனையே சார்பாகக் கொண்டு அவன் அருளாணைவால் தொழிற் படுவது. ஆகலின், வினைப்பயனைப் பிறப்பு நிலையில் உயிர்களுக்கு நடுவுநிலைமையோடு பெயராமல் நுகர்விக்க வல்லவன் முதல்வனேயன்றி வேறு எவரும்இலர் என்று உணர்தல் வேண்டும்.

> "அவ்வினையைச் செய்வதினில்
> அவ்வினைஞர் தாம்சென்றங்(கு)
> அவ்வினையைக் காந்த
> பசாசம்போல்—அவ்வினையைப்
> பேராமல் ஊட்டும்
> பிரானின் நுகராரேல்
> ஆர்தாம் அறிந்தணைப்பார் ஆங்கு"

என்னும் உதாரணச் செய்யுள் மேற்கூறிய கருத்தைக் கொண்டது.

இதுகாறும் இரண்டாஞ் சூத்திரத்து முதல் இரண்டு அதிகரணங்களால் உணர்த்தப்பட்ட பொருள் முதல்வன் உயிர்களுக்குப் பிறப்பு நிலையில் அவற்றோடு பிரிப்பின்றி மறைந்து உடனின்று அவை செய்துவரும் நன்று தீது என்னும் இருவினைகளுக்கு ஏற்றபடி இன்பத்துன்பங்களை நுகர்விப்பன் என்பது. இவ்வாறு உயிர்களோடு உடனாகி, வினைவழி நின்று செலுத்தும் முதல்வன் திருவருளை ஆணை எனப்பெயரிட்டார் மெய்கண்டார். இதனைத் திரோதானசத்தி (மறைப்பு ஆற்றல்) எனச் சிவாகமங்கள் கூறுகின்றன. இத் திரோதானசத்தியையே தொல்காப்பியர் "பால்வரை தெய்வம்" எனவும், திருவள்ளுவர்

வகுத்தான் எனவும் குறித்தனர் என்பதை எமது "திருக்குறளின் உட்கிடை சைவசித்தாந்தமே" என்னும் நூலில் இனிது விளக்கியுள்ளோம்.

மேலே தடைவிடைகளால் விளக்கிய கருத்துக்களிலிருந்து பிறப்பின் அடிநிலை உள்பொருள்களாக இருவினையும், வினைப்பயனும், செய்வோனும், சேர்ப்பானும் என்னும் நான்கும் அமைந்திருத்தல் புலனாகும்.

முதல்வன் உலகைப் படைக்கின்றான் எனக் கொள்ளும்போது, அவன் இயல்பு பற்றி இரண்டு கேள்விகள் எழுவது இயற்கை: உயிர்களை ஒரே வகையாகப் படையாமல் சிலரை உயர்வித்தும் சிலரைத் தாழ்வித்தும், சிலரைச் செல்வத்தின் இருத்தியும் சிலரை வறுமையின் ஆழ்த்தியும், சிலரை இன்புறுத்தியும் சிலரைத் துன்புறுத்தியும் வைத்தலின், முதல்வனை நடுவுநிலைமை யுடையன் என்றல் எங்ஙனம் பொருந்தும்? இன்னும், அவன்றன் படைப்பில் அமைந்த உயிர்கள் துன்புறக்காண்டலின், அவனை அருளிலன் என்று எண்ண இடமுண்டு அல்லவா?—என எழுவன. ஆனால், மேலே உயிர்களை அவை முன் முன்பிறப்புக்களிற் செய்த இருவினைகளுக்கு, ஏற்பப் பலவேறு வகைப்படப் படைப்பன் முதல்வன் எனக் கொண்டமையின், இவ்வினாக்கள் எழ இடமில்லை. இக்கருத்துப்பற்றியே திருவள்ளுவர் முதல்வனை "வேண்டுதல் வேண்டாமை இலான்" எனவும், "அறவாழி அந்தணன்" எனவும் காரண ஆக்கக் குறிகளால் சுட்டுவாராயினர்.

உத்தரமீமாஞ்சையில் (பிரமசூத்திரம்) இரண்டாம் அத்தியாய முதற்பாதத்து 34ஆம் சூத்திரமும் இக்கருத்தையே கொண்டுளது:—

"வைஷம்ய நைர்க்ருண்யேந, ஸாபேக்ஷத்வாத்; தஸ்தாஹி தர்சயதி" என்பது சூத்திரம்.

இது "நடுவின்மை அருளின்மை இல்லை, கருதிச் செய்தல் உண்மையின்; அங்ஙனமன்றே கூறுகின்றது! என மொழிபெயர்க்கத்தக்கது.

இதன்கண் 'அங்ஙனமன்றே கூறுகின்றது!' என்னும் தொடர்

"ஒருவன் நற்செயலால் நல்லோன் ஆகத் தீச்செயலால் தீயோனாக ஆகின்றான்" என்னும் பிருகதாரண்யக உரைமீதும்,

"நன்மை செய்தோர் நற்பிறப்பையும் தீமைசெய்தோர் தீப்பிறப்பையும் எய்துகின்றனர்" என்னும் சாந்தோக்கிய உரைமீதும் நோக்கு உடையது எனக்கொள்ளப்படும். படுதலின், "உயிர்களுக்கு நன்றும்தீதும் அவை முன்பிறப்பிற் செய்த இருவினைக்கு ஏற்றபடி வருகின்றன எனச் சுருதிகள் கூறுகின்றன; அதனால் பரம ஆதாரநிமித்த காரணமாகிய பிரமம் இருவினைகளாகிய துணைக்காரணத்தை அபேக்ஷித்தே படைக்கின்றது என்பது போதரும்; போதருதலின், முதற்பொருளை நடுவுநிலையில்லது, அருளில்லது எனக் கூறுதற்கு ஓரியையின்று—என்பது சூத்திரத்தின் கருத்தாகக் கொள்ளப்படும். (உயிர்கள் முதல்வனைப்போல அநாதி; அவற்றுக்கு உடம்பைத் தருதலையே படைப்பு என்கிறோம்.)

இதனாலும் பிறப்பிற்குக் காரணமாகக் கொள்ளப்படும் அறநெறியின் அமைப்புச் செய்வினையும், செய்வோனும், அதன்பயனும், சேர்ப்பானும் என்னும் நான்கு தத்துவங்களை ஊன்றுகோலாகக் கொண்டுள்ளது என்பது விளங்கும்.

செய்வினைப்பயன் செய்தோனையேசென்றடைதற்கு ஏதுவாகிய நியதியைத் தொல்காப்பியர் பால்வரை தெய்வம் எனக் குறிப்பிடுதல்பற்றியும், அங்ஙனமே திருவள்ளுவரும் அதனைத் தெய்வம் எனவும், வகுத்தான் எனவும் குறியிட்டு ஆளுதல்பற்றியும் இந் நாற்பொருள் உண்மைக் கொள்கையைப் பிறப்பு நிலைக்கும் அறநெறியமைப்பிற்கும் தமிழ்த் தொல்லாசிரியர் அனைவரும் அடிப்படையாகக் கொண்டுள்ளனர் என்பது உய்த்துணரப்படும்.

இங்ஙனம் தமிழ்ச் சான்றோர்களும் வேத முனிவர்களும் உள்ளுணர்வாற்கண்டு ஒப்ப உணர்த்தி வந்தாராயினும், இந்நாற்பொருட் கொள்கையைச் சிவநெறி வகுத்த செம்புலச் செல்வர்கள் வலியுறுத்திக் கூறி வருவது போலப் பிறசமயத்தினர் யாரும் கூறுவதாகத் தெரியவில்லை. அவர் எல்லாரும் இந்த நாற்பொருள்களுள் ஒன்றும் பலவும் பொருட்படுத்தாது விடுத்தே பிறப்பிறப்பின் காரணத்தையும், அறநெறியின் பெற்றியினையும், வீட்டின் சாதனத்தையும் வகுத்துரைப்பாராயினர். எடுத்துக் காட்டாக,

இம்மை நுகர்ச்சி ஒன்றே உண்டு, மறுபிறப்பு இல்லை என்னும் உலகாயதரும், கிறித்துவரும், இஸ்லாமியரும் மேலேகூறிய நான்கு பொருளை யுமே பொருளாகக் கொள்ளார்; அவரினும் நுணுகி ஆராய்ந்த பௌத்தர் வினையினையும் வினைப்பயனையும் உடன்பட்டு உயிரையும் முதல்வனையும் பொருளாகக் கொள்ளார். அவரினும் நுணுகி வுணர்ந்த சைனரும் மீமாஞ்கரும் செய்வினை, வினைப்பயன், செய் தோன் என்னும் மூன்றனையும் உடன்பட்டும், வினைப்பயனை உயிர்க்குப் பிறழாமல் ஊட் டும் முதல்வன் உயிர்க்குப் பெரியதோர் நற் சார்பு ஆக நிற்றலை உணரமாட்டார். இனி, உத்தர மீமாஞ்சையைச் சிறந்த பிரமாண மாகக் கொண்ட மாயாவாதிகள் முதலாயினோ ரும் மேற்கூறிய நாற்பொருளையும் பொது வாக உடன்பட்டார் ஆயினும், அவர் உலகப் படைப்பைக் கயிற்றின் அரவுபோல வெறுந் தோற்ற மாத்திரையே எனவும், யாதொரு நோக் கமும் பயனும் இன்றி முதல்வன் தன் விளை யாட்டால் மேற்கொள்ளும் வறுந்தொழில் என வும் கொள்வாராகலின், அன்னோரும் அற நெறியின் அடிப்படையாகவுள்ள நாற் பொருள் உண்மைக் கொள்கையை நன் குணர்ந்து கடைப்பிடியாதவரேயாவர்.

இவர் எல்லாரும் இங்ஙனமாக, இந்நாற் பொருள் உண்மைக் கொள்கையை நன்கினிது விளக்கி அறநெறியினையும் ஞானமெய்ந் நெறியினையும் இணைத்துப் பிறப்பு வீடு என் பவற்றின் இயல்பையும் காரணங்களையும் உண்மையான் ஆராய்ந்து தெளியக்கொண்டு உணர்த்துவது சிவநெறி ஒன்றேயாம். இவ் வுண்மையைச் சேக்கிழார் அடிகள் சாக்கிய நாயனர் வரலாற்றில் வைத்து உணர்த்து கின்றார்.

திருத்தொண்டத் தொகையில் தனிப் பட்டவர்களாகப் பெயர் குறித்து ஓதப் பெற்ற அறுபத்துமூன்று நாயன்மார்களுள் சாக்கியநாயனர் என்பவர் ஒருவர். அவர் முதற் கண் புத்தமதஞ்சார்ந்து ஒழுகினர்; அஞ் ஞான்று அவர் காஞ்சியில் வந்து தங்கிப் பல சமய நெறிகளையும் ஆராய்ந்தார். பின் அவ்வாராய்ச்சியின் முடிந்த பயனாக, மேற் கூறிய அறநெறியின் அடிப்படைக்கொள்கை சைவநெறிக் கண்தான் உள்ளது என்பதைத் திருவருளால் உணர்ந்து சைவநெறியைக் கடைப்பிடித்தார் எனப் பெரியபுராணம் பின்வரும் செய்யுளால் விளக்குகிறது.

"செய்வினையும் செய்வானும் அதன்பய னும் சேர்ப்பானும்—மெய்வகையால் நான்கா கும் விதித்தபொருள் எனக்கொண்டே—இவ் வியல்பு சைவநெறி அல்லவற்றுக்(கு) இல்லை யென—உய்வகையாற் பொருள் சிவன் என்(று) அருளாலே உணர்ந்தறிந்தார்" என்பது.

இவ்வாராய்ச்சியின் முடிபயனாக, அற நெறிபற்றிய இரண்டு உண்மைகளை உணர்ந் தறிதல் நன்று: (i) உயிர்க்கு உறுதி என நூல்களுட் கூறப்படும் பொருள் நான்கனுள், பொருளும் இன்பமும் அறத்தின் வழிப்படின் அல் லது உயிர்க்கு உறுதி ஆகா; (ii) அவ் வறந்தா னும் அதனை முதல்வன்றன் ஆணையே என வுணர்ந்து, கடவுள் உண்மைக்கொள்கை உடை யார்க்கன்றிப்பிறப்பறுத்து வீடு பயப்பதாகாது— என்பவை அவை.

"அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது"

என்னும் தேவர் குறளின் உட்கிடை இவ் வரியபெரிய உண்மைகளை அடங்கக் கொண் டிருத்தல் உணர்ந்து கடைப்பிடித்தற்கு உரியது.

தடை: இங்ஙனம், உயிர்களுக்கு இரு வினை என்னும் கட்டு உளது என, ஆராய்ந்து உணரும்போது, பின்வருமாறு அளவை முறைபற்றி ஒருவின எழும்: இவ்வினை உயிர்க்கு ஒரு காலத்து வந்துகூடியதோ (ஆதியோ), அன்றித் தோற்றமின்றி உடன் இருந்தோ (அநாதியோ) கூறுக! ஆதி (ஒரு காலத்து வந்துகூடியது) எனின், வந்துகூடு தற்குக் காரணம்வேண்டும்? காரணம் இன்றி வந்ததெனின், காரணகாரிய நியதியாகிய சற் காரிய முடிபிற்கு முரணும்; அன்றியும், நூல்களுட் கூறப்படும் சாதனங்களைக் கைக் கொண்டு வினையின் நீங்கி வீடு எய்தியபின் னும், அவ்வினை யாதொரு காரணமுமின்றி உயிரை மீளவும் பற்றக்கூடும் ஆகலின், வீடு என்பது பேரா இயற்கை என்னும் மாறுநிலை யாதலின்றி நிலையுதல் இல்லாதாகிவிடும். இனி, அதனை அநாதி (தோற்றமின்றி உயிருடன் இருப்பது) எனின், சேர்ப்பான் ஒருவன் வேண்டும் என்றது பொருந்தாதாகிவிடும்; அன்றியும், உடன்தோன்றி உளதாயின் அது

நீக்குதற்கு அரியதாகி வீடென்பது இல்லையாகிவிடும். ஆகலின், எங்ஙனம் விடுப்பது? எனின், கூறுகின்றார் ஆசிரியர்;

விடை:

நெல்லின்கண் அரிசியை மூடிநிற்கும் உமியும், செம்பிற்குக் களிம்பும் எக்காலத்துத் தோன்றின என ஆராயும்போது, அவை பின் ஒருகாலத்தில் உளவாயின எனப்படாமல், அரிசியும் செம்பும் எப்பொழுது உண்டோ அப்பொழுதே உடன் உள்ளனவாக அமைதல் விளங்கும்; அவை அவற்றின் குணம் எனப்படாமல், அவற்றின் இயற்கைக் குற்றமாயிருந்து, பின்னர் நீங்குவனவாகவும் உள்ளன. அங்ஙனமே உயிர்க்கு இயற்கைக் குற்றமாய் மலமும் மாயையும் வினையும் அநாதியே உள்ளனவாம்; அங்ஙனமாயினும் அவை விரிந்தும் தொக்கும் காரியப்படுவது முதல்வனது திரோதான சத்தி எனப்படும் ஆணையால்தான்; எதுபோல என்றால், தானே முன் உள்ளதாகிய தாமரை அரும்பு அலர்தல் ஞாயிற்றின் ஒளியால் என்பது யாவரும் அறிந்த உண்மை; மலர்ந்துள்ள தாமரை குவிதலும் ஞாயிற்றின் கதிரால்தான் என்பதும் தெரிந்ததே. இவைபோலக் கொள்க.

நெல்லிற் குமியும் நிகழ்செம் பினிற்களிம்பும்
சொல்லிற் புதிதன்று தொன்மையே;—வல்லி
மலகன்மம் அன்றுளவாம்: வள்ளலாற் பொன்வாள்
அலர்சோகஞ் செய்கமலத் தாம்.

என்பது இக்கருத்தடங்கிய உதாரணச் செய்யுள். வல்லி—பெண், இங்கு மாயை; மாயையை முதல்வனது வைப்புச் சத்தி என்னும் மரபுபற்றி அதனை வல்லி என்றார்: மோகினி என்பதும் அதன் பெயர். மலம்—ஆணவமலம். கன்மம்—வினை. வினையை அநாதி எனக் கூறவந்தவர் இனம்பற்றி மல மாயைகளுக்கும் தொன்மை கூறினார், சுருங்கல் என்னும் அழகுபற்றி.

பொன்வாள்—ஞாயிற்றின் ஒளி. அலர்—அலர்தல், முதனிலைத் தொழிற்பெயர்; சோகம் — குவிதல். ஆம் — காரியப்படும். (அவை), பொன்வாளால் அலர்தலும் சோகமும் செய்யும் கமலத்தைப்போல, வள்ளலால் ஆம்—என முடிக்க.

நெல்லிற்கு உமியும் எனச் சுருங்கக் கூறினும் மூவகை மலங்களும் உயிரை அநாதியே பற்றி நிற்றலைப் பின்வரும் சித்தித் திருவிருத்தத்தால் தெளிய உணர்ந்துகொள்ளுதல் வேண்டும்:—

“மும்மலம் நெல்லி னுக்கு முளையொடு
தவிடு உமிப்போல்
மம்மர்செய்து அணுவின் உண்மை வடிவினை
மறைத்து நின்று
பொய்ம்மைசெய் போக பந்த போத்திருத்
துவங்கள் பண்ணும்”

நெல்லுக்கு முளைத்தற் சத்திபோல் கன்மமலம் உயிரைப் பந்தித்துப் போகம்பண்ணும்; அஃதாவது, நெல்லின்கண் உடன் தோன்றியுள்ள முளைத்தற்சத்தி முளையைத் தோற்றுவித்தல் போல், வினை உயிரின்கண் இன்பத்துன்பங்களுக்கு முதற்காரணமாய் நின்று தோற்றுவிக்கும்;

நெல் முளைத்தற்குத் துணைக்காரணமாய் உடனிற்கும் தவிடுபோல, மாயை இன்பத்துன்பங்களுக்குத் துணைக்காரணமாய்த் தன் காரியமாகிய தனுகரண புவன போகங்களை உயிரோடு இயைவித்துப் பந்தம் பண்ணும்;

முளை தோன்றுதற்கு நிமித்தமாக உள்ள உமிபோல. ஆணவமலம் இன்பத்துன்பங்களின் தோற்றம் உயிரின்கண் உண்டாதற்கு நிமித்தமாய் நின்று, உயிரை மாயையின்கண் வீழ்த்தும்—எனத் தெரிந்துணர்ந்து கொள்க. போத்திருத்துவம்—நுகர்வோனும் தன்மை; அதாவது, மாயையை நோக்கி இழிதல். கன்மம் போகத்தையும், மாயை பந்தத்தையும், ஆணவம் போத்திருத்துவத்தையும் பண்ணும் என்க. உயிரும், அதனைப் பற்றியுள்ள மலகன்மமாயைகளும், உயிருக்கு அவற்றோடுள்ள சம்பந்தமும் காலதேச வரம்புக்குள் வைத்துப் பேசப்படாத அநாதி,—நோயாளியும் நோயும் நோய்க்கு மருந்தும் அவற்றின் சம்பந்தமும் முற்பிற்பாடின்றி ஒருங்கே அமைதல்போல. மலம்—உயிரின் நோய்; மாயை கன்மங்கள் அந்நோய்க்கு மருந்து. உயிருக்கு அநாதியே துணைவனாக உள்ள முதல்வன் மருத்துவன்; அவன் உயிரின் நோயை மாயைகன்ம மருந்துகளால் படிமுறையால் நீக்குவன்—என இவ்வாறு மேற் சொல்லிய நுண்ணிய கருத்துக்களை உளங் கொள்ளுதல் வேண்டும்.

“வினையாததோர் பரிசில்வரு பசுபாசவே தனையொண் டளையாயின தவிரவ்வருள் தலைவன்

ளதுசார்பும்"—என்னும் திருஞானசம்பந்தர் மறைமொழி இங்கு ஆய்ந்த பொருளுக்கெல்வாம் மூலமாதல் காண்க.

விளையாததொரு பரிசில்வருதல்-தோற்றமின்றி அநாதியே உள்ளதாகி நடைபெறுதல். பசு—கட்டுற்றுநிற்கும் உயிர்; பாசம்—கட்டிநிற்பதாகிய மலம் (ஆணவம்); வேதனை—இன்பத்துன்ப மயக்கம் என்னும் தன் வேதனைக்கு முதற்காரணமாகிய கன்மம் அல்லது வினை; ஒண்தளை—இரவில் இருளைச் சிறிதே நீக்கும் விளக்குப்போல, பிறப்புநிலையில் ஆணவமலத்தின் மறைப்பைச் சிறிதுநீக்கி ஒளிபயக்கும் தளையாகிய மாயை.

'அநாதியே உள்ள பசு, தன்னை அநாதியே பற்றியுள்ள பாசம், வேதனை, ஒண்தளை என்னும் மூன்றனையும் தவிர்ந்து தன்னடிகூடும்படி உபகரித்துவரும் அநாதியாகிய தலைவன் எழுந்தருளும் இடம்'—என்பது மேற்காட்டிய அடிகளின் பொருள். "விளையாததோர் பரிசில்வரு"—என்னும் அடையாண்டும்கூட்டி உரைக்கத்தக்கது—முதனிலைத் தீபகம்.

"நகர்மாவிபாகத் இதிசேத், ந அநாதித்வாத்;
உபபத்யதேசாபி உபலப் யதேச."-2-1-35,36

[(முதற்கண்) வினைப்பகுப்பின்மையின், (முதற்படைப்பின் வேறுபாட்டுக் காரணம்) இன்று எனின், அற்றன்று; அநாதித்தன்மை கோடலின். அது பொருந்துவதும் காணப்படுவதும் ஆகின்றது] என்னும் உத்தர மீமாஞ்சை சூத்திரங்கள் மேற்கூறிய கருத்துக்களைச் சுட்டுவனவாக உள்ளன.

இன்னும் "வள்ளலால் ஆம்" என்ற மெய்கண்ட மறையின் பொருளே,

"ஸர்வ தர்மோ பபத் தேஸ்ச"—2-1-37

[(முதல்வனுக்கே) எல்லாத்தன்மைகளும் இயைதலானும்] என்னும் இரண்டாம் அத்தியாய முதற்பாதத்து இறுதிச் சூத்திரத்திற்கும் கருத்தாதல் வேண்டும். இஃது இருநூல்களையும் புடைபட வைத்து உபநிடதவுரைகளையும் கலந்து ஆராய்வார்க்குப் புலனாகும்.

இனி மும்மலங்களும் முதல்வனது வல்லமை எனப்படும் திரோதான சத்தியால் காரியப்படும் என ஆசிரியர் சுட்டினமையின், அவை பிரியப்படுமாற்றை ஆகம அளவை பற்றி விரித்துரைத்தல் உரை செய்வோர் கடமை ஆகும். அஃது அடுத்த இதழில் உரைக்கப்படும்.

(தொடரும்)

சிதம்பரம் : நடராஜர் கோயிலில் 15—12—61-ல் திரு. டி. துரைசுவாமிரத்ன தீட்சிதர் அவர்கள் தலைமையில் வித்துவான் திரு. ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை அவர்கள் "திருவாதவூரரும் திருவெம்பாவையும்" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்

ஸ்ரீவில்லிபுத்தூர் : நாச்சியார் கோயிலில் வைகுண்ட ஏகாதசிப் பெருவிழா 8-12-61-ல் தொடங்கி 28—12—61-ல் முடிவுற்றது. மார்கழி நீராட்ட விழா (எண்ணெய்க்காப்பு) 6—1—62 முதல் 15—1—62 வரை நடைபெறும்.

வடுவூர் : கோதண்டராம சுவாமி கோயிலில் இராப்பத்து விழா 18—12—61 முதல் 27—12—61 வரை நடைபெற்றது.

ஆழ்வார் திருநகரி : ஆதிநாதர் ஆழ்வார் கோயிலில் வைகுண்ட ஏகாதசி விழா 8—12—61 முதல் 28—12—61 வரை நடைபெற்றது.

இராமேசுவரம் : இராமநாதசுவாமி கோயிலில் ருத்ர திருசதிநாம மண்டலார்ச்சனை 16—12—61 முதல் 29—1—62 வரை நடைபெறும்.

மொடச்சூர் : தான்தோன்றியம்மன் கோயிலில் ரதோற்சவம் 15—12—61லும் 16—12—61-ல் தெப்போற்சவமும் நடைபெற்றது.

பந்தணைநல்லூர் : பசுபதீசுவரசுவாமி கோயிலில் மாதாந்திர பிரதோஷ கூட்டு வழிபாட்டு மூன்றாவது ஆண்டுவிழா 19—12—61ல் நடைபெற்றது.

மலைநாட்டுத்திருப்பதியநுபவம்

[மகாவித்துவான் திரு. P. B. அண்ணங்கராசார்ய்சுவாமிகள், காஞ்சிபுரம்]

(முன்தொடர்ச்சி)

மலைநாட்டுத் திருப்பதிகளுள் நம்மாழ்வார் பதிகம்பாடி யநுபவித்த திருக்கடித்தானமென்னும்பதியை ஒவ்வொரு பாசுரமாக அநுபவித்து வருகிறோம். ஆறாவது பாசுரம் முதல் இப்போதநுபவிப்போமாக.

6. கூத்த வம்மான் கொடியேனிடர் முற்றவும்
மாய்த்த வம்மான் மதுசூத வம்மானுறை
பூத்த பொழில் தண் திருக் கடித்தானத்தை
ஏத்த நில்லா குறிக்கொண்மி னிடரே.

கீழ்ப் பாசுரங்களில், எம்பெருமான் திருக்கடித் தானப்பதியோடுங் கூடத் தம் திருவுள்ளத்திலே வந்து புகுந்ததாக ஆழ்வாரருளிச் செய்திருக்கையாலே, அத்திருப்பதியானது ஆழ்வார் திருவுள்ளத்திலே அந்தர்த்தானமாகி விட்டதென்றும், தனியே அத்திருப்பதி கிடையாதென்றும் சிலர் நினைக்கக் கூடுமாதலால் அந்நினைவுக்கு இடமறும்படி 'திருக்கடித்தானத்தை எல்லீரும் சென்று துதித்திறைஞ்சுமின்' என்கிறார். எம்பெருமானைக் கூத்தவம்மானென்றது கூத்தாடுபவனென்றபடி. க்ருஷ்ணாவதாரத்தில் குடங்களெடுத்தேறவிட்டுக் கூத்தாடினது, மன்றில் மரக்கால் கூத்தாடினது ஆகிய இக்கூத்துகளை மட்டும் சொல்லுகிறதன்று. பகவான் அவதாரங்கள் செய்ததெல்லாம் கூத்தாடினபடியாகவே கூறப்படுகிறது. நாடகங்களில் நடனென்னு மொருவன் தன்னுடைய மனைவியான நடியோடு கூடவந்து வேஷங்களை மாற்றிமாற்றி யிட்டுக்கொண்டு கூத்தாடுவது போலவே பகவானும் பிராட்டியோடு கூடவந்து மீனுயாமையுமாய் நரசிங்கமுமாய்க் குறளாய்க்காறு ரேனமுமாய்ப் பல வேடங்களைத் தரித்துக் கூத்தாடுவது காண்கிறோம். இதனை வேதாந்த தேசிகன் தசாவதாரத் தோத்றத்தின் முதல் சுலோகத்திலே விளங்கவருளிச் செய்திருப்பது காண்க.

இடர் முற்றவும் மாய்த்தவம்மான் — தன்படிகளை நினைக்குமவர்களின் ஸகல துக்கங்களையும் போக்குமவன். அர்ஜுனனுக்கு உபதேசித்தருளின கீதையின் சரமசுலோகத்தில் "அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று கூறியது காண்க. என்னையே பற்றுமளவில் ஸகல பாபங்களில் நின்றும் விடுவிப்பே னென்றவாறு. தரும சாஸ்திரங்களில் பாபங்களுக்குப் பிராயச்சித்தங்கள் விதிக்கப்பட்டிருத்தலால் அவற்றாலன்றோ பாவங்களைப் போக்கிக்கொள்ள வேண்டு மென்னவேண்டா; பாவமென்று கைகால் முளைத்து ஒரு பொருளுள்ள தன்றே; எம்பெருமான் மனத்தில் நிக்ரஹம் தோன்ற நிற்பது பாவம்; அநுக்ரஹம் தோன்ற நிற்பது புண்ணியம். நான் பொறுத்தேனென்று நினைப்பிடுமளவில் அவனுடைய நிக்ரஹம் தொலையுமாதலால் "கொடியேனிடர் மாய்த்த வம்மான்" என்னத் தட்டில்லை.

மது சூதவம்மான்—மது வென்னுமசுரனைத் துடையிடுக்கில் நெருக்கிக் கொன்றபெருமான். மதுவைச் சொன்னவிட மெங்கும் கைடபனையுங் கொள்ள வேணும். மதுகைடவர்கள் ஒரு சேர்த்தியாக இருக்குமசுரர்கள். ஆதிஸ்ருஷ்டி காலத்தில் தோன்றினவர்களாய் மஹாபலிஷ்டர்களான மதுகைடபர்களென்னும் அசுரர்களிருவரும் முன்னொரு காலத்தில் நான்முகனிடத்திலிருந்து வேதங்களைக் கொள்ளைகொண்டு கடலில் மூழ்கி மறைந்திட, ஞான வொளியைத் தரும் பெருவிளக்கான வேதங்கள் ஒழிந்தமைபற்றி உலகமெங்கும் பேரிருள் மூடி நலியாநிற்க, பிரமன் முதலானோரனைவரும் கண்கெட்டவர் போல யாதொன்றும் செய்யவறியாமல் திகைத்து வருந்துவது கண்டு எம்பெருமான் திருவுள்ள மிரங்கி கடலினுட்புகுந்து அவ்வசுரர்களைத் தேடிக் கண்டுபிடிக்க, அவர்களும் செருக்கி எம்பெருமானை எதிர்த்துப் போர்புரிய, ஏற்கெனவே இவர்கள் வரங்கேட்டிருந்தபடி எம்பெருமான் இவர்களைத் துடையாலிறுக்கிக் கொன்றருளினு னென்பது வரலாறு. இத்தகைய வைபவம் வாய்ந்த பெருமான் உறையுமிடம் திருக்கடித்தானம்.

அதனை ஏத்துமவர்கட்குக் கெடு மிடராய வெல்லா மென்றுராயிற்று. (6)

7. கொண்மி னிடர்கெட உள்ளத்துக்
கோவிந்தன்
மண்விண் முழுதுமளந்த வொண்டா மரை
மண்ணவர்தாந் தொழ வானவர்தாம் வந்து
நண்ணு திருக்கடித்தான நகரே.

மண்ணுலகையும் விண்ணுலகையும் ஒன்றொழியாமல் அளந்துகொண்ட எம்பெருமானது திருவடித்தாமரைகளை மண்ணுளாரும் விண்ணுளாரும் வந்து தொழுதுய்யுமிடம் திருக்கடித்தானத் திருப்பதியாம்; அதனை நெஞ்சிலே கொண்டு சிந்திக்குமளவில் உங்கள் துயரனைத்தும் தொலையுமென்றுராயிற்று.

திருக்கடித்தானத்தை ஏத்துங்களென்றுர் கீழ்ப்பாட்டில்; ஏத்த வேண்டா, அத்தலத்தை நெஞ்சால் நினைத்தாலும் போதுமென்கிறது இப்பாட்டில். திருமாலின் திருநாமங்களுள் கோவிந்தன் என்பது மிக வெளியன் என்று பொருள்பட நிற்பது. பசுக்களுக்கு எளியனானவன் மற்றவர்கட்கு எளியனாகக் கேட்கவேணுமோ? அவ்வெளிமையை நன்கு விளங்கச் செய்த வவதாரம் திருவிக்கிரமாவதாரம். திருமாலையில் தொண்டரடிப் பொடியாழ்வார் "தாவியன் றுலகமெல்லாம் தலைவிளாக் கொண்ட வெந்தாய்!" என்றருளிச் செய்தபடி இன்னாரினையாரென்று பாராதே வஸிஷ்ட சண்டாள விபாகமின்றி அனைவர் தலைமேலும் திருவடியை வைத்த அவதாரமாதலால் எளிமைக்கு எல்லை நிலமானதாமிது. அக்காலத்தில் இக்குணத்தை அநுபவிக்கப் பெருதவர்கள் 'அந்தோ! இழந்தோமே!' என்று வருந்தவேண்டாதபடி திருக்கடித்தானப் பதியிலே அதனைச் சேவிக்கலா மென்றவாறு. உலகத்தை யளந்தது திருவடியே யொழியத்தாமரையன்று. ஆயினும் 'முழுது மளந்த வொண் தாமரை' என்று தாமரை அளந்ததாகக் கூறியது உவமவாகு பெயர். திருவாய்மொழியிலேயே (6, 9,10-ல்) "தாவி வையங் கொண்ட தடந்தாமரைகட்கே" என்றதுங் காண்க. தாமரைக்கும் திருவடிக்குமுள்ள ஒற்றுமை நயம் கூறியவாறு.

மண்ணவர்தாந் தொழ வானவர் தாம்வந்து நண்ணு—மண்ணுலகிலுள்ள ஸம்ஸாரிகள் இடக்கை வலக்கை யறியாதவர்கள்; இப்படிப்பட்டவர்களும் இங்கே தொழுது அப்பெருமானது மேன்மைக் குணத்திற்கு எதிரான நீர்மைக் குணத்தை யநுபவித்துக் களியாநிற்க, விண்ணுலகத்தவர்களான நித்திய சூரிகள் இதுகண்டு 'திருநாட்டிலே நாம் அனுபவிப்பது மேன்மைக் குணமொன்று தானே; நீர்மைக் குணமொன்றும் நமக்கு அங்கு நிலமன்றே; அதை மண்ணுலகத் திருப்பதிகளில்தானே அனுபவிக்க இயலும்; ஆகவே நாமும் திருப்பதிகளிலே சென்று அநுபவிப்போம்' என்று ஆசை கொண்டு இங்கு ஓடிவந்து அநுபவித்துக் களிக்கின்றனராம். இத்தகைய பெருமையுடையது திருக்கடித்தானநகர் என்றுராயிற்று. (7)

8. தான நகர்கள் தலைச் சிறந்தெங் கெங்கும்
வானிந் நிலங்கடல் முற்று மெம்மாயற்கே
ஆனவிடத்தும், என்னெஞ்சும் திருக்கடித்
தான நகரும் தன தாயப்பதியே.

இப்பாட்டில் அற்புதமானவோர் அநுபவம் நிகழ்கின்றது ஆழ்வார்க்கு. பகவானுக்கு உரிய மிகச் சிறந்த தலங்கள் ஒன்றிரண்டல்ல; இம்மண்ணுலகிற் காட்டிலும் மும்மடங்கு பெரிதான விண்ணுலக மென்னுந் திருநாடு ஒன்றுளது. இந்நில முள்ளதுபற்றிச் சொல்லவே வேண்டா. இவற்றுக்கு மேல் "தன் தாளும் தோளும் முடிகளும் சமனிலாத பல பரப்பிச்" சயனிக்கு மிடமான திருப்பாற்கடலுள்ளது. இவ்வளவு தானே எம்பிரானுக்கு உறைவிடங்கள்; மற்றும் எண்ணிறந்த தலங்களுள்ளன. இப்படியிருக்கச் செய்தேயும் அவற்றில் ஆதரவு உடைய னல்லனவன். என்னெஞ்சையும், என்னெஞ்சில் வாஸத்திற்கு ஸாதனமாயிருந்த திருக்கடித்தானப் பதியையுமே தனக்குத் தாயப்பதியாகக் கொண்டு விரும்பியிராநின்று னென்கிருர்.

தாயப்பதி யென்பதற்குப் பொருளென்னென்னில்; தாயமென்பது வடசொல்; தாயாதிகள் என்ற சொல் வடிவங் காண்க. தாயப் பொருளை யநுபவிப்பவர்கள் தாயாதிகள். தாயப் பொருளாவது முறையிலே வந்ததாய் அவசியம் அநுபவிக்கத் தக்கதான பொருளாம். கிடைக்கத் தவறினும் நீதிமன்றத்தில் வழக்காடியும் பெறத்தக்க பொருளாம். உரிமைகொண்டாடி யநுபவிக்குந் தலம் என்பது தேர்ந்த பொருள். (8)

9. தாயப்பதிகள் தலைச்சிறந் தெங்கெங்கும்
மாயத்தினால் மன்னி வீற்றிருந்தானுறை
தேசத்தமரர் திருக்கடித் தானத்துள்
ஆயர்க்கதிபதி அற்புதன்தானே.

திருக்கடித்தானப் பதியொன்றேயோ அவனுக்குத் தாயப்பதி? எல்லாத் தலங்களுமே தாயப்பதிகளன்றோவென்ன; அன்றென்று சொல்ல முடியுமோ? முடியாது. ஆனாலும் ஆழ்வார் தம்மோடே கிட்டுகைக் குறுப்பான தலமென்று திருக்கடித்தானத்திலே விசேஷமான அபிமானங்கொண்டிருக்கின்றானென்கிறார்.

தலைச்சிறந்த தாயப்பதிகள் எங்கெங்கும் மாயத்தினால் மன்னி வீற்றிருந்தான்—*திவ்யதேசங்களில் இது சிறியது, இது பெரியது என்று வாசி பார்ப்பதில்லை. எந்தத் திருப்பதியானாலும் அது மிகச் சிறந்ததே; நாமும் வாசி பார்ப்பதில்லை, எம்பெருமானும் வாசி பார்ப்பதில்லை. எந்தத் திருப்பதியும் மிகச்சிறந்ததே. எதுவும் தாயப்பதியே. அத்தகைய எல்லாத் திருப்பதிகளிலுமே பொருந்தி வாழ்பவன் தான் எம்பெருமான்; ஆனாலும் திருக்கடித்தானத்திலிருப்பு அற்புதம்! அற்புதம்!! என்ன வேண்டுமத்தனை யென்றாராயிற்று(9.)*

10. அற்புதன் நாராயணன் அரிவாமனன்
நிற்பது மேவியிருப்ப தென்னெஞ்சகம்
நற்புகழ் வேதியர் நான்மறை நின்றதிர்
கற்பகச் சோலைத் திருக்கடித்தானமே.

எம்பெருமான் ஆழ்வார் தம்மைப் பெறுமளவும் திருக்கடித்தானத்திலே நின்றருளினான்; இவர் தம்மைப் பெற்று ஸம்ஸ்லேஷித்த பிறகு நிற்பது மிருப்பதும் இவர்தம் நெஞ்சிலேயாயிற்று என்கிறது இப்பாட்டு. இப்பாட்டை மூன்று வகையாக யோஜிக்கலாம். எங்ஙனேயெனின்; அற்புதன் நாராயணன் அரிவாமனன் நிற்பது (எங்கேயெனின்;) நற்புகழ் வேதியர் நான்மறை நின்றதிர் கற்பகச் சோலைத் திருக்கடித்தானத்து. (அவன்றான்) மேவியிருப்பது (எங்கேயெனின்;) என்னெஞ்சகத்து என்றிங்ஙனே ஒரு யோஜனை. (2) நற்புகழ் வேதியர் நான்மறை நின்றதிர் கற்பகச் சோலைத் திருக்கடித்தானத்து அற்புதன் நாராயணன் அரிவாமனன் நிற்பதும் மேவியிருப்பதும் என்னெஞ்சகம்—என்றிங்ஙனே மற்றொரு யோஜனை. (3) அற்புதன் நாராயணன் அரிவாமனன் நிற்பதும் மேவியிருப்பதும் என்னெஞ்சகத்திலும் திருக்கடித்தானத்திலும் என்று.

திருக்கடித்தானப்பதியனுபவம் முற்றிற்று. அடுத்த இதழில் திருவண்பரிசாரத் திருப்பதியநுபவமாகும்.

(தொடரும்)

பூவாளூர்; *திருமூலநாதசுவாமி கோயிலில் ஆருத்திரா தரிசன விழா 14—12—61 முதல் 23—12—61 வரை நடைபெற்றது.*

சிதம்பரம்: *அனந்தீசுவரருக்கு, 11—12—61-ல் கார்த்திகை சோமவாரத்தன்று அஷ்டகிரகசந்திதோஷத்திற்காகவும் உலக நன்மைக்காகவும் சிறப்பான அபிஷேக ஆராதனைகளும் சாமவேத பாராயணமும் நடைபெற்றன.*

தில்லை: *22—12—61-ல் திருவாதிரைத் தேர்த்திருவிழாவில் தேரோடும் வீதிகளில் திருமுறைவாணர்களால் திருப்பல்லாண்டு ஓதப்பெற்றது.*

சுசீந்திரம்: *தாணுமாலய சுவாமி கோயிலில் 20, 21, 22—12—61 தேதிகளில் தேவார இன்னிசை விழா நடைபெற்றது.*

சேலம்: *சுகவனேசுவர சுவாமி கோயிலில் ஆருத்ரா தரிசன விழா 23—12—61-ல் நடைபெற்றது.*

நிலக்கோட்டை: *நவநீதகிருஷ்ணசுவாமி கோயிலில் இராபத்து விழா 18—12—61 முதல் 27—12—61 வரை நடைபெற்றது.*

ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

[திரு. K. பட்சிராஜன், B.A. B.L., திருநெல்வேலி]

ஸ்ரீமந் நாதமுனிகள்

தெருளுற்ற ஆழ்வார்கள் சீர்மை அறிவார் ஆர்?
அருளிச் செயலை அறிவார் ஆர்?—அருள்பெற்ற
நாதமுனி முதலாம் நம் தேசிகரை யல்லால்
பேதை மனமே உண்டோ பேசு.

ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் எப்படிப் பலவித தீய சக்திகள் காரணமாக மறைந்தன என முன்னே ஒருவாறு பார்த்தோ மல்லவா? இப்படியே பல வருடங்கள் ஓடி மறைந்தன.

இற்றைக்குச் சற்றேறக்குறைய ஆயிரத்து இருநூறாண்டுகளுக்குமுன் தமிழ்க் காவலனை திருவேங்கடக் குன்றில் நெடியோனைத் தமிழ் முனிவர் அடிபணிந்து, வேதங்கள் பறியுண்டுபோக அதன் பலனை உலகை அஞ்ஞான இருள் சூழ்ந்தமை கண்டு கதறிய பிரமனைப்போல, தமிழ்வேதங்கள் மறைந்தமைபற்றிப் பெருங் கவலையோடு கதறினர். வடவேங்கடவனும் கும்பமுனி முன்பு தோன்றி "அஞ்சன்மின் அகத்தியரே, நாமல்லவா அதைக் காத்துவருகிறோம். நம் அந்தரங்க பக்தரொருவர் ஈச்வரபட்டாழ்வார் என்பவர் வீர நாராயணபுரம் என்னும் க்ஷேத்திரத்திலே வாழ்கிறார். அவருக்கு நமது அமிசபூதரொருவர் திருக்குமாரராகப் பிறப்பார். அவர் மூலமாக திராவிட வேதங்கள் மீண்டும் வெளிவந்து ஒளிவீசும். அக் குமாரருக்கு நீரே ஆசிரியராக இருந்து வேண்டியன கற்பியும்" என்று அபயப்பிரதானம் செய்தான். பெருமாள் திருவாக்குப் பெற்ற அகத்தியர் அகம் மகிழ்ந்து ஆடிப் பாடினர். இந்த நற்செய்தியை அத்தவப் புதல்வரைப் பெறவிருக்கும் ஈச்வரபட்டாழ்வாரும் கேட்டு மகிழவேண்டும் என்ற அழகிய எண்ணம் அவருக்குண்டாயிற்று. வேங்கட வெற்பனை மீண்டும் வணங்கி நிறைவுற்ற உள்ளத்தராய்க் குறுமுனிவர் வேங்கடத்தினின்றும் புறப்பட்டு வீரநாராயணம் சென்று ஈச்வரபட்டாழ்வாரின் திருமாளிகை சேர்ந்தார். ஈச்வரபட்டாழ்வாரும் வியப்பும் உவகையும் எய்தியவராய் அவரை வரவேற்று உபசரித்துக் குசலம் வினவினர். அகத்தியர் நடந்தவற்றை எல்லாம் கூற ஆழ்வாரும் மிகவும் மகிழ்வெய்தி அகத்தியரை நோக்கி "தேவரீர் குறை தீர்க்கவே அடியேன் குறையையும் தீர்க்க எம்பெருமான் திருவுள்ளம் கொண்டருளினர். தேவரீருக்கு என்ன கைம்மாறுடையேன்!" என்று அகத்தியரை அடிபணிந்தார். அகத்தியரும் ஈச்வரபட்டாழ்வாரை ஆசீர்வதித்து விடைகொண்டு புத்திரன் பிறந்ததும் தமக்கறிவிக்குமாறு கூறிப் பொதிகை சென்றார்.

சிலகாலம் சென்றவாறே ஈச்வரபட்டாழ்வாரின் தேவியாரிடம் கருச்சின்னங்கள் தோன்றின. காலம் வாய்த்தவாறே அவ்வம்மையாரும் ஒரு சோபக்ருது வருடம் ஆனி மாதம் வளர்பிறை பதிமூன்றும் நாள் புதன் கிழமை அநுடநாள் கூடிய நன்னாளில் சுப ஓரையிலே ஒரு அழகிய ஆண் மகவை ஈன்றெடுத்தாள். ஈச்வரபட்டரும் திருவருளை வியந்து அந்நற்செய்தியைக் கும்பமுனிவருக்குச் சொல்லி அனுப்பினர். குடமுனியும் அகமகிழ்வுடனே வீரநாராயணபுரம் எழுந்தருளி குழந்தையைக் குளிரக் கடாக்ஷித்து, நாதன் அருள்கொண்டு பிறந்த குழவி என்று உணர்ந்தவராதலின், உரிய நாளிலே அதற்கு நாதமுனி என்று திருநாமம் சாத்தி அவ்வூரிலேயே தங்கி அக் குழந்தைக்கு அவ்வக்காலங்களில் செய்யவேண்டிய ஸம்ஸ்காரங்கள் யாவற்றையும் தானே முன்னின்று நடத்தி வைத்தார். உபநயனம் ஆனவாறே அந்நாதமுனிக்கு அகத்தியர் தாமே ஆசிரியனாகி இருந்து சகல வேதங்களையும் கலைகளையும் பயிற்றுவித்து; அட்டமாசித்தியிலும் அட்டாங்க யோகத்திலும் அவரை வல்லராக்கினர். ஒருநாள் அகத்தியர் நாதமுனியைத் தனியே அழைத்து தமக்கும் வேங்கடவனுக்கும் இடையே நிகழ்ந்த நிகழ்ச்சியை முற்றும் கூறி எம்பெருமான் திருவுள்ளம் ஈடேறும் நாளை விரைவிலே எதிர்பார்ப்பதாகச் சொல்லி நாதமுனியை ஆசீர்வதித்துப் போனர்.

ஈச்வரபட்டாழ்வாரும் நாதமுனியும் வீரநாராயணபுரத்தில் கோயில் கொண்

டுள்ள ஸ்ரீமன்னனாரைத் தினமும் தொழுது, ஆன கைங்கர்யங்கள் செய்துகொண்டு வாழ்ந்து வந்தனர். அப்பால் சில ஆண்டுகள் செல்ல இருவரும் குடும்பத்தோடே வடநாடு போக எண்ணி மன்னனாரிடத்திலே அநுமதி பெற்றுப் பிரயாணமானார்கள். தந்தையும் புதல்வரும் வடதிசை வதரி, சாளக்கிராமம், முதலிய திருப்பதிகளை எல்லாம் ஸேவித்துக் கொண்டு கோவர்த்தன க்ஷேத்திரம் வந்து அந்தத் தலத்தின் அழகை அனுபவித்துக் கொண்டு அங்கேயே தங்கியிருந்தனர்.

ஒருநாள் இரவு துயில்கையிலே நாத முனிகள் தம்முன்பே மன்னனார் தோன்றி "நீவிர் வீரநாராயண புரத்துக்கே மீள வர லாகாதா?" என்று கேட்டதாகக் கனாக்கண் டார். பெருமான் திருக்குறிப்பு அதுபோலும் என்று நிச்சயித்தவராய் நாதமுனிகள் அக் கனவைத் தம் திருத்தகப்பனாரிடம் விண்ணப் பிக்க அவரும் அதனைப் பகவானது ஆணையா கவே கருதினார். அதன் பயனாக அவர்கள் கோவர்த்தனத்தினின்றும் புறப்பட்டு இடையே பற்பல திவ்விய தேசங்களிலும் உள்ள எம்பெருமான்களை ஸேவித்துக் கொண்டு வீரநாராயணபுரம் சேர்ந்து பெரு மாளுக்கு நந்தவனம் திருவிளக்கு முதலிய கைங்கர்யங்களைச் செய்து வந்தனர்.

நாதமுனிகளுக்கு இயல்பிலேயே கானத் தில் பற்று மிக்கிருந்தமையின் அவர் பெரு மாள் புகழைப் பண்ணோடிசைத்து, யாழொடு கூட்டித் தாளத்தில் லயிக்கப்பண்ணி இறை வனை மகிழ்வித்துத் தானும் உளமகிழ்வெய் தலையே பொழுது போக்காகக் கொண்டு வாழ்ந்தார். இறையருளால் பிறந்தவராத லின் அவருடைய இசையே தேவகானமாகத் திகழ்ந்தது. ஒருநாள் நாதமுனி தானும் பெருமானும் நாதமும் ஒன்றாய் லயித்திருந்த காலத்தே அவ்வூருக்கு மேலைநாட்டிலிருந்து எழுந்தருளின சில ஸ்ரீவைஷ்ணவர்கள் பெரு மாள் திருமுன்பே ஒலக்கமாக நின்று

"ஆரா அமுதே அடியேன் உடலம்
நின்பால் அன்பாயே
நீராய் அலைந்து கரைய
உருக்குகின்ற நெடுமாலே
சீரார் செந்நெல் கவரிவீசும்
செழுநீர்த் திருக்குடந்தை
ஏரார் கோலம் திகழக் கிடந்தாய்
கண்டேன் எம்மானே!"

என்று தொடங்கி நம்மாழ்வார் திருக் குடந்தை எம்பெருமான் விஷயமாகப்பாடிய திருவாய்மொழி (பதிகம்) பத்துப் பாடல் களையும் இயலாக ஸேவித்தார்கள். அவ் விடத்தருகே பண்ணிசைத்திருந்த நாத முனிகள் தன் பண்ணை நிறுத்தி அந்தப் பாடல்களைச் செவிகளார மடுத்து அவற்றின் பொருளிலே தம்மை மறந்து கண்மூடி ஈடு பட்டு நின்றார். இறுதியில் அவ்வைண வர்கள்

"உழலை அன்பில் பேய்ச்சி முலையொடு
அவளை உயிர்உண்டான்
கழல்கள் அவையே சரணாகக்கொண்ட
குருகூர்ச் சடகோபன்
குழலில் மலியச்சொன்ன ஓர்
ஆயிரத்துள் இப்பத்தும்
மழலை தீரவல்லார் காமர்
மானேய் நோக்கியர்க்கே"

என்று முடித்தனர். நாதமுனிகள் கண் திறந்தார். "ஆம். குழலில் மலியச்சொன்ன பாடல்களே!" என்று ரஸித்தார். வைண வர்கள் அப்பாட்டை மீண்டும் ஸேவித் தார்கள். நாதமுனிகளின் மனம் "ஓராயிரத் துள் இப்பத்தும்" என்றதில் நின்றது. அவ் வைணவர்களின் திருவடிகளிலே வணங்கினார். "பெரியீர்! ஒரு விண்ணப்பம். இப்போது சொன்ன பாடலிலே ஓராயிரத்துள் இப்பத் தும் என்றீர்களே. அவ்வாயிரம் பாடல் களும் உங்களுக்குத் தெரியுமோ? ஏடுகளா வது உளவா. அடியேன் ஆர்வத்தின்பேரி லேயே கேட்கிறேன்" என்று விண்ணப்பித் தார். அவர்கள் "ஆயிரமும் தெரியாது. இப் பத்துப்பாடல்கள் மட்டுமே தெரியும். ஏடுகள் எதுவும் இல்லை" என்றார்கள். நாத முனிகள் "தெரிந்தவர்கள் எவரேனும் உண்டா. இருப்பின் அவர் வாசம் செய்யும் இடமாவது கூறியருளினால் போதும்" என்று கூற அவ்வைணவர்கள் அறியோம் என்று கை விரித்தார்கள். நாதமுனிகளுக்கு உள் ளத்திலே ஒரே கிளர்ச்சிமயம். வைணவர் போய்விட்டனர். நாதமுனிகளே "ஓராயிரத் துள் இப்பத்து" என்றே உச்சரித்து "ஆகா இப்படி ஆயிரம் பாடல்களா! இவற்றை எப் படியாவது பெறவேண்டும் என்று உறுதி பூண்டார். எப்படி? எங்கே பெறுவது? மீண்டும் மீண்டும் பாடல்களைச் சொல்லிப் பார்க்கிறார். "குருகூர்ச்சடகோபன்........

சொன்ன" குருகூர்! குருகூர்! சரி! ஊரின் பெயர் கிடைத்தது. இனி பெற்றே தீர்வது என்று முடிவுசெய்து கொண்டார்.

தமிழ்கூறு நல்லுலகத்தே கேட்டுத் தேடிக்கொண்டே நாதமுனிகள் குருகூர் வந்தார். அங்கே கோயிலிலே பொலிந்து நின்ற பிரானையும், திருப்புளியின் கீழ்ப் பொலிந்து தோன்றிய நம்மாழ்வாரையும் ஸேவித்தார். ஸ்ரீ சடகோபர் அருளிய திருவாய்மொழி ஆயிரமும் அறிந்தாருண்டா என்று வினவினார். ஒருவரும் கிடைக்கவில்லை. ஸ்ரீ கோசங்களாவது (ஏடுகளாவது) கிடைக்குமா என்று பலரைக் கேட்டார். ஒருவரும் அறிகிலர். கடைசியாக ஸ்ரீ சடகோப சிஷ்யரான ஸ்ரீ மதுரகவியாழ்வாருடைய சிஷ்ய பரம்பரையில் வந்தவரான ஸ்ரீ பராங்குசதாசர் என்ற ஸ்வாமியைக்கிட்டி "ஸ்வாமீ! இங்கு திராவிடவேத ஸ்ரீகோசங்கள் கிடைக்குமா?" என்று கேட்டார். அவர் நாதமுனியின் ஆர்வத்திலே ஈடுபட்டு "இல்லை ஸ்வாமீ! ஸ்ரீ பராங்குசர் விஷயமாக ஸ்ரீ மதுரகவிகள் பாடிய "கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்ற பதிகம் மட்டுமே கிடைக்கும். மற்றவை மறைந்துபோயின. இப்பதிகத்தை ஆழ்வார் ஸன்னிதியிலே பன்னீராயிரம் உரு ஒருமனப்பட்டு ஓதினால் ஆழ்வார் பிரஸன்னராகித் திருவாய்மொழி மட்டுமென்ன தமிழ் வேதங்கள் அனைத்துமே அருளுவார் என்று அடியேனுடைய ஆசாரியர் அடியேனுக்குக் கூறியிருக்கிறார்" என்று பதில் உரைத்தார். நாதமுனிகள் 'நல்லது. ஒரு வழியாவது கிட்டியதே' என்று மிக்க மகிழ்வெய்தியவராய் பராங்குசதாசரைத் தெண்டனிட்டு வணங்கி 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' பதிகச் சுவடி ஒன்று பிரதி செய்து மனனம் செய்து கொண்டு, ஒரே திடநம்பிக்கையோடு அப்பதிகத்தை ஸ்ரீ சடகோபர் திருமுன்பே பன்னீராயிரம் உரு ஓதி நம்மாழ்வாரை மனத்திருத்தித் தியானித்திருந்தார். இவருடைய ஆர்வத்தின் மிகுதியைக் கண்டு வியந்த ஸ்ரீ பெரிய பிராட்டியார் தம்முன்பே திருவோலக்கத்தில் எழுந்தருளியிருந்த நம்மாழ்வாரை அருகழைத்து நம் மைந்தன் ஒருவன் உம்மை வேண்டி நிற்கிறானே போம். போய் அவனுக்கு வேண்டியதை முடித்துவாரும் என்று திருவாய்மலர்ந் தருளினாள். சடகோபரும் உலக மாதாவின் அருளை ஏற்று அசரீரியாக நாதமுனிகளின் முன்பே எழுந்தருளி "நாதமுனிகளே! எதற்கு இவ்வளவு பிரயாசமும்" என்று கேட்க நாதமுனிகள் கண்விழித்து நேரே ஆழ்வார் ஊனக்கண்முன்பு தென்படாமையால் அசரீரி வந்த திசைநோக்கி சாஷ்டாங்கமாகத் தெண்டன் ஸமர்ப்பித்து கண்களில் நீர் பெருகக் கூப்பிய கையராய் "சுவாமீ. திராவிட வேதங்கள் அகங்காரிகளின் சூழ்ச்சியால் மறைந்துபோயினவே. உலகம் உய்ய அவற்றை மீண்டும் பிரகாசிப்பித்தருளவேண்டும்" என்று வேண்டினார். ஆழ்வாரும் இசைந்து உமது கோரிக்கையைப் பூர்த்தி செய்யவே பிராட்டியார் திருவருளால் யாம் வந்தோம் உமக்கும் நமக்கும் இடையே ஒரு பட்டுத்திரை இடுவியும். நாம் இங்கிருந்து சொல்கிறோம். நீர் பட்டோலை கொள்ளும் என்று அருளினார். நாதமுனிகள் உள்ளமும் உடலமும் பூரித்தவராய் அவ்விதமே எழில்மிக்கதோர் பட்டு எழினியை இடையே இடுவித்து ஏடும் எழுத்தாணியும் கொண்டு ஆழ்வாரை நோக்கி சுவாமீ! அடியேன் ஸன்னத்தனானேன் என்று விண்ணப்பிக்க மாறனும் திராவிட வேதங்களனைத்தையும் தம் திருவாக்கால் திருவாய்மலர்ந்தருள நாதமுனியும் உவகை தேக்கும் கண்ணும் மனமும் உடையராய் அவை அனைத்தையும் ஸ்ரீ கோசங்களிலே (ஏடுகளிலே) எழுந்தருளப் பண்ணினார். ஆழ்வார் முடித்தவாறே ஸ்ரீகோசங்களுக்கும் ஆழ்வாருக்கும் அஞ்சலிபண்ணி சடகோபரே தேவரீர் அருளிய திருவாய்மொழியிலே

"பொலிக! பொலிக!! பொலிக!!!
போயிற்று வல்லுயிர்ச் சாபம்
நலியும் நரகமும் நைந்த!
நமனுக்கு இங்குயாதொன்றும் இல்லை.
கலியும் கெடும்! கண்டுகொண்மின்.
கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்
மலியப் புகுந்து இசைபாடி
ஆடி உழிதரக் கண்டோம்"

என்று அருளியிருக்கிறதே. இங்கே திராவிட வேதம் மறைந்தல்லவா கிடக்கிறது. தேவரீர் தீர்க்கதரிசியாயிற்றே. தேவரீர் திருவுளக் கண்களிலே கண்ட காட்சி உருவாகும் காலம் எதுவோ? என்று வினவினார். ஆழ்வாரும் "நாதமுனிகளே! உம்முடைய

ரஸனையை மெச்சினோம். அகங்காரிகளின் சூழ்ச்சியால் திராவிட வேதம் மறைக்கப்பட்டது உண்மையே. அவர்களது மாயவேடம் கலைக்கப்படும் நாளும் அணித்தாயிற்று. அந்த நன்னாளுக்கு முன்னோடியாகவே தேவரீருக்கு இவ்வார்வம் பிறந்தது- பெரிய பிராட்டியாரின் புருஷகாரமும் கிட்டியது. திராவிட வேதம் தேவரீர் மூலமாக உலகில் ஒளிவீசத் தொடங்கிவிட்டது. சமீபத்தில் இராமாநுஜர் என்றொரு பிரபன்னர் ஆதிசேஷ அம்சமாக அவதரிக்கப்போகிறார். அவரால் நாடடங்க நாரணற்காளாகும்வழி பிறக்கும்'' என்று அருளினார். நாதமுனிகள் 'சுவாமீ! அப்படி அவதரிப்பவரை எப்படி உலகோர் தெரிவது. அவரது வடிவை ஓரளவாவது தேவரீர் வாய்மொழியால் அடையாளம் கூறினால் நலமன்றோ? என்று வினவ ஆழ்வாரும் மகிழ்வெய்தி 'நீர் விடாக்கண்டர். சரி கேளும் இன்று இரவு கனவிலே அவரது திருவுருவம் உமக்குத் தோன்றும். அவரை ஸேவித்து நாளை வாரும்' என்று கூறினார்.

அன்றிரவில் நாதமுனிகள் அயர்ந்த தூக்கத்தே இருக்கையில் அவர் கண்முன்னே ஓரே சோதிப்பிழம்பு ஒளிவிட முனிகளும் கண்விழித்துப் பார்க்கையில் "கேசவாதி பன்னிரு திருமண் காப்புகள் தரித்த வடிவும், தேஜஸ் ஒளிவிடும் முகமும். நீண்டபெரிய கருணை அலையெறியும் திருக்கண்களும், இளமுறுவல் தவழும் செய்ய திருவாயும், முழந்தாளளவும் தாழ்ந்த தடக்கைகளும், காவி ஆடை சுற்றிய திருவரையும், கையிலே முக்கோலுமாக ஒரு திவ்விய திருமேனி காட்சியளிக்க நாதமுனிகளும் அவ்விக்கிரகத்தை அப்படியே மனத்திருத்தி வணங்கிக் கண் விழிக்கையில் அவ்வுருவம் மறைந்துவிட்டது. முனிகள் மிகவும் பூரித்த திருவுள்ளத்தராய் அந்தத் திருவுருவையே தியானித்துக் கொண்டு இரவைக்கழித்து விடிந்தவாறே தம் கடன்களை முடித்து ஆழ்வார் திருமுன்பே சென்று "சுவாமீ! இனி வரப்போகும் அவதார விக்கிரகத்தை ஸேவித்தேன். அதை அடியேன் நித்தியமாகக் கண்டு ஸேவிக்க வழியருளவேண்டும். மேலும் அவ்வவதார காலம் அடியேன் வாழ்நாளிலேயே ஏற்படாது போமாயின் பின்புள்ளார் அவ் வியக்தியை இனம் கண்டுகொள்ள இயலாதே. தேவரீர்தான் இக்குறைவு நிறைவுறக் க்ருபை செய்யவேணும்'' என்று வேண்டி வணங்கி விழுந்து கிடந்தார். ஆழ்வாரும் இவருடைய ஊக்கமிகுதியைப் போர உவந்து கணிசித்து "நாதமுனிகளே! அதற்கும் வழிசெய்வோம் எழுந்திரும்" என்று கூற நாதமுனிகளும் எழுந்து திருமாளிகை ஏறப்போனார். அன்றிரவே ஆழ்வாரும் அவ்வூர்ச் சிற்பிகள் கனவிலே தோன்றி ராமாநுஜர் திருவுருவின் இலக்கணங்களை உணர்த்தி அவ்விலக்கணங்களோடு கூடிய விக்கிரகமொன்றை தம் திருப்புளி நிழலிலே இருந்து அமைக்கும்படி அவர்களுக்குக் கூறி மறைந்தார். மறுநாள் காலை நாதமுனிகள் ஆழ்வார் ஸன்னிதிக்கு எழுந்தருளுகையில் திருப்புளியடியிலே சிற்பிகள் ஏதோ தொழிலில் ஈடுபட்டிருக்கக்கண்டு அவர்களிடம் சென்று வினவ அவர்களும் தங்களுக்கு ஆழ்வார் கனவில் கூறிய கட்டளையை வெளியிட நாதமுனிகளும் ஆழ்வார் திருவருளை வியந்து வழிபட்டிருந்தார். சிற்பிகளும் இரவுபகலாக உழைத்து ஆழ்வார் தங்களுக்குக் கனவில் அருளிய இலக்கணங்கள் ஒன்றும் குறையாதவாறு ஒரு விக்கிரகத்தைச் சமைத்துக் கொடுத்தனர். ஆழ்வார் நாதமுனிகளை அழைத்து, அவ்விக்கிரகத்திலே ஒரு சக்தி விசேஷத்தை அதிஷ்டிப்பித்து நாதமுனிகளைக் கடாக்ஷித்து "நாதமுனிகளே! உம்முடைய வேண்டுகோளை நிறைவேற்றிவிட்டோம். இவ்விக்கிரகத்தை நம் தர்சனத்துக்காக அடியிட்டு வைத்தோம். அதனால் இதனை நம்முடைய அவயவமாகவே உளங்கொள்ளும் உம்முடைய குலத்தில் ஒருவர் அவதரித்து இந்த விக்கிரகத்தின் வடிவை நேரே கண்கூடாகக் காண்பார்'' என்று கூறியருளினார். நாதமுனிகளும் தன் பெருப் பேற்றுக்கு மகிழ்வெய்தி பொலிந்து நின்ற பிரான் திருவருவருளையும், பெரிய பிராட்டியாரின் தாயன்மையும், ஆழ்வாருடைய எல்லையற்ற கருணையையும் வியந்து திருநகரியிலேயே தங்கி, பெருமாளையும் ஆழ்வாரையும் நாடோறும் ஸேவித்து நித்தியவாசம் செய்துகொண்டிருந்தார்.

(தொடரும்)

சைவ சமய அறிமுகம்

[தவத்திரு. மாணிக்கவாசக ஞானதேசிக சுவாமிகள், மேலையூர்]

நான்கு தூண்களால் தாங்கப்பெறும் ஒரு மண்டபம் போன்றது சமயம். அவை நான்கனுள் ஏதாவது ஒரு அங்கம் குறைந்தாலும் அது முழுத்தன்மையுடைய சமயம் ஆகாது. இனி அந்நான்கு தூண்களாவன:–

1. தத்துவ ஆய்வு (மெய்ப்பொருள் ஆராய்ச்சி)

2. முத்தி நிலை (ஆன்மா அடைய வேண்டிய உயர்நிலை)

3. முத்தியடைதற்குரிய மார்க்கங்கள்

4. அம்மார்க்கங்களில் நின்று உண்மையை நிரூபித்துக்காட்டிய தலைவர்கள்.

இவை நான்கும் செம்மையாகப் பொருந்திய சமயக்கொள்கைதான் உலக மாறுதலுக்கு ஈடுகொடுத்து உயிர்ப்போடு நின்று ஆன்மகோடிகளுக்கு உதவ முடியும். இவற்றுள் சைவசமயக் கொள்கையின்படி தத்துவ ஆய்வு என்ற பகுதியை உலகம்-உயிர்-கடவுள் என்ற மூன்றுகப் பிரித்து இங்கே சிந்திப்போமாக.

1. அ. உலகம்

உலகம் உயிர் கடவுள் என்ற இம் முப்பொருள்களும் கலந்திருக்கும் கலப்பு நிலை மிகவும் நுண்மையானதாகவும் பல்லாயிரவரில் ஒருவர்கூட எளிதில் உணர முடியாததாகவும் இருத்தலால் சமயவாதிகள் பலரும் இங்கே மயங்கித் தத்தம் அனுபவத்திற்கெட்டியதே முடிந்த முடிபாக எண்ணிக் கொள்கையாக்கினர். ஐம்பெரும் பூதங்களுள் ஆகாயம் என்ற பூதத்தின் உண்மையை அறிய மாட்டாமையால் அதனை மறுத்து ஏனைய நான்கு பூதங்களை மட்டுமே ஏற்றுக்கொண்டனர் லோகாயதவாதிகள். நியூடன்கொண்ட கொள்கையான "ஈதர்" (Eather) என்ற சாதனம் மறுக்கப்பட்டுவிட்டமையால் விஞ்ஞானிகட்கும் இன்னும் ஆகாயம் என்ற தத்துவம் புலனாகவில்லை எனத்தோன்றுகிறது. தவிரவும் உலகமே சூனியம் எனவும் அநிர்வசனீயம் எனவும் பொய்த்தோற்றம் எனவும் பல்வேறு சிந்தனையாளர்கள் கூறிச்சென்றனர். இந்திய நாட்டில் வழங்கும் சமயக் கொள்கைகளில் பெரும்பாலானவை (பாஞ்சராத்ரம்-ஏகான்மவாதம் - சாங்க்யம்) இருபத்து நான்கு தத்துவங்களைத்தான் ஒப்புக் கொள்கின்றன. ஆனால் சைவசித்தாந்தமோ அவை இருபத்து நான்கையும் அப்படியே ஒத்துக்கொண்டு அவற்றின் மேலும் பன்னிரண்டு தத்துவங்கள் இப்பிரபஞ்ச வெளியைத் தாங்கி நடத்துகின்றன என நிரூபிக்கின்றது. காஷ்மீர சைவமும் சாக்தேயமும் சைவசித்தாந்தம் போலவே முப்பத்தாறு தத்துவங்களையும் பற்றிப் பேசுகின்றன. மாயா காரியமும் ஜடமுமான இப்பிரபஞ்ச வெளியே இன்னும் முற்றிலும் உணர முடியாத நிலையிலிருக்குமானால் இதைவிட நுணுக்கமான ஆன்ம உண்மையையோ அல்லது அதனின் நுணுக்கமான உண்மையையோ எல்லோரும் எளிதில் உணர முடியுமா? உலகம், உயிர், கடவுள் என்ற முப்பொருட் காட்சியில் சைவசித்தாந்தம் சென்ற அளவிற்கு இதுவரை வேறு எந்தச் சமயமும் செல்லவில்லை. தவிரவும் விஞ்ஞானிகளும்கூட தெய்வசத்தி ஒன்று உலகத்தை இயக்குகின்றது என்பதை டாக்டர் ஐன்ஸ்டின் தெளிவாக வற்புறுத்துகின்றார். தனது வாழ்நாள் முழுவதும் விஞ்ஞான ஆராய்ச்சி செய்ததன் பயனாக மனித வாழ்வின் நியதியைத் தெய்வசக்தி கண்காணித்து நடத்திவருவதைத்தான் உணர்ந்ததாக மில்லிசன் என்பவர் கூறுகின்றார். யுரேனியம் என்ற உலோகம் சிதைந்துகொண்டே வருதல்-வெளிமண்டல நட்சத்திரங்கள் மறைதல் இன்னோரன்ன நிகழ்ச்சிகளால் இப்பிரபஞ்ச வெளி ஒருகாலத்தில் அழிவுறும் என விஞ்ஞானிகள் உறுதியாக நம்புகின்றனர். உலகம் ஒருகாலத்தில் தோன்றியதே எனவும் யுரேனிய அணுக்கள் தோன்றிய காலமே உலகம் தோன்றிய காலமாக இருக்கவேண்டும் எனவும் விஞ்ஞானிகளே ஒப்புக்

கொள்கின்றனர். எனவே உலகத்தோற்றம் உலக அழிவு-தெய்வசத்தி முதலிய எல்லாம் விஞ்ஞானிகளாலும் ஒப்புக்கொள்ளப் பெறுகிறது.

1. ஆ. உயிர்

உலகம் ஜடமாதலால் உலகத்தால் உலகத்திற்கு ஒரு பயனுமில்லை. இறைவன் முற்றுணர்வும் முடிவிலாற்றலும் வரம்பிலின்பமும் உடையவனாதலால் அவனுக்கு உலகத்தால் ஆகற்பால தொன்றில்லை. அப்படியானால்உலகம் யாருக்காக இயங்குகின்றது? உலகத்தைப் பயன்படுத்திக்கொள்ளும் பொருள் எது? என்ற வினாக்கள் இயல்பாக எழுகின்றன. இவ்வினாக்கட்குச் சைவசித்தாந்தம் கூறும் பதில் இதுதான். ஜடப்பொருளான உலகமுமல்லாத பேரறிவே வடிவான இறைவனுமல்லாத மூன்றாவது பொருளான ஆன்மாவே உலகத்தைப் பயன்படுத்திக்கொள்வது. ஆன்மகோடிகளின் நன்மைக்காகத்தான் உலகம் இயங்குகின்றது. ஆன்மா உலகத்தைச் சார்ந்தால் உலகத்தையும் அனுபவிக்கும். இறைவனைச்சார்ந்தால் இறைவனையும் அனுபவிக்கும். இது ஆன்மாவின் இரட்டைத் தன்மையான நிலை. இனி லோகாயதவாதிகள் ஆன்மா என ஒரு பொருளே இல்லை. என்கின்றனர். A. J. நீடாம் என்ற பேரறிஞர் உயிர்ப் பொருள் பௌதிகக் கலவையினால் ஏற்பட்டதோ பௌதிகக் கலவையோ அல்ல. அஃது வேறுபொருளேஎனக்காரணங் காட்டி நிரூபிக்கிறார். எனவே ஆன்மஉண்மை விஞ்ஞானிகளாலும் ஒருவாறு ஒப்புக்கொள்ளப்படுகிறது என்பது புலனாகின்றது.

1. இ. கடவுள்

ஒருசாரார் நம்பிக்கைமாத்திரத்தாற் கடவுளை ஒப்புக்கொண்டு கடவுளுக்கு உருவம் இல்லை எனவும் கடவுள் அறியப் படாதவர் எனவும் கூறுகின்றனர். இவ்வாறு கூறுகின்றவர்கள் ஒருவாற்றானும் கடவுளைக் காணாதவர்களே. பிறிதொரு சாரார் கடவுளும் ஆன்மாவைப் போலவே பிறப்பு இறப்பு விருப்பு வெறுப்பு இன்பதுன்பங்கட் காளாதல் கூடும் எனவும் அஃது அவனது எளிவந்த தன்மையைக் காட்டுவது எனவும் சாதிக்கின்றனர். சர்வ வல்லமையும் உடைய இறைவன் அவதிக்கும் இகழ்ச்சிக்கும் ஆளாகாமலே எளிவந்த செயல்கள் செய்தல் கூடும் என்பதையும் முற்றுணர்வு முடிவிலாற்றல் வரம்பிலின்பம் முதலிய இறைமைக் குணங்கட்கு விரோதமாக ஒருநாளும் இறைவன் அவதியுறமாட்டான் என்பதையும் அவர்கள் சிந்தித்ததாகத் தெரியவில்லை. சைவசித்தாந்தத்தை அறிவுறுத்திய செந்நெறிச் செல்வர்கள் இறைவனை நேரே கண்டும் இறைவனாலேயே உணர்த்தப்பெற்றும் உண்மை யுணர்ந்தவர்களாதலால் அவர்கள் கூற்று மதியூகத்திற்கும் அனுபவத்திற்கும் ஒத்து வருகின்றது. அதாவது எல்லாவற்றையும் கடந்த நிலையும்—எல்லாவற்றிலும் கலந்த நிலையும்-மெய்யன்பர்கட்குக் காட்சிகொடுத்துத் தேற்றவும் ஐந்தொழில் நடாத்தவும் உருவத்திருமேனி கொள்ளும் நிலையும் என மூவகை நிலையும் இறைவனுக்கு உள என்பதாம். இறைவன் எடுக்கும் திருமேனி ஞானசரீரம் ஆகும். அது மாயையின் காரியமன்று. "பிறவாயாக்கைப் பெரியோன்" என்பது ஞானமேனியன் என்ற கருத்தைக்கொண்டது. உருவொடு தோன்றி நின்றாலும் எளிவந்து நின்று ஆன்மாக்கட்கு அனுக்கிரகஞ் செய்தாலும் ஒரு ஞான்றும் இறைவன் தனது எண் குணங்களுக்கு மாறுபட்ட நிலையை அடையமாட்டான் என்பதே சைவசமயச் சிறந்த கோட்பாடாகும். தவிரவும் இறைவன் சூரியனும் கிரகமும்போல சிவம் சத்தி என ஒருமையில் இருமையாயிருப்பன். சிவசத்தியே எங்கும் நிரம்பி எல்லாவற்றையும் இயக்குவதாகும்.

2. முத்தி நிலை

ஆன்மா அடையவேண்டிய உயர்ந்த நிலையாகிய பேரின்ப வாழ்வினைத்தான் முத்தி எனத் தத்துவ நூல்கள் கூறுகின்றன. ஆன்ம வளர்ச்சி மனித உடம்பைப் பெறுவதோடு முடிந்துவிடவில்லை. மனித உடம்பைச் சாதனமாகக்கொண்டு ஆன்மா ஆண்டவன் திருவருளிற் கலந்து பூர்ண நிலையை அடையவேண்டும் என்பது சைவசமய முடிபு. பௌதிக வளர்ச்சி மனித உடம்போடு முடிந்துவிட்டதாக அறிஞர்கள் ஒப்புக்கொள்கின்றனர். அப்படியானால் மனிதன் இவ்வுடம்பிற் கலந்து நின்று ஆடிப்பாடி ஓய்ந்து மாய்ந்துவிடத்தானா பிறந்தான் என்ற கேள்வி எழுகின்றது. மனித வாழ்வின் மேம்பட்டதோர் அமரவாழ்வு நிச்சயம் உண்டென்பதை உலக ஆரவாரங்களின் நீங்

இத்தெளிந்த சிந்தனையாளர் அனைவரும் ஒப் புக்கொள்ளுகின்றனர். அத்தகைய அமர வாழ்வைப் பெறவேண்டும் என்ற உள் ளுணர்வு எல்லா ஆன்மாக்களுடைய உள் ளத்திலும் அடித்தளத்தில் இருக்கத்தான் செய்கிறது. உலக சுகபோகங்களால் ஆன்மா சாந்தி அடையவில்லை என்பதைப் பல்வேறு நாட்டில் பல்வேறு காலத்தில் தோன்றிய அறிஞர்கள் பலரும் ஒருமுகமாக ஒப்புக் கொள்கின்றனர். செல்வத் துறையிலும் கலைத்துறையிலும் சிறப்புற்றுப் பெரும்புக ழோடு விளங்கிய டால்ஸ்டாய் தனது ஐம்ப தாவது வயதில் உலகவாழ்வின் இன்பங்களில் லெல்லாம் அமைதி காணாது ஆன்மீகத்துறை ஒன்றே உறுதியான அமைதியைத் தருவ தைக் கண்டு உணர்ந்தார். புலனுகர்ச் சியின்றியே வரும் இன்பந்தான் நிரந் தரமான அமைதியைத்தரும் இன்ப மாகும். ஆன்மசாந்தி என்பது அப்போது தான் மலரும். அங்கிலை இறைவனருளைப் பெற்றாலல்லது கைகூடாதென்பதும் ஒரு தலை. எனவே இறைவனிடத்துச் செய்யும் பேரன்புதான் அகத்தே ஞானவாழ்வை மல ரச்செய்து இன்பதுன்பங்களிற் சமநிலையை அனுபவமாக்கிப் பேரானந்தத்திற்றிளைக்கச் செய்யும் வல்லமை சான்றது. இவ்வாறு உடம்போடு கூடித்திளைக்கும் வாழ்வினைச் சீவன்—முத்திநிலை எனவும் உடம்பினீங்கி ஆன்மா இறைவெளியிற் கலந்து திளைக்கும் நிலையைப் பரமுத்தி நிலை எனவும் சைவசித் தாந்த நூல்கள் கூறும்.

3. முத்தியமைதற்குரிய மார்க்கங்கள்

முத்தி என்பது வீடுபேறு ஆகும். விடுதலும் பெறுதலும் என இச்சொற் றொடரை இரண்டாகப் பிரித்துப் பொருள் காண்பர் ஆன்றோர். இங்கே விடுதல் என்பது உலகப்பற்றினை; பெறுதல் என்பது இறை வன் திருவருளை.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்ற திருக்குறட் கருத்தும் இதுவே சரியை கிரியை யோகம் என்ற மாமுறையில் நின் றால் அதன் பயனாக ஞானம் விளையும். ஞானமே வீடுபேற்றினைத்தரவல்லது. தானி யம் விளைவதற்காக உழுதொழிலைச் செய் கின்றோமேதவிர உழவுத்தொழிலுக்காக உழு தலைச் செய்யவில்லை. அதுபோலவே ஞானம் விளைவதற்காகச் சரியை கிரியா யோகங் களைப் பயிலவேண்டுமே தவிர வெறும் கிரி யைக்காகவோ பிறரை மருட்டவோ கிரியை களை மேற்கொள்ளலாகாது. கிரியையின்றி நம்மனோர்க்கு ஞானம் விளையாது. ஞானத்தை நோக்காது செய்யும் கிரியையும் வித்திடாது செய்யும் உழவு தொழிலைப் போன்றதாகும்.

"ஞானத்தை நாடித் தொழவே அதுநிகழும்
ஆனத்தால் அன்பிற் றெழு"

எனவும்,

"கிரியையென மருவுமனு யாவும்ஞானம்
கிடைத்தற்கு நிமித்தமெனக் கிளக்கும் நூல்கள்"

எனவும் சித்தாந்த நூல்கள் கூறுகின்றன. இவறுள் சரியை என்பது சிவாலயத்திற்கும் சிவஞானிகட்கும் இயன்ற பணி செய்து வழி படுதலாம். கிரியை என்பது சிவபெருமானைப் பூசனை முறையில் தூப தீபம் கொடுத்து வழி பாடு செய்தல். யோகம் என்பது தாரணை தியானம் சமாதிமுறையில் பயின்று தூல உடம்பினீங்கிச் சூக்கும உடலோடு இறை வன் திருவருளிற் சென்று கலத்தல் இன்னோ ரன்ன நெறிகளில் நின்று திருவருளுண் மையை நிரூபித்துக்காட்டிய மெய்யன்பர் களின் வரலாற்றுக் கருவூலமே பெரிய புராணமாகும்.

4. சமயத்தலைவர்கள்

பூதசக்திக்கும் மனித சக்திக்கும் மேற் பட்ட தெய்வசக்தியின் தொடர்போ துணையோ இல்லாமல் மனிதன் உயர்நிலையை அடைய முடியாதென்பது ஒருதலை. அத்த கைய தெய்வ சக்தியுடன் நம்மைத் தொடர்பு படுத்திவிட அமைந்தனவே சமயங்கள் அனைத்தும் அப்படியாயின் சமயங்களின் தலைவர்கள் சந்தேகத்திற்கிடமின்றி அந்தப் பேராற்றலைக் கண்டவர்களாக இருத்தல் வேண்டும். அவர்களே காணவில்லையாயின் நம்மனோர்க்குக் காட்டவோ நம்மை ஊக்கு விக்கவோ அவர்களால் முடியுமா? அற்புத தெய்வசத்தி அடிக்கடி நிரூபிக்கப்படவேண் டும் என்பதை மேனாட்டு நல்லறிஞர்களும் ஒப்புக்கொள்ளுகின்றனர் Man the Unknown என்ற நூலின் ஆசிரியர்,

(தொடர்ச்சி 216-ஆம் பக்கம் பார்க்க)

சென்ற மூன்று ஆண்டுகளில் வெளிவந்த கட்டுரைகளின் தலைப்புக்கள்

1958 அக்டோபர் திங்கள் முதல் 1959 செப்டம்பர் திங்கள் வரை

முதல் ஆண்டு

1958 அக்டோபர் திங்கள்—

1. வாழ்த்துச் செய்திகள்
2. திருக்கோயில்
3. சைவம்
4. வைணவம்
5. சிதம்பரம்
6. திருவரங்கம்
7. பழனி
8. கன்னியாகுமரி
9. திருஞானசம்பந்தர்
10. நம்மாழ்வார்
11. காவிரி
12. திருக்குற்றாலக் காட்சி
13. அருணகிரிநாதர்

1958 நவம்பர் திங்கள்

1. கன்னியாகுமரி தேவஸ்வசிர்வாகம்
2. அறநிலையப்பாதுகாப்புத்துறை நிர்வாக அமைப்பு
3. சைவம் (தொடர்ச்சி)
4. வைணவம் (தொடர்ச்சி)
5. மதுரை
6. திருமாலிருஞ்சோலை
7. திருப்பரங்குன்றம்
8. மீனாட்சியம்மை
9. திருநாவுக்கரசர்
10. திருமங்கையாழ்வார்
11. திலகவதியார் சித்தவைத்திய ஆராய்ச்சி நிலையம்
12. நவராத்திரி விழா
13. கோயில் திருப்பணிகள்

1958 டிசம்பர் திங்கள்—

1. திருக்கோயில்களும் உருவவழிபாடும்
2. சைவம் (தொடர்ச்சி)
3. வைணவம் (,,)
4. காஞ்சிபுரம்
5. குமரகோட்டம்
6. காமாட்சியம்மை
7. சுந்தரர்
8. பெரியாழ்வார்
9. செய்திகள்
10. கோயிலைப் புதுப்பிக்கும் நேர்முறை
11. நாதசுவர வகுப்பு
12. விநாயகப் பிரபாவம்
13. ஆகம வகுப்புக்கள்
14. கந்தர்சஷ்டி
15. நக்கீரர்
16. சுற்றறிக்கை

1958 சனவரி திங்கள்—

1. இருபாவைகள்
2. சைவம்
3. வைணவம்
4. ஸ்ரீவிஷ்வக்ஸேனர்
5. ஆனந்தக்கூத்து
6. அறிதுயில் அமர்ந்த கருணைமாமுகில்
7. இராமேசுவரம்
8. ஸ்ரீவில்லிபுத்தூர்
9. மாணிக்காவசகர்
10. ஆண்டாள்
11. திருச்செந்தூர்
12. காசிகண்ட குமரகுருபர அடிகள்
13. திருநெல்வேலி
14. திருக்கார்த்திகை
15. வைகுண்ட ஏகாதசி
16. திருவாதிரை
17. தாம்பிரபரணி
18. கலைவளர்ச்சி ஆலோசனைக்குழு
19. அறநிலையங்களில் பால் பண்ணைகள்.

1959 பிப்வரி திங்கள்—

1. ஆலயம்
2. சைவம்
3. திருவாரூர்
4. திருக்குடந்தை
5. திருஏரகம்
6. காரைக்காலம்மையார்
7. அறநிலையங்களில் பால்பண்ணைகள்
8. முதலாழ்வார் மூவர்
9. பாவை மாநாடுகள்
10. இராமலிங்க அடிகள்
11. மார்ஷல் டிட்டோவின் தலயாத்திரை
12. சிவ விஷ்ணுத்தல அட்டவனை

1959 மார்ச்சு திங்கள்—

1. ஆலய அமைப்பு
2. சைவம்
3. கண்ணன் அவதாரமும் திருவுருவமும்
4. திருவண்ணமலை
5. குலசேகராழ்வார்
6. வானமாமலை
7. திருஎவ்வளூரர்
8. திருச்செங்கோடு
9. சேரமான் பெருமாள் நாயனார்
10. மகா சிவராத்திரி
11. செய்திகள்
12. சிவவிஷ்ணுத்தல அட்டவனை

1959 ஏப்ரல் திங்கள்—

1. ஆலயங்கள்
2. சைவம்
3. சிதம்பரசுவாமிகள்
4. ஆழ்வார்கள்பாடிய திருக்கோயில்கள்
5. திருமயிலை
6. திருஅல்லிக்கேணி
7. திருமூலர்
8. திருமழிசை ஆழ்வார்
9. திருத்தணி
10. முருகன்
11. ஸ்ரீராதாகிருஷ்ணன்
12. சிவவிஷ்ணுத்தல அட்டவனை

1959 மே திங்கள்

1. ஆலயங்கள்
2. சைவம்
3. ஆழ்வார்கள் பாடிய திருக்கோயில்கள்
4. தொண்டரடிப் பொடியாழ்வார்
5. சம்பந்தசரணாலயர்
6. திருப்போரூர்
7. விரதம்
8. திருப்பதிகம்
9. திருக்கடல் மல்லை
10. ஐயடிகள் காடவர்கோன் நாயனார்
11. திருக்கழுக் குன்றம்
12. பாலி நதி
13. சிவவிஷ்ணுத்தல அட்டவணை

1959 ஜூன் திங்கள்—

1. ஆலய அமைப்பு
2. சைவம்
3. திருப்பாணாழ்வார்
4. திருப்பாதிரிப்புலியூர்
5. அருளாளப் பெருமாள்
6. திருநாளைப்போவார்
7. மயிலம்
8. திருவயிந்திரபுரம்
9. திருநந்தி தேவர்
10. சிவலிங்கம்
11. சிவவிஷ்ணுத்தல அட்டவணை

1959 ஜூலை திங்கள்—

1. ஆலய அமைப்பு
2. திருப்புகலூர்
3. சைவம்
4. திருமலை
5. மச்சவடிவநெடுமால்
6. ஆழ்வார்கள் பாடிய திருக்கோயில்கள்
7. திருமுறைப் பெருமை
8. சீகாழி
9. திருப்புள்ளிருக்கு வேளூர்
10. அப்பூதியடிகள் நாயனார்
11. சிவவிஷ்ணுத்தல அட்டவணை

1959 ஆகஸ்ட் திங்கள்—

1. திருச்செந்தூர்க் கும்பாபிஷேகம்
2. சைவம்
3. திருச்சிராப்பள்ளி
4. குமாரவயலூர்
5. கூர்மாவதாரம்
6. உறையூர்
7. சண்டேசுர நாயனார்
8. மதுரகவியாழ்வார்
9. தாயுமானவர்.
10. தட்சிணாமூர்த்தி
11. சிவவிஷ்ணுத்தல அட்டவணை

1959 செப்டம்பர் திங்கள்—

1. ஸ்ரீலங்காயாத்திரை
2. விநாயகசதுர்த்தி
3. வராக அவதாரம்
4. தொகையடியார்
5. சைவம்
6. வைஷ்ணவம்
7. பிள்ளையார்பட்டி
8. மலைநாட்டுத்திருப்பதியநுபவம்
9. திருக்கோஷ்டியூர்
10. பகழிக்கூத்தர்
11. சிவவிஷ்ணுத்தல அட்டவணை

இரண்டாவது 1959 ஆண்டு அக்டோபர் திங்கள்—

1. ஸ்ரீலங்கா யாத்திரை
2. திருக்கோயில் பற்றிய சிறப்புரைகள்
3. சைவம்
4. வைஷ்ணவம்
5. குன்றக்குடி
6. விநதாசுத வாகனம்
7. சிங்கமாய தேவதேவன்
8. மலைநாட்டுத்திருப்பதியநுபவம்
9. பேரூர் ஆடவல்லானின் அருள்மேனி
10. திருநீலகண்ட நாயனார்
11. திருப்புத்தூர்
12. பாம்டன்சுவாமிகள்

1959 நவம்பர் திங்கள்—

1. கதிர்காமத்தைப் பற்றிய ஒரு புராணம்
2. சைவம்
3. வைஷ்ணவம்
4. மலைநாட்டுத் திருப்பதியநுபவம்
5. பவானி
6. இயற்பகை நாயனார்
7. சென்னிமலை
8. காரைமடை
9. வாமனாவதாரம்
10. பன்னிரு திருமுறைப் பயிற்சி
11. திருவோணம்

1959 டிசம்பசர் திங்கள்—

1. திருக்கேதீச்சரம்
2. அறநிலைய அலுவலகப்புதுக்கட்டிடத்திறப் விழா
3. அண்ணாமலையார் தீபம்
4. சைவம்
5. திருவெஞ்சமாக்கூடல்
6. இளையான்குடிமாற நாயனார்
7. கருவூர்த்தேவர்
8. வைஷ்ணவம்
9. நவதிருப்பதியநுபவம்
10. பரசுராமவதாரம்
11. உத்தமர் கோயில்
12. மலைநாட்டுத் திருப்பதியநுபவம்
13. கருவூர் ஆனிலை
14. திருமுருகன் பூண்டி

1960 சனவரி திங்கள்—

1. திருக்கோணமலை
2. நவதிருப்பதியநுபவம்
3. சைவம்
4. ஸ்ரீவைஷ்ணவம்

5. திருவாதிரை
6. மலைநாட்டுத் திருப்பதியநுபவம்
7. இராமாவதாரம்
8. அவிநாசி
9. மெய்ப்பொருள் நாயனார்
10. சாந்தலிங்க சுவாமிகள்
11. மருதமலை
12. பேரூர்
13. திருவெள்ளறை
14. திருவானைக்கா
15. மீராபாய்

1960 பிப்பரவரி திங்கள்—

1. ஆலய வழிபாட்டு முறை
2. சிவாய மலை
3. சைவம்
4. ஸ்ரீவைஷ்ணவம்
5. திருக்கடம்பந்துறை
6. நம்பி மூத்தபிரான்
7. விறன்மிண்ட நாயனார்
8. ஆனை நமதே
9. நவதிருப்பதிய நுபவம்
10. திருக்கடிகை
11. திருஈங்கோய்மலை
12. திருவெம்பாவை திருப்பாவை மாநாடுகள்
13. திருவெறும்பியூர்

1960 மார்ச் திங்கள்—

1. திருவிழாக்கள்
2. உய்யக்கொண்டான் மலை
3. திருப்பராய்த்துறை
4. திருப்பாண்டிக் கொடுமுடி
5. மலைநாட்டுத் திருப்பதியநுபவம்
6. அமர்நீதி நாயனார்
7. வைஷ்ணவம்
8. கிருஷ்ணாவதாரம்
9. திருநெடுங்களம்
10. நவதிருப்பதியநுபவம்
11. திருவுந்தியார்

1960 ஏப்ரல் திங்கள்—

1. திருச்செந்தூர்த் திருவிழா
2. திருவாலங்காடு
3. திருவுந்தியார்
4. பத்திராசல இராமதாசர்
5. எறிபத்த நாயனார்
6. கண்ணன் பிறந்தான்
7. வைஷ்ணவம்
8. நவத்திருப்பதியநுபவம்
9. திருமோகூர்
10. திருப்பாற்றுறை
11. திருவிளையாடற் பாமாலை

1960 மே திங்கள்

1. வைகாசி விசாகம்
2. திருவுந்தியார்
3. திருவல்லம்
4. ஏனாதிநாத நாயனார்
5. நவதிருப்பதியநுபவம்
6. கிருஷ்ணாவதாரம்
7. வைஷ்ணவம்
8. பள்ளிகொண்டை
9. மலைநாட்டுத் திருப்பதியநுபவம்
10. திருவிரிஞ்சிபுரம்
11. திருஅறையணி நல்லூர்
12. ஸ்ரீ கிருஷ்ணசைதன்யர்
13. ஆரம்பூண்டான்

1960 ஜூன் திங்கள்—

1. வைணவ ஆலயத் திருவிழாக்கள்
2. திருக்களிற்றுப்படியார்
3. வைணவம்
4. வாழைத்தோட்டத்து அய்யன்கோயில்
5. மலைநாட்டுத்திருப்பதிய நுபவம்
6. கிருஷ்ணாவதாரம்
7. கண்ணப்ப நாயனார்
8. நவத்திருப்பதியநுபவம்
9. திருஏடகம்
10. திருவலிதாயம்
11. திருவாதவூர்
12. துறைமங்கலம்—சிவப்பிரகாசர்
13. அழகிய மணவாளதாசர்

1960 ஜூலை திங்கள்—

1. திருவிடைவாய்
2. விசுவரூபம்
3. குங்கிலியக்கலய நாயனார்
4. மணவில் கூத்தன் திருப்பணிகள்
5. திருநீர்மலை
6. நவதிருப்பதியநுபவம்
7. வையை
8. ஆழ்வார்கள்பாடும் ஜகன்மோகன பாலன்
9. கங்கைகொண்ட சோழபுரம்
10. மலைநாட்டுத்திருப்பதியநுபவம்
11. திருஆப்பனூர்
12. செருத்துணைநாயனார் திருப்பதி
13. திருக்களிற்றுப்படியார்
14. திருவிசயமங்கை
15. பிரதோஷம்

1960 ஆகஸ்டு திங்கள்—

1. அம்பிகைக்குரிய சிறப்புத் திருவிழாக்கள்
2. வேறு அவதாரங்களில் விசுவரூபம்
3. மானக்கஞ்சார நாயனார்
4. ஜகன்மோகன வேணுகோபாலன்
5. பட்டினத்தார்
6. திருவொற்றியூர்
7. நவதிருப்பதி அநுபவம்
8. மலைநாட்டுத்திருப்பதியநுபவம்
9. திருக்களிற்றுப்படியார்
10. ஆதிஉலாவை வெளிப்படுத்திய சாத்தனார் எழுந்தருளியிருக்கும் பிடவூர்
11. திருப்பதியம் விண்ணப்பித்தல்
12. விநாயகர் திருவிளையாடல்

1960 செப்டம்பர் திங்கள்—

1. அவனன்றி ஓரணுவும் அசையாது
2. திருவான்மியூர்
3. மொக்கனிச்சுரம்
4. ஸ்ரீ கிருஷ்ணாவதார விசேஷங்கள்

5. திருப்பூவணம்
6. அரிவாட்டாய நாயனார்
7. ஓசூர் சந்திர சூடேசுவரர் கோயில்
8. திருக்களிவிறுப்படியார்
9. நவதிருப்பதியநுபவம்
10. நந்தனார் திருப்பதி
11. பகவன் யார்?
12. வேய்ங்குழலும் வேறு பாடல்களும்
13. கோயில்களில் திருமணங்கள் நடத்த வேண்டுகோள்
14. விநாயகர் திருவிளையாடல்
15. நாலாயிரப்பிரபந்தமும் கல்லெழுத்துக் களும்

மூன்றாவது ஆண்டு 1960 அக்டோபர் திங்கள்—

1. திருக்கோயில் இதழின் இரண்டாண்டுத் தொண்டு
2. பழனி கும்பாபிஷேகம்
3. திருக்களிற்றுப்படியார்
4. மலைநாட்டுத்திருப்பதியநுபவம்
5. நாலாயிரப்பிரபந்தமும் கல்லெழுத்துக் களும்
6. திருமுருகாற்றுப்படை
7. கண்ணனும் கோபியரும்
8. ஸ்ரீ கிருஷ்ணவதார விசேஷங்கள்
9. நற்கலைகளின் பொற்சிகரம்
10. ஆனாய நாயனார்
11. நவதிருப்பதியநுபவம்
12. திருக்கோயில் நிர்வாகத்தினர் — பணி யாளருக்கு ஓர் அறிக்கை
13. அறநிலையச் சட்டம்

1960 நவம்பர் திங்கள் :—

1. பழனி கும்பாபிஷேகமும் மண்டலா பிஷேகமும்
2. திருக்களிற்றுப்படியார்
3. தென்காசி
4. இலஞ்சி
5. மூர்த்திநாயனார்
6. திருக்கயிலாய ஞானவுலா
7. திருப்பைஞ்ஞீலி
8. சுசீந்திரம்
9. கண்ணன்—கோபியர்
10. நவதிருப்பதிஅநுபவம்
11. மலைநாட்டுத் திருப்பதியநுபவம்
12. அறநிலையச் சட்டம் (தொடர்ச்சி)

1960 டிசம்பர் திங்கள் :—

1. திரிசிபுரம் பாறையடி காமாட்சியம்மன் கோயில்
2. முருக நாயனார்
3. கரிவலம் வந்த நல்லூர்
4. சிலப்பதிகாரமும் வைணவமும்
5. நவதிருப்பதி அநுபவம்
6. சைவத்திருமுறைகளின் அடைவு
7. மலைநாட்டுத் திருப்பதியநுபவம்
8. நாகர்கோயில்
9. திருவையாறு ஒலோகமாதேவீச் சரக்கல் வெட்டு வரலாறு
10. வழுவூர்
11. சிவஞான போதம்
12. அறநிலையச்சட்டம் (தொடர்ச்சி)

1961 சனவரி திங்கள் :—

1. ஆலய நிர்வாகம்
2. சைவத்திருமுறைகளின் அடைவு (தொடர்ச்சி)
3. பெருஞ்சேரி
4. திருநாராயணபுரம்
5. தாராசுரத்து இராசராசேச்சுரம்
6. நவதிருப்பதி அநுபவம்
7. இரும்புதல் எனும் வைப்புத்தலம்
8. திருவண்பரிசாரம்
9. திருக்கடவூர்
10. சிவஞானபோதம்
11. திருமால் வழிபாடு
12. தவநெறி
13. உருத்திரபசுபதி நாயனார்
14. வேளிமலைக் குமாரகோயில்
15. மலை நாட்டுத்திருப்பதி அநுபவம்
16. அறநிலையச்சட்டம் (தொடர்ச்சி)

1961 பிப்ரவரி திங்கள் :—

1. திருநாவலூர்த் திருப்பணி
2. திருவாட்டாறு
3. தசாவதாரம்
4. நவதிருப்பதி அநுபவம்
5. திருவேள்விக்குடிக் கல்வெட்டு வரலாறு
6. ஸ்ரீருத்ராயயனம்
7. சிவஞானபோதம்
8. திருநாளைப் போவார் நாயனார்
9. அறநிலையச்சட்டம் (தொடர்ச்சி)

1961 மார்ச் திங்கள் :—

1. ஆலயத்தில் அர்ச்சகர்கள்
2. நவதிருப்பதி அநுபவம்
3. திருநாளைப்போவார்நாயனார் (தொடர்ச்சி)
4. பெரியபுராணத் திறவு
5. திருக்கோவலூர் திருவிக்கிரமப் பெருமாள் கோயில்
6. திருக்கோவலூர் வீரட்டேசுவரர் கோயில்
7. கடாரங்கொண்டான் கோயில் திருப்பணி விழா
8. திருவெம்பாவை-திருப்பாவை மாநாடுகள்
9. மலைநாட்டுத் திருப்பதியநுபவம்
10. திருவண்ணாமலைக் கல்வெட்டுச்செய்திகள்
11. பருவத்தில் வந்து பயனுற்ற பண்பன்
12. சென்னை கந்தகோட்டம்
13. அறநிலையச்சட்டம் (தொடர்ச்சி)

1961 ஏப்ரல் திங்கள் :—

1. திருக்குரங்குணின் முட்டம்
2. வெண்காடு மேவிய விகிர்தன்
3. திருவண்ணாமலைக்கல்வெட்டுச் செய்திகள்
4. சிவஞானபோதம்
5. திருக்குறிப்புத் தொண்ட நாயனார்
6. மலைநாட்டுத் திருப்பதியநுபவம்
7. நவதிருப்பதி அநுபவம்
8. திருக்கேதீச்சரம்
9. அறநிலையச்சட்டம் (தொடர்ச்சி)

1961 மே திங்கள் :—

1. கோயில் உள்துறை வெளித்துறை அலுவலர் கவனிக்கவேண்டியவை
2. சிவஞான போதம்
3. விழுமிய விமானம்
4. நவதிருப்பதி அநுபவம்
5. சண்டேசுவர நாயனர்
6. பத்மநாபபுரம்
7. சேக்கிழார் சுவாமிகள்
8. நால்வர் நான்மணி மாலை உரை
9. அறநிலையச்சட்டம் (தொடர்ச்சி)

1961 ஜூன் திங்கள் :—

1. மானம் அழிதலின் மாண்பு
2. திருநாவுக்கரசு நாயனர் வரலாறு
3. நவதிருப்பதி அனுபவம்
4. திருக்கோளிலிக் கல்வெட்டுக்கள்
5. மலைநாட்டுத் திருப்பதிய நுபவம்
6. சிவஞான போதம்
7. இரண்டு தாளச் சிற்பங்கள்
8. விராலி மலை
9. நால்வர் நான்மணி மாலை உரை (தொடர்ச்சு)
10. அறநிலையச் சட்டம் (தொடர்ச்சி)

1961 ஜூலை திங்கள் :—

1. திருவாசகத்தேன்
2. சிவஞானபோதம்
3. திருமெய்யம்
4. பந்தமும் வீடும்
5. திருக்கோகர்ணம்
6. கிடங்கில் திருத்திண்டீச்சரம்
7. கூடலழகர் கோயில்
8. நவதிருப்பதி அநுபவம்
9. திருநாவுக்கரசு நாயனர்
10. நால்வர் நான்மணி மாலை உரை (தொடர்ச்சி)
11. கன்னியாகுமரி மாவட்ட அறநிலையச் சட்டம்

1961 ஆகஸ்ட்டு திங்கள் :—

1. திருமுறை கண்ட வரலாறு
2. பிரான்மலை
3. சிவஞான போதம்
4. மலைநாட்டுத் திருப்பதியநுபவம்
5. அப்பர் உவமைகள்
6. நவதிருப்பதி அநுபவம்
7. திருவாலங்காட்டுக் கல்வெட்டு வரலாறு
8. திருநாவுக்கர நாயனர்
9. நால்வர் நான் மணி மாலை (தொடர்ச்சி)
10. கன்னியாகுமரி மாவட்ட அறநிலையச் சட்டம் (தொடர்ச்சி)

1961 செப்டம்பர் திங்கள் :—

1. திருநாகைக்காரோணம்
2. திருக்கண்ணங்குடி
3. திருநாவுக்கரசு நாயனர்
4. பிள்ளைத் தமிழில் முத்து
5. நவதிருப்பதி அநுபவம்
6. திருப்பாச்சிலாச்சிராமக்கல்வெட்டு வரலாறு
7. மலைநாட்டுத்திருப்பதிய நுபவம்
8. சிவஞானபோதம்
9. நாகை சௌந்தரிய ராஜப் பெருமாள் கோயில்
10. நால்வர் நான்மமணிமாலை (தொடர்ச்சி)

(211-ம் பக்கத் தொடர்ச்சி)

"The strength of a religion depends upon the focuses of mystical activity where its life constantly grows."

என ஓரிடத்தில் கூறுகிருர். சைவசமயத் தலைவர்கள் தெய்வ சக்தியை நிரூபிப்பதில் ஈடு எடுப்பற்றவர்களாய் விளங்குகின்றனர். அட்டமா சித்திக்கும் மேற்பட்டது நாயன்மார்கள் செய்த அற்புதச் செயல்கள். அட்டமாசித்திகளை ரசாயன முறையால் விஞ்ஞானிகள் சாதித்துவிடக்கூடும். ஆனல் நாயன்மார்கள் செய்த செயற்கருஞ் செயல்களைத் திருவருள் துணையாலன்றி வேறு எவ்வகையாலும் சாதித்தல் இயலாது. முதலையுண்ட பாலனை அழைத்தலும் என்பு பெண்ணுருவாத் தோன்றலும் போன்ற செயல்கள் பேருளதான் உலகை நடத்துகின்றன என்பதை நிரூபிப்பதற்காகவே செய்த செயல்களாகும். இவ்வாறு அருஞ்செயலாற்றிய சமய முதல்வர் நால்வரைத் தவிரவும் எண்ணற்ற தொண்டர்களைச் சைவசமயம் மனிதகுலத்திற் வழிகாட்ட உதவியுள்ளது. மக்களின் வாழ்க்கைகள் தகுதிக்கும் சூழ்நிலைக்கும் ஏற்பப் பல்வேறு வகைப்படுகின்றன. அவர்கள் அனைவர்க்கும் யாராவது ஒருவரது உயர்ந்த வாழ்க்கை முறை வழிகாட்டி வாழ்விக்க முடியாது. எனவே பல்வேறு வாழ்க்கை நெறிகளில் நின்று அவரவர்கள் நிலைக்கேற்பச் சீரிய கொள்கைகளைக் கடைப்பிடித்து நிறைவேற்றிய பெரியோர்கள் பலருடைய வரலாறு இன்றியமையாததாகின்றது. இந்தக் கருத்தோடு சிந்தித்தால் பெரியபுராணம் என்ற அருள் நூல்தான் முன்னே வந்து நிற்கின்றது. அந்நூலுட் காணப்பெருத வாழ்க்கை முறையே உலகப்பகுதியில் இல்லை எனலாம். காலத்தாலும் இடத்தாலும் நிலையாலும் வெவ்வேறு வகைப்பட்ட மெய்த்தொண்டர்கள் பல்லோருடையவும் உண்மை வரலாருக அமைந்துள்ள பெரியபுராணந்தான் உலக மக்கள் அனைவரையும் அரவணைத்துக்கொண்டு வழிகாட்டவல்லது.